யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 50 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூன் 01 2023




## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
Purchasing a Residential Property
Selling a Residential Property
Residential Mortgage Refinancing
Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
AUDIT
REVIEW ENGAGEMENT
NOTICE TO READER
BUSINESS ADVISORY
CONTROLLERSHIP SERVICES
CORPORATE TAXES
PERSONAL TAXES
FINANCIAL PLANNING
CRA AUDITS
PAYROLL
BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $99.99 +
OIL CHANGE $49.99 +
USED TIRE $59.99 +
BRAKES JOB $249.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
JRSAUTOTECH@HOTMAIL.CA

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copies
Inside 32 Pages, B&W 20lb
c $ 310.00
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 / Sq. Ft (c$ 34.99 / ft.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side, 10pt Card Stock
We print all kind of products
Call Us : Silver Print House - 647 712 1266

விளம்பரத்துக்கு அழையுங்கள்:
437.345.4203

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**ஓயாத புயலாக ஒடுக்கு முறையின் கோரத்தாண்டவம் விடுதலைப் பாதையில் எம்மைத் தள்ளிவிட்டது. இன அழிப்பின் தாங்கமுடியாத நெருக்குவாரங்களின் விளைவாக, நாம் ஒரு விதி செய்துகொண்டோம். எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கத் தீர்மானித்தோம், விடுதலைபெற்ற மனதிர்களாக வாழ்வதற்கு நாம் முடிவு செய்துகொண்டோம்.**






# சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர் கப்டன் மொறிஸ்

**"போர்முனையில் குருதி வெள்ளத்தில் நிற்கிறேன்." என்றான் அவன்தான் மொறிஸ்.**



1969 இல் பருத்தித்துறையில் “பரதன்“ ஆக அவதரித்த அவன், தனது பதினைந்தாவது வயதிலேயே தமிழீழ மண்ணிற்காய் தனது ஆசாபாசங்களைத் துறந்தான். அன்று முதல் “மொறிஸ்“ என்ற இயக்கப்பெயருடன் நடமாடத்தொடங்கினான். நான்கு ஆண்டுகள் இயக்கப்பணியில் ஈடுபட்டான். குறுகிய காலப்பகுதியில் அவன் ஆற்றிய சேவைகள் பல.

சிறீலங்கா இவாணுவம் தொண்டமானாற்றில் குடிகொண்டிருந்த காலம் அது. விடுதலைப் புலிகள் பெருந்தாக்குதல் ஒன்றை இராணுவ முகாம் மீது மேற்கொண்டனர். மொறிஸ் அத்தாக்குதலை முன்னின்று நடாத்தி வெற்றியும் கண்டான். இராணுவ வீரரை வெளியேற விடாமல் “சென்றி” போட்டுத் தடுத்து வெளிவந்தோரை விரட்டி அடித்த பெருமை இவனுக்குண்டு.


பூநகரி இராணுவ முகாமைத் தாக்கி வெற்றியும் கண்டு காயமும் பட்டான்.

முதல் முதலாக பருத்தித்துறையில் தம்பசிட்டி வீதியில் வைத்து ஆமி றக்கிற்கு கிரனைட் வீசி ஆமியைக் கிலி கொள்ளச் செய்த துணிவும் இவனுக்குண்டு. ஆமி குடி கொண்டிருக்கும் இடங்களுக் கெல்லாம் சென்று அவர்கள் இருப்பிடங்களைச் சுற்றி சக்கை தாட்டு விட்டு வருவதில் இவனுக்கு நிகர் இவனே தான்.

1987 ஆம் ஆண்டு யூலை 29ந் திகதி இந்தியப்படை இலங்கை மண்ணில் காலை வைத்தது. அமைதிக்காக வந்த இந்தியப்படை புலிகளைத் தேடிக்கண்டு பிடித்துக் கொல்லும் பணியில் ஈடுபட்டது. வடமராட்சியில் தனக்கென ஒரு இடம் பிடித்துக்கொண்ட மொறிஸைத் தேடி இந்தியப் படை வெறிகொண்ட நாய் போல் அலையத் தொடங்கியது.

மொறிஸோ இந்திய ஆமியின் கண்ணெதிரில் அகப்பட்டும், துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து மாயமாய் மறைந்தான். அவ்ன சாதாரண துப்பாக்கி வேட்டுகளுக்கு அகப்படுபவன் அல்ல.

ஆறு தடவைகள் இந்தியப்படைகளினால் சுற்றிவளைக்கப்பட்ட போதும் கலங்காது நின்று போராடி வெற்றியும் கண்டான்.






அவனது நேரடி மோதலுக்கு ஈடுகொடுக்க முடியாது பலத்த இழப்புகளோடு தப்பியோடிய இந்தியப்படையினர் பதவி இறக்கப்பட்டனர். “மொறிஸ்” என்ற நாமம் கோட்டாலே நடுங்கினர் உலகின் நாலாவது பெரும் இராணுவத்தின் சிப்பாய்கள். அவன் நாமம் சொன்னவர்களை அடித்தனர், உதைத்தனர், துன்புறுத்தினர்.

அவன் பெற்றோரை, உடன்பிறப்புக்களை, மைத்துனரை இராணுவ முகாம் வரை கொண்டுசென்று வதைத்தனர். தமிழீழத்தில் அவன் வைத்த நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போயிற்று.

தேடுதல் வேட்டைக்கு நடுவிலும் அவன் பணிகள் தொடர்ந்தன. இயக்க வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவன் செய்துவிட்ட பணிகள் கொஞ்சநஞ்சமல்ல. எண்ணிலடங்காது. சாதாரண படைவீரனாகச் சேர்ந்த அவன் கப்டன் பதவி வரை உயர்வு பெற்று, மிக மிக ஆபத்தான சூழ்நிலையில் மக்கள் மத்தியில் நடமாடி, இயக்க வளர்ச்சிக்காற்றிய சேவைகள் மதிப்பிடற்கரியதாகும்.

வெற்றிகள் பலவற்றை ஈட்டி, அளப்பரிய சாதனைகள் பலபுரிந்து, மக்கள் மனதில் அழியாத இடம்பெற்றுவிட்டான் கப்டன் மொறிஸ். நாட்டு மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானான். தன் சகாக்களை அன்புடன் நேசிப்பதில் அவனுக்கு நிகர் அவனேயானான்.

இயக்கத்திலும், இயக்க உறுப்பினர் மீதும் அவன் கொண்டிருந்த மட்டற்ற அன்பையும் விசுவாசத்தையும், கடைசிநேரம் வரைக்கும் அவன் செய்த செயல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

குழந்தைகளும் அவனை அறிந்து புரிந்துகொண்டு அன்பைச் செலுத்தும் வகையில் நாட்டுமக்களுடன் உவாடினான்.

M.O (Mines Operator) என மக்களால் செல்லமாக அழைக்கப்பட்டான்.

பெரியவர், சிறியவர், ஏழை, பணக்காரன், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகளைக் கருதாது எல்லோரோடும் அன்பாகப் பழகினான். மக்களும் அவனை நேசித்தனர், அவனும் மக்களை நேசித்தான்.

ஆனாலும் எட்டப்பர் கூட்டம் தம் காட்டிக் கொடுக்கும் வேலையைச் செய்யத் தவறவில்லை. காட்டிக் கொடுக்கும் எட்டப்பரை இல்லாது ஒழித்து அழிக்க வேண்டுமென அடிக்கடி சொன்னான். சொன்னதை அவன் செயற் படுத்தி முடிக்கமுன் எட்டப்பர் சூழ்ச்சிக்கு அவனே பலியானான்.


ஒரு நாள்...

1989ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி.

அதிகாலை.

மொறிஸ் முதல் நாள் இரவு நீண்ட நேரமாகத் தன் நண்பர்களுடன் சில திட்டங்கள் பற்றிக் கதைத்து விட்டு நேரங்கழித்தே நித்திரைக்குச் சென்றான்.......காலை எழுந்ததும் காலைக் கடன்களை முடித்து, குளித்து தன் கடமைக்குத் தயாராகினான். சாப்பாட்டுக்கு வேறு இடத்துக்குச் செல்ல வேண்டும். அதற்கு முனனர், இயக்க சம்பந்தமான பரிசோதனை ஒன்றில் ஈடுபடுகின்றனர் மொறிஸும் அவனுடைய ஏழு சக தோழர்களும்.

அந்த நேரத்தில்தான் அவன் இந்திய அமைதிப்படையினரால் சுற்றி வளைக்கப் படத் தொடங்கியிருந்தான். தான் ஒரு எட்டப்பனால் காட்டிக் கொடுக்கப் பட்டு விட்டேன் என்பதோ, தான் அந்த நேரத்தில் சுற்றி வளைக்கப் பட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதோ அவனுக்குத் தெரியாது. அவன் அதை அந்த இடத்தில், அந்த நேரத்தில் துளியும் எதிர்பாராது தன் கடமையில் கவனாமாயிருந்தான்.



சூழ்ச்சியின் விளைவு...
500க்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் அவன் இருந்த வீடு இருந்த பகுதியை வரைபடத்துடன் சுற்றி வளைத்திருந்தனர். அவன் மீது நேசமும் பாசமும் கொண்ட பருத்தித்துறை வாழ் மக்கள், அவனுக்கு இந்தத் தகவலைத் தெரிவிக்க ஓடி வந்தனர். அவன் விடயத்தில் பலமுறை தோல்வியைத் தழுவிக் கொண்ட இந்தியப் படையினர் ஓடி வந்த மக்களை மேற் கொண்டு நகர விடாது அவ்விடங்களிலேயே அதாவது தெருவீதியிலேயே இருத்தி விட்டனர்.
சுற்றியுள்ள காணிகள், வீடுகள், வீதிகள் எல்லாம்



இந்தியப்படையின் சுற்றிவளைப்பு, எந்தப் பக்கம் பார்த்தாலும் இந்தியப் படைவீரர்கள். நடுவில் தனது பணியில் கப்டன் மொறிஸ், அவனது சகாக்களுடன்.
சூழ்சியின் விளைவால் தான் சுற்றிவளைக்கப் பட்டிருப்பதையும், தன்நிலைமையையும் அறிந்த மொறிஸ் சிறிதும் கலங்கவில்லை. அஞ்சி ஓடவில்லை. தனது மெய்ப்பாது காவலலனையும், காவல் கடமைக்குப் பொறுப்பான போராளிகயையும் மட்டும் தன்னுடன் நிற்கச்செல்லிவிட்டு இந்தியப்படையை நோக்கிச் சுட்டவாறே
“நான் ஒருகை பார்த்துவிட்டு வருகிறேன். நீங்க ஓடுங்கடா.” என்று கத்தினான்.
அவன் கட்டளைப்படி, மிகுதி ஐவரும் அவன் சொன்ன பாதை வழியே சுட்டுக் கொண்டு ஓடினர்.
அதன் பின் மொறிஸ் 3 இந்தியப் படையினரைச் சுட்டு வீழ்த்தினான்.
காவல் போராளி சிறீதரன் (வெள்ளை) சுட்டுவீழ்த்தப்பட்ட போதும் தொடர்ந்து போராடினான்.
இந்தியப்படையினா் சரமாரியாக சுட்டு சூடு அனைத்திற்கும் தப்பித் தப்பிப் பாய்ந்தபடி அவர்களைச் சுட்டவாறே அடுத்த காணிக்குள் பாய முற்பட்ட வேளையிலேயே பின்காணி முழுவதும் இந்தியப்படை நிற்பதை அவதானித்தான். இந்தநிலையிலும் கூட அவன் கலங்கவில்லை. தொடர்ந்து அவர்களை நோக்கிச் சுட்டுக்கொண்டும், அவர்களின் சூட்டிலிருந்து தப்பிக்கொண்டும் இருந்தான்.
துப்பாக்கி ரவைகளினால் அவனை வீழத்தமுடியாதென்பதை உணா்ந்த இந்தியப்படையினா் அவன் நின்ற இடத்தைக் குறிபார்த்து பசூக்கா ஷெல்லும் அடித்து, கிறனைட்டையும் எறிந்தார்கள். ஷெல்துண்டுகள் அவன் மார்பையும் தலையையும் பதம் பார்க்க கரும்புகை மண்டலத்துக்குள், இரத்தவெள்ளத்தோடு சமாதியாகினான் மொறிஸ். பின் அவனின் மெய்ப்பாதுகாவலன் லெப். ரம்போ (ஜெகேசன்) இன் உடலையும் சல்லடையாக்கினா் இந்தியப் படையினா்.
மாவீரா்களான மொறிஸ், ரம்போ, வெள்ளை மூவரையும் இழந்து நாடே அழுதது.
மொறிசை விண்ணுலகுக்கு அனுப்பிய இந்தயிப் படையினருக்கு பதவி உயர்வாம்! விருந்தாம்! தங்கப்பதக்கமாம்.


லெப். ரம்போ


வீரவேங்கை சீரி

மொறிஸின் தம்பி மயூரன் காட்டில் தலைவர் அருகில் நின்று -

-திலீபன் - எரிமலை ஆனி 1993

குறிப்பு: மொறிஸின் தம்பி மயூரன் காட்டில் தலைவர் அருகில் நின்று பின்னர் பூநகரிச் சமரில் 11.11.93 இல் மண்ணுக்கு வித்தானான்.


**கப்டன் மொறிஸ்**

கப்டன் மொறிஸ் (செப்டம்பர் 12, 1969 - மே 1, 1989, மேலைப்புலோலியூர், ஆத்தியடி, பருத்தித்துறை) என்ற புனைபெயரைக் கொண்ட பரதரராஜன் தியாகராஜா ஒரு விடுதலைப் புலி போராளியாவார். இவர் தனது பதினைந்தாவது வயதில், 1984இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து, ஐந்து ஆண்டுகள் இயக்கப் பணியில் ஈடுபட்டார். குறுகிய காலப் பகுதியில் அளப்பரிய இயக்கப் பணிகளாற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் பருத்தித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர்ஜ1ஸ ஆனார். மே 1, 1989 இல் இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்.

இவர் தியாகராஜா மற்றும் சிவகாமசுந்தரி தம்பதிகளின் ஆறாவது புதல்வன். இவரது தந்தை சபாபதிப்பிள்ளை தியாகராஜா இலங்கையின் புகையிரதநிலைய அதிபராக இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் பல வருடங்களாகக் கடமையாற்றியவர். இவரது அண்ணன் பிறேமராஜன் (தீட்சண்யன்) கவிஞர் மற்றும் ஆசிரியர் ஆவார். அவர் புலிகளின் குரல் வானொலிக்கு கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தவர். இவரது தம்பி மயூரன், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராவார். மயூரன் தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் நவம்பர் 11, 1993 இல் வீரமரணமடைந்தார்.

மொறிஸ் தனது கல்வியை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும், புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலையிலும் கற்றார்.

1984 இல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். ஜ2ஸ 1983 இல் தென்னிலங்கையில் நிகழ்ந்த தமிழர் படுகொலைகளும் அதனைத் தொடர்ந்து போராளிகளின் படகோட்டியாக இருந்த மறைந்த பொலிகண்டி கணேஸ்மாமா உடனான சந்திப்பும் இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையக் காரணமாகக் கருதப்படுகிறது.



ஆரம்ப காலங்களில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் மற்றும் போராளிகளின் போர்க் கடமைகளுக்கு உதவுதல் போன்ற பணிகளை மேற்கொண்டார். பருத்தித்துறை,



தம்பசெட்டி வீதியால் சென்று கொண்டிருந்த சிங்கள இராணுவத்தினரின் வாகனத்திற்கு கிரனைட் எறிந்து அவர்களின் ரோந்து நடவடிக்கையைத் தடை செய்ததால்,மேலிடத்தின் உடனடிக் கவனத்துக்கு உள்ளாகி சில முக்கிய பதவிகள் மொறிஸிடம் கையளிக்கப்பட்டது.

ஆற்றிய முக்கிய பணிகள்
1985 இல் தொண்டைமானாற்றில் போராளிகளின் காவல் தரிப்பில் கண்விழித்துக் காவலில் ஈடுபட்டு இராணுவம் கடல் வழியாக உள்ளே நுழையாமல் எதிர்த்தாக்குதல் நிகழ்த்தும் கடமைகளில் ஈடுபட்டிருந்தார்.
அந்தக் காலகட்டத்திலேயே போராளிகளுக்கான விசேட இராணுவப் பயிற்சி பெற்று முதற் தடவையாக பூநகரித் தாக்குதலில் பங்கேற்று வெற்றி கண்டதுடன் நெருப்புக் காயங்களுக்கு ஆளாகி யாழ் மருத்துவமனையில் சிகிச்சையும் பெற்றார்.
1986 இல் பருத்தித்துறை, கலட்டிப் பகுதியில் நியாய விலைக் கடை ஆரம்பித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரால் ஊர்மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை வழங்கியதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்புக்குத் தேவையான பணத்தைத் திரட்ட உதவிகள் புரிந்தார்.
1987 இல் பருத்தித்துறை பிரதேசப் பொறுப்பாளர் பதவி வழங்கப்பட்டது. அப்பிரதேச மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதுவும் சிங்கள இராணுவத்தினர் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தும் கொடுமைகளிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றுவதும் இவரின் முக்கிய பணியாக அமைந்தது.
அதே சமயம் போர்ச்சூழலினால் நீதி மன்றங்கள் இயங்காமல் இருந்த காரணத்தினால் அமைப்பு சார்பான கிராம நீதிமன்றங்களை நிறுவி, மக்களின் பிரச்சனைகளை இலகுவாகத் தீர்த்து வைக்கும் பணியிலும் அவர் பெரு வெற்றி கண்டிருந்தார்.
1988 இல் மொறிஸ் வடமராட்சி மக்களின் அன்பிற்கும் பெருநம்பிக்கைக்கும் ஆளாகியதுடன் 1987 இல் வந்திறங்கிய இந்திய இராணுவத்தினரின் பெரும் தேடுதலுக்கும் ஆளானார். இதனால் 1987 - 1988 காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினருக்கு எதிரான பல தாக்குதல்களை நிகழ்த்தி பெரு வெற்றி கண்டிருந்தார்.
இக் காலகட்டம் மக்களுக்கும், போராளிகளுக்கும் பெரும் சோதனையான காலம் என்பதால் அநேக போராளிகளின் வாழ்வு காடுகளுக்குள் நகர்ந்தது. ஆனால் அந்த இக்கட்டான நிலையிலும் பிரதேசப் பொறுப்பாளர்கள் அந்தந்த ஊர்களிலேயே இருந்து பணி புரிய வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. அது அவர்களுக்கு மிகக் கடுமையான காலமாகவே அமையப் பெற்றிருந்தது. உணவும், உறையுளும் அற்ற கொடுமையான வாழ்வை மொறிஸ் உம் அணுவணுவாய் அனுபவித்தார்.

1989, மே 1ம் நாள், மந்திகையில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவம், பருத்தித்துறை துறைமுகத்தடியில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவம், மற்றும் வியாபாரிமூலையில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவம் - இம் மூன்று இராணுவமும் எட்டப்பர் கூட்டத்தினரின் உதவியுடன் மும்முனைச் சுற்றிவளைப்பில் ஈடுபட்டு மொறிஸைப் பிடிக்க வேண்டுமென்ற நோக்கில் தந்திரமான தாக்குதலை நிகழ்த்திய வேளை மொறிஸ் தனித்து நின்று போராடி... இராணுவ உயர்அதிகாரிகள் மூவரைச் சுட்டு வீழ்த்தி விட்டு ஈற்றில் பசூக்கா ஷெல்லின் தாக்குதலில் எரிகாயங்களுக்கு உள்ளாகி, அதே வேளை சயனைட்டும் அருந்தி வீரமரணம் அடைந்தார்.




# 38ஆம் ஆண்டு குமுதினி படுகொலை நினைவேந்தல்!

மே 15, 2023

குமுதினி படுகொலையின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றைய தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவில் இடம்பெற்றது.

குமுதினி படகில் படுகொலை செய்யப்பட்ட 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவாலய வளாகத்தில் நினைவேந்தல் இடபெற்றது.
காலை 8.15 மணிக்கு நெடுந்தீவு மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும், சமநேரத்தில் மாவிலி துறைமுகத்தில் அமைந்துள்ள வீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மா சாந்தி வேண்டி சிறப்பு பூஜையும் இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு குமுதினி படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றது.

நினைவுத் தூபிக்கான நினைவுச் சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத் துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந்தீவு ருத்திரனின் குருதியின் குமுறல்கள் என்ற கவிதை



நூலும் வெளியிடப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது

இந்நிகழ்வுகளில் நெடுந்தீவு பகுதி மதத்தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினி படகு பயணித்துக் கொண்டிருந்த வேளை

இலங்கை கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள் பெண்கள் முதியவர்கள் என 36 பேரை வெட்டி படுகொலை செய்யப்பட்டனர்.

# நல்லூர் சங்கிலியன் தோரண வாயில் இறுதிக்கட்ட புனரமைப்புப் பணிகள் நிறைவுறும் நிலையில்!

மே 15, 2023

நல்லூர் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்புப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அண்மையில் நீர் விசிறி தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் நல்லூரில் உள்ள சங்கிலியன் தோரண வாயிலானது யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், மரபுரிமைச் சின்னங்கள் அழிந்து போகாமல், அவற்றை பாதுகாத்து, எமது எதிர்கால சந்ததியினருக்கு அச்சின்னங்களை ஒப்படைக்கவேண்டிய தார்மீகக் கடமையுணர்வோடு யாழ்ப்பாணம் மரபுரிமை மையம் (து யு கு கு யே உ நு சு ஐ வு யு பு நு ஊ நு வே நு சு) முன்னெடுக்கப்படும் முதலாவது செயற்றிட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



# முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவாக யாழில் சுவரொட்டிகள்!

மே 16, 2023

14 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை வாரத்தை நினைவுகூரும் வகையில் தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையால் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
இலங்கையில் தமிழ்மக்கள் அனுபவித்த இன்னல்களையும், அடக்குமுறைகளையும் வெளிப்படுத்தும் படத்துடன் மே-18 எனக் குறிப்பிடப்பட்டு அதன் கீழ் தமிழர்கள் வலி சுமந்த வாரம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.






# அரசியல் கைதியான சி. ஆரூரன் நிரபராதி என விடுபிப்பு!

மே 16, 2023

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது, 2006 ஆம் ஆண்டு பித்தல சந்தி பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சிவலிங்கம் ஆரூரன் அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு, புதிய மெகசின் சிறையில் அடைக்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க அவரை விடுதலை செய்தார்.

கொலைக்கு சதி செய்ததாக 13 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்ததுடன், பிரதி வாதிக்கு எதிராக 6 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

43 வயதான ஆரூரன், 2004 ஆம் ஆண்டு மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பைக் கற்கும் போது கைது செய்யப்பட்டார்.

சிறைவாசத்துக்குப் பிறகு தனது எழுத்துத் திறனை வளர்த்துக் கொண்ட ஆரூரன், தமிழில் 7 படைப்புகளையும் ஆங்கிலத்தில் ஒரு படைப்பையும் எழுதியுள்ளார்.



இந்நிலையில், சிவலிங்கம் ஆரூரன் எழுதிய 'ஆதுரசாலை' என்ற தமிழ் நாவலுக்கு 65 ஆவது அரச இலக்கிய விருது வழங்கும் விழாவில் சிறந்த நாவலுக்கான விருது வழங்கப்பட்டது.

# யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரிய முள்ளிவாய்க்கால் ஊர்திப் பவனி!

மே 17, 2023

14 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையை நினைவுகூரும் வகையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் அம்பாறையில் ஆரம்பமான தமிழினப் படுகொலைக்கு நீதி கோரிய முள்ளிவாய்க்கால் ஊர்திப் பவனி  திங்கட்கிழமை இரவு யாழ்.நகரை வந்தடைந்தது.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை (16.05.2023) யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குமான தமிழினப் படுகொலைக்கு நீதி கோரிய முள்ளிவாய்க்கால் ஊர்திப் பவனி காலை-08.30 மணியளவில் ஆரம்பமானது.

காலை-09 மணியளவில் குறித்த ஊர்திப் பவனி கொழும்புத்துறை இறங்குதுறையைச் சென்றடைந்தது.அங்கு சுடரேற்றி மலர்தூவி மக்கள் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் ஞாபகார்த்தமாக யாழ். முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தை காலை-09.45 மணியளவில் மேற்படி ஊர்திப் பவனி வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து நினைவாலயத்தில் மூத்த போராளியும், தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் தலைவருமான பொன்மாஸ்டர் ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து ஊர்திப் பவனி புறப்பட்டு நேற்றுக் காலை-11 மணியளவில் அல்லைப்பிட்டியைச் சென்றடைந்தது. அங்கு பொதுமக்கள் பலரும் ஈவிரக்கமின்றி இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அல்லைப்பிட்டி பிலிப் மேரியார் ஆலய முன்றலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி ஆலய அருட்தந்தை ஜே.எக்ஸ்.பேர்ணாட் அடிகளார் ஈகைச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த ஊர்திப் பவனி அங்கிருந்து புறப்பட்டு முற்பகல்-11.15 மணியளவில் சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தைச் சென்றடைந்து அங்கும் உணர்வு பூர்வ அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊர்திப் பவனி அங்கிருந்து புறப்பட்டு வேலணை, புளியன்கூடல் ஆகிய பகுதிகளுக்கும் சென்றடைந்து பின்னர் யாழ்.நகர் ஊடாக கந்தர்மடம்,



திருநெல்வேலி, கோண்டாவில், இணுவில், சுன்னாகம், தெல்லிப்பழை உள்ளிட்ட யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்றது.

தமிழினப் படுகொலைக்கு நீதி கோரிய முள்ளிவாய்க்கால் ஊர்திப் பவனி செல்லுமிடங்கள் தோறும் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தியதுடன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் இதன்போது பல நூற்றுக்கணக்கான மக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி மக்களின் எண்ணங்களை வெளிக்கொண்டுவர முடியும்!

**பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன்**

மே 17, 2023

இலங்கைவாழ் தமிழ்மக்கள் கடந்தகால அரசாங்கங்களுடன் சுமார் 70 வருடங்களுக்கும் மேலாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். எனவே இப்போது தமிழ்மக்களின் தேவை என்ன என்பது குறித்து அரசாங்கம் அறிந்திருக்கவேண்டும்.

என்று சுட்டிக்காட்டியுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் மனதிலுள்ள உண்மையான எண்ணங்களை வெளிக்கொணரமுடியும் என்பதுடன், அவை பெரும்பான்மையின மக்களுக்கு உவப்பற்றதாக இருக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளின் நீட்சியாக அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தரப்புக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் திங்கட்கிழமை (15) நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, மாகாணசபைகளைத் தற்காலிகமாக நிர்வகிக்கும் வகையிலான இடைக்கால நிர்வாகமுறைமை தொடர்பில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரனால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டது.

'இலங்கைவாழ் தமிழ்மக்கள் கடந்தகால அரசாங்கங்களுடன் சுமார் 70 வருடங்களுக்கும் மேலாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். எனவே இப்போது தமிழ்மக்களின் தேவை என்ன என்பது குறித்து அரசாங்கம் அறிந்திருக்கவேண்டும்.

இந்நாட்டில் சுமார் 3000 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் தமிழ்மொழியைத் தொடர்ச்சியாகப் பேசுபவர்கள் என்ற ரீதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்கள் சர்வதேச பிரகடனங்களின் சரத்துக்களுக்கு அமைவாகத் தாம் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நன்கறிவர்.

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துத் தமிழ் கட்சிகளும் அரசியலமைப்பின் ஊடாக சமஷ்டி முறையிலான பரவலாக்கத்தையே வலியுறுத்திவந்திருக்கின்றன. இதுகுறித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் மனதிலுள்ள உண்மையான எண்ணங்களை வெளிக்கொணரமுடியும் என்பதுடன், அவை பெரும்பான்மையின மக்களுக்கு உவப்பற்றதாக இருக்கக்கூடும்.

அரசாங்கம், அரச அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினரால் எமது மக்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டுவரும் ஒடுக்குமுறைகள், மீறல்கள் என்பன அரசுக்கு எதிராகத் திரும்பக்கூடும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மாகாணசபைத்தேர்தல்கள் நடத்தப்படுவதுடன் அரசியலமைப்பின் ஊடாக தமிழ்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்கப்பெறவேண்டும்' என்று விக்கினேஸ்வரன் அவரது யோசனையில் வலியுறுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இவ்விடயத்தில் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை மேற்கோள் காண்பிக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ள அவர், 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்து விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக மாகாணசபை முறைமையுடன் தொடர்புடைய 13 ஆம் திருத்தத்தின் சரத்துக்களும் மாகாணசபைகள் சட்டமும் மாகாணசபைகள் தனித்த கட்டமைப்புக்கள் அல்ல, மாறாக அவை மத்தியின் ஓரங்கமே என்பதைக் காண்பிப்பதாகக் குறிப்பிட்டுள்ள விக்கினேஸ்வரன், ஆளுநர் மற்றும் அவரது அதிகாரங்களுடன் தொடர்புடைய சரத்துக்கள், மாகாணசபைகளின் செயற்பாடுகளில் அவர் இயங்குநிலையிலுள்ள ஓர் முக்கிய உறுப்பினர் என்பதை வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பொருளாதார நெருக்கடி நிலவும் தற்போதைய சூழ்நிலையில் மாகாணசபைகள் முறைமை சுமுகமாகவும், அர்த்தமுள்ள விதத்திலும் இயங்கவேண்டுமானால் சட்டரீதியாகவும் நிர்வாகரீதியாகவும் பல்வேறு விடயங்களைச் செய்யவேண்டியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 10 வருடகாலமாக மாகாணசபைத்தேர்தல்கள் தாமதப்படுத்தப்பட்டுள்ள நிலையில், குறைந்தபட்சம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கேனும் தாமதமின்றி மாகாணசபைத்தேர்தல்களை நடத்தவேண்டும் வலியுறுத்தியுள்ள விக்கினேஸ்வரன், இருப்பினும் இன்னும் சில மாதங்கள் தேர்தலைத் தாமதிப்பது பெரிய விடயமல்ல என்றும், ஏனெனில் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக அதுசார்ந்த சில முக்கிய விடயங்களைச் செய்துமுடிக்கவேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மாகாணசபைகளை நிர்வகிக்கக்கூடிய தற்காலிக நிர்வாகசபையொன்றை நிறுவுவதற்கான யோசனையை முன்வைத்துள்ள அவர், அந்தச் சபை யாரை உள்ளடக்கியிருக்கவேண்டும் என்றும், எத்தகைய அடிப்படையில் அமையவேண்டும் என்றும் விளக்கமளித்துள்ளார்.

# நந்திக்கடலில் மலர் வணக்க நிகழ்வு!

மே 18, 2023

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சி முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரனின் தலைமையில் இன்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை நந்திக்கடலில் உயிர் நீத்த உறவுகளுக்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மசாந்திவேண்டி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த அஞ்சலியின் பின்னர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்



சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல் ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கரைதுறைப்பற்று தொகுதிக் கிளை செயலாளர் அ.ஜெ. பீற்றர் இளஞ்செழியன்,  தமிழரசுக்கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அம்பாறையில் முள்ளிவாய்க்கால் நினைவுப் புகைப்படக் கண்காட்சிப்படுத்தல்!

மே 17, 2023

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒன்றியம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடாத்தும் மே 18 முள்ளிவாய்க்கல் நினைவு வாரத்தை முன்னிட்டு பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய நுழைவாயில் பிரதான வீதிக்கு அருகில் முள்ளிவாய்க்கால் பேரவலத்து நினைவுப் பதாதைகள், புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

வருகை தந்த பாடசாலை மாணவர்கள் நினைவு புகைப் படங்களை பார்வையிட்டதுடன் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மாணவர்கள் மத்தியில் நினைவு உரையை நிகழ்த்தினார்.

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு இடம் நிகழ்வுகளுக்கு தமிழராய் இணைவோம் தமிழரின் பேரவலம் உணர்வோம் ஆத்ம சாந்திப்



பிரார்த்தனைகள் செய்வோம் திரண்டு வாருங்கள் என பொதுமக்கள், ஆலய நிருவாகங்கள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், ஆட்டோ சங்கத்தினர், சமூக அக்கறையாளர்கள் அரசியல்



கட்சி பேதங்களுக்கப்பால் அனைத்து அரசியல்வாதிகளையும் அன்புரிமையுடன் இணையுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மன்னாரில் பரிமாறல்!

மே 17, 2023

தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறல் நிகழ்வு (17) புதன்கிழமை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம் பெற்றது.

இதன் பொழுது பொது மக்கள், வர்தகர்கள், சாரதிகள் உட்பட அனைவருக்கும் முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கிவைக் கப்பட்டது .

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழரசு கட்சியின் முன்னால் நகர சபை,பிரதேச சபை உறுப்பினர்கள் இளைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அதே நேரம் மன்னார் தோட்டவெளி பகுதியிலும் முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு தோட்டவெளி பகுதி மக்களால் ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.

அருட்தந்தைகள் பொது மக்கள் உட்பட பலரும் இணைந்து உணர்வு பூர்வமாக குறித்த நிகழ்வில் கலந்து



கொண்டனர்.

# முள்ளிவாய்க்கால் என்பது எங்களுடைய வாழ்வியலாக மாறியுள்ளது!

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடகிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத்தலைவருமான அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங்**

மே 17, 2023

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு இடம் மட்டுமல்ல. எங்களுடைய வாழ்வியலாக மாறியிருக்கின்றது என தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவரும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் வடகிழக்கு பொதுக்கட்டமைப்பின் இணைத் தலைவருமான அருட்பணி சின்னத்துரை லியோ ஆம்ஸ்ரோங் தெரிவித்தார்.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் தொடர்பு கொண்டு வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பதினான்கு ஆண்டுகளாகி போன 2009 ஆம் ஆண்டின் இன அழிப்பின் நினைவு தினத்தை நாளைய தினத்திலே முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் முற்றத்திலே நினைவு கூரப்பட இருக்கின்றது.

கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக நிகழ்ந்தது போல இந்த ஆண்டும் சரியாக காலை 10.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாக இருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு இடம் மட்டுமல்ல. எங்களுடைய வாழ்வியலாக மாறியிருக்கின்றது. எங்களுடைய தமிழ் இனத்தின் விடுதலைக்கான ஒரு புள்ளியாகவும் இந்த இடம் இருக்கிறது.


இந்த மண்ணிலே படுகொலை செய்யப்பட்ட அத்தனை மக்களையும் நாங்கள் நினைவு கூர கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

ஆகவே இந்த நினைவேந்தலை பங்கெடுக்க தமிழ் இன உணர்வாளர்கள் அனைவரையும் பொதுக்கட்டமைப்பின் சார்பாக அழைத்து நிற்கின்றோம்.

இந்த நிகழ்விலே பங்கெடுக்க முடியாதவர்கள் உங்களுடைய இல்லங்களில் மாலையிலே நீங்கள் விளக்கேற்றி இறந்தவர்களுடைய ஆன்மாவிற்காக மன்றாடும்படி கேட்டு நிற்கின்றோம்.

இறுதி யுத்த காலங்களிலே மக்களுக்கான வாழ்வுக்கு அல்லது உயிரைப் பிடித்துக் கொள்ள காரணமாக இருந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை நீங்கள் உங்களுடைய இல்லங்களிலே சமைத்து அதனை அருகில் உள்ளவர்களோடு பகிர்ந்து கொள்ள அழைக்கிறோம்.

இவ்வாறான செயற்பாடுகளை, நினைவேந்தல்களை, கஞ்சி வழங்குதல்களை உங்களுடைய இல்லங்களில் மட்டுமல்லாது, ஆலயங்களிலும், சமூக அமைப்புகளிலும், வீதிகளிலும் இவற்றை முன்னெடுக்குமாறு அத்தனை மக்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.



இதனை ஏன் நாங்கள் செய்கிறோம் என்பதை எங்களுடைய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கும்படியாகவும் அன்புரிமையோடு கேட்டுநிற்கின்றோம்.

இந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு காரணமான அத்தனை பேரும் தண்டிக்கப்பட வேண்டும் என்கிற அந்த ஒருமித்த குரலில் மக்களினுடைய எண்ணங்கள் அனைத்தும் நிறைவேற கூடிய மக்களுக்கான நிர்வாக அல்லது எந்த தாகத்தோடு நாங்கள் போராடினோமோ அந்த தாகங்கள் நிறைவேறும்படியாக நாங்கள் எம்மை அர்ப்பணிப்பதும் அவசியமாக இருக்கிறது.

இன்றும் இடம்பெற்று வருகின்ற பல்வேறு வகையான இன அழிப்பு விடயங்கள், பௌத்தமயமாக்கல்கள், இவற்றுக்கு எதிராகவும் நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்பது அவசியம் என்பதை இந்த வேளையிலே உணர்த்தி இதிலே அனைவரையும் பங்கெடுக்குமாறு அன்போடு கேட்டுநிற்கின்றோம்.

# யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறல்!

மே 17, 2023

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி பால் பண்ணை அருகாமையில் அமைந்துள்ள முகாமைத்துவ பீடத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் செவ்வாய்க்கிழமை (16) மதியம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் முகாமைத்துவ பீட மாணவர் ஒன்றியம் இணைந்து குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பொழுது முள்ளிவாய்க்கால் திட்டமிடப்பட்ட இனப் படுகொலையில் உயிர்நீத்த உறவுகளிற்கான அஞ்சலி மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டதோடு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் மூன்று மொழிகளிலான துண்டுபிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

இதன்பொழுது அதிகளவான சிங்கள மாணவர்களும் நினைவேந்தலில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மட்டக்களப்பு கிரானில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மே 18, 2023

மட்டக்களப்பு கிரான் பிள்ளையார் ஆலய முன்றில் ‘கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம்’ எனும் தலைப்பில் வியாழக்கிழமை (18) முள்ளிவாய்க்காலில் உயிர்நீர்த்தவர்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

தமிழரசு கட்சி கிரான் கிளை தலைவர் சி.சண்முகநாதன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் ஆலய குரு, கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு உயிர்நீத்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் கஞ்சி வழங்கிவைத்தனர்.




# திருகோணமலையில் தடையையும் மீறி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மே 18, 2023

திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தடைவிதிக்கும் முகமாக திருகோணமலை பொலிஸாரினால் சில அமைப்புகளுக்கும் அமைப்புகளின் தலைவர்களுக்கும் வியாழக்கிமை (18) தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பல இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கும் நிகழ்வு தடைப்பட்டிருந்தபோதும் பல இடங்களில் மக்கள் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியினை பகிர்ந்து முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவுகூர்ந்திருந்தனர்.

அந்தவகையில் திருகோணமலை அலஸ்தோட்டம் இறை இரக்க ஆலயத்தில் இடம்பெற்றபோது.




# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மே 18, 2023

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளான வியாழக்கிழமை மே 18, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அதன் தலைமை அலுவலகத்தின் முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டது.

இறுதிப்போரில் புதுமாத்தளனில் தனது கணவரைப் பலி கொடுத்த திருமதி தக்ஸாயினி அருள்நேசயோகநாதன் அஞ்சலி சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதைத் தொடந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன், துணைப் பொதுச் செயலாளர் சண்.தயாளன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.




# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பு!

மே 18, 2023

14ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று வியாழக்கிழமை (18) முள்ளிவாய்க்கால் முற்றத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு, சரியாக காலை 10.30 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, அதனையடுத்து பொதுச்சுடரேற்றப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் தனது குடும்பத்தில் 13 பேரை இழந்த மன்னாரைச் சேர்ந்த தாயார் ஒருவர் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.

அதேவேளை சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டு அஞ்சலிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தென்கைலாய ஆதீன குருமுதல்வர் அகத்தியர் அடிகளார் அவர்களால் முள்ளிவாய்க்கால் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அத்தோடு இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்ற உறவுகள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், யாழ் பல்கலைக்கழக மணவர் ஒன்றியத்தினர், முள்ளிவாய்கால் மண்ணில் உயிர் நீத்தவர்களுடைய உறவினர்கள் என பெருந்திரளானவர்களின் பங்குபற்றலுடன் உணர்வழுச்சியுடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.


























# மே 18, 2023
# முள்ளிவாய்க்கால் பிரகடனம்

மே 18, 2023

எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய எம் மக்களே!

இன்று மே 18, தமிழினப்படுகொலை நாள். சிங்கள அரசின் தமிழினிப்படுகொலை வரலாற்றில் திட்டமிடப்பட்டு, முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்டு இன்றுடன் 14 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. ஆக்கிரமிப்பு சிங்கள அரசிற்கு அடிபணியாது இறுதி வரைக்கும் பிராந்திய, பூகோள பேரரசு எகாதிபத்தியத்திற்கு எதிராக எழுந்த இனத்தின் ஆயுதப் போராட்டம் மட்டுமே மௌனிக்கப்பட்டது என்பதை சுட்டும் நாள் முள்ளிவாய்க்கால் சிங்கள அடக்குமுறை அரசிற்கு, பூகோள பேரரசு கட்டமைப்புக்கு எதிரான, ஈழத்தமிழினத்தின் எதிர்ப்பையும், எம் விடுதலை வேணாவாவையும் வரலாற்றில் எப்போதும் பதிய வைத்துக்கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் இருந்துதான் ஈழத் தமிழினத்தின் வினைத்திறன் மிக்க சாமர்த்தியவலுமைய போராட்டத்தின் திசை தீர்மானிக்கப்படுகின்றது. தமிழினப் படுகொலைக்கான நீதி என்பது எமது விடுதலையை நோக்கிய பயணம். அந்த விடுதலைக்கான பயணத்தின் தூரத்தை வரலாறுதான் தீர்மானிக்கின்றது. அந்த வரலாற்றை நாமே எழுத வேண்டிய கட்டாயத்திற்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது என்பதை நாம் அறியாதது அல்ல. ஆனால் முள்ளிவாய்க்கால் மீண்டும் மீண்டும் அதை நினைவூட்டிக்கொண்டிருக்கின்றது. எமக்கு முன்னே எம் உறவுள் கொத்துக்கொத்தாக படுகொலை செய்யப்பட்ட கணங்கள், நினைவுகள் எம்மை விட்டு ஒரு போதும் நீங்கப்போவதில்லை. அவர்களின் கனவுகளைச் சுமந்த காற்றின் கனதியை சுவாசித்துக்கொண்டு, அவர்களின் குருதியால் சிவந்து போன புனித பூமியின் மீது நின்றுகொண்டும் தான் நாங்கள் நினைவேந்துகின்றோம், சத்தியம் செய்கின்றோம்.

என்றுமில்லாதவாறு எம் தேசம் இன்று ஆயுதங்கள் அற்ற பெரும் போரை எதிர்கொண்டு நிற்கின்றது. இது நாளுக்கு நாள் விரிவடைந்து ஒவ்வொரு ஈழத்தமிழரின் வாசல் வரைக்கும் வந்துவிட்டது. சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புத் திணிப்பு பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளது. இவ்வாக்கிரமிப்புத் திணிப்பு, எம் இருப்பை உருக்குலைப்புச் செய்கின்றது. அதற்கெதிராகப் போராடுவதைத்தவிர தமிழர்களுக்கு வேறு வழிகளேதுமில்லை என்பதையும் இடித்துரைத்து நிற்கின்றது. முள்ளிவாய்க்கால் மண்ணிலும் நந்திக்கடல் வெளியிலும் எழுதப்பட்ட எங்கள் துயர் மிகு வரலாற்றிலும் உன்னத தியாகங்களிலும்தான் எமது எதிர்காலம் கட்டமைக்கப்பட்டுள்ளது. எமது தாயகத்தின் மண்ணிலும் காற்றிலும் கடலிலும் கலந்துள்ள எமது உறவுகளின் இறுதி மூச்சும், சிந்திய குருதியும் அவர்களின் இறுதியும் உறுதியுமான இலட்சியமும் எம்மை இன்றும் வழிநடத்தும் சக்திகளாக நிலைத்து நிற்கின்றன.

சிங்கள - பௌத்த அரசு தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் அரசியல் விருப்பு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சிங்கள - பௌத்த ஏகாதிபத்தியத்தையும், சிறீலங்காவின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பையும் சிக்கலுக்குட்படுத்தாத தீர்வை முன்மொழிகின்றது. சிறீலங்காவின் ஒற்றையாட்சி கட்டமைப்பு முறைமைதான் இனப்பிரச்சினைக்கான அடிப்படை என்பதை சிங்கள அரசு ஏற்க முனைவதாக தெரியவில்லை. மத்தியிலே அதீத அதிகாரம் குவிக்கப்பட்ட ஆட்சிமுறைமை, பல் தேசிய இனங்களைக் கொண்ட தேச - நாடுகளுக்கு ஒவ்வாத தன்மையை இன்னும் சிறீலங்கா மறுத்தே வருகிறது.

சிங்கள தேசம் தனது படை பலத்தை ஒன்றுதிரட்டி எம் பூர்வீகத் தாயகத்தை மிகச் செறிவாக இராணுவமயப்படுத்தி வருகின்றது. இராணுவ மயப்படுத்தலின் அடிநாதமாக இருப்பது, இராணுவவாத விழுமியங்களில் ஈழத்தமிழர்களை நம்பிக்கை கொள்ள வைப்பதாகும்.

இராணுவமயமாக்கத்தின் நீட்சியாகவே போதைப்பொருள் பயங்கரவாதத்தை நோக்க வேண்டியுள்ளது. எம் தாயகத்தில் இளந்தலைமுறையினரை போதைக்கு அடிமையாக்குவதன் மூலம் ஆக்கிரமிப்பு அரசிற்கு எதிரான போராடுகின்ற விடுதலை மனநிலையில் இருந்து அவர்களை திசை திருப்புகின்றது. போதைப்பொருளை சிறீலங்கா அரசு ஈழத்தமிழர்களுக்கெதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. எம்தலைமுறையை விடுதலை மன நிலையில் இருந்து திசை திருப்புவது மட்டுமல்லாது இன்னொரு கூட்டுத்தலைமைத்துவம் தலைதூக்காதவாறு பகிரதப் பிரயத்தனம் செய்கின்றது. போதை பொருளுக்கு இளம் தலைமுறையை அடிமையாக்குவதன் மூலம் ஈழத்தமிழர்களின் முதுபெரும் சொத்தான கல்வியை சீரழித்து வருகின்றது.

எம் தாயகத்தில் மிக அண்மையில் அதிகரித்து வரும் மத முரண்பாடுகளையும், சாதிய சிந்தனையின் எழுச்சியையும், சிங்கள அரசின் அல்லது சிங்கள அரசிற்கு துணைபோகும் சக்திகள் கையிலெடுத்துள்ள உத்தியாகவே (Counter Insurgency) நோக்க வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியம் என்பது மத, பிராந்திய வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கடந்த, ஒரே தேசத்தவர்கள் என்ற புரிதலின் அடிப்படையிலமைந்தது. சாதியம், பெண்ணடிமைத்தனம், மத அடிப்படைவாதம் போன்ற பிற்போக்குத்தனமான உள்ளக முரண்பாடுகளுக்கு முற்றாக எதிரான பாதையில் அவற்றை ஒழிப்



பதையும் முதன்மை இலக்குகளில் ஒன்றாக வரித்துக் கொண்டது.

ஒரு தேசமென்பது வெறுமனே ஈழத்தமிழர் பண்பாட்டுக் கூட்டிருப்பு மட்டுமல்ல, ஈழத்தமிழர் பண்பாட்டு கூட்டிருப்புடனான அரசியல் கூட்டுத் திரட்சியும் கூட. ஈழத்தமிழர் பண்பாட்டுடனான அரசியல் கூட்டுத்திரட்சி ஈழத்மிழ் மக்களின் பகிரப்பட்ட அரசியல் வேணாவாவில் இருந்து கட்டமைக்கப்படுகின்றது.

தேசம் என்பது எமக்கான பூர்வீகத்தாயகமும், அதைச் சூழவுள்ள கடல் எல்லையும், ஈழத்தமிழினத் தனித்துவமும், வரலாறும், மொழியும், ஒரு போதும் பராதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகள் உள்ளடங்கியதுமாகும். இதுவே விடுதலைப்போராட்டத்தையும், அதனோடு இணைந்த ஈழத்தமிழர்களின் தியாகத்தையும் எம் மக்களை ஒரு புள்ளியில் இணைக்கின்றது. இவை அனைத்தும் சேர்ந்துதான் ஈழத் தமிழ்த்தன்மையை வரவிலக்கணப்படுத்துகின்றது.

ஈழத்தமிழ்த்தன்மையில் வாழும், போராட்ட வடிவமாக மாறி வருகின்றது. இப்போராட்டவடிவம், விளிம்புமைய போராட்டமாக, பல்வேறு போராட்டக்களங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் மையப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் தமிழ்தேசியம் மக்கள் மைய நாளாந்த தேசியமாக வேண்டிய வரலாற்றுத் தேவையும் உணரப்பட்டு வருகின்றதை மறுக்கவும் முடியாது.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் புவிசார் அரசியல் மிக முக்கியமானது. தற்போதைய பூகோள புவிசார் அரசியலின் செல் நெறி ஏக துருவ பேரரசு கட்டமைப்பு உருவாக்கத்திற்கான கள முனைப்புக்களை உள்வாங்கியிருக்கின்றது. ஏக துரவ பேரரசு தலைமைத்துவக் கட்டமைப்புக்கு, ஈழத்தமிழ் மக்களின் ஆயுத விடுதலைப் போராட்டம் தடையாக இருந்ததனால், ஆயுத போராட்டம் பல்தரப்பு பங்காளிகளால் சிதைக்கப்பட்டது என்பது புதிய தகவல் அல்ல. ஏகதுருவ பேரரசு கட்டமைப்பை பிராந்திய ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் முன்னெடுப்பதற்கு ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையும், தமிழ்த் தேசியக் கோரிக்கையும் தொடர்ந்தும் சவாலாகவே இருக்கப்போகின்றது. பூகோள, பிராந்திய பேரரசு கட்டமைப்பு முயற்சிகளைக் கையாள்வதில்தான் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் இராசதந்திர பலம் தங்கியிருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளும், கோரிக்கைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம்.

**அவையாவன:**

1. நினைவுகூரல் என்பது அடிப்படை உரிமை சார்ந்தது மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட ஆகவே சிறீலங்கா அரசு ஈழத்தமிழர்களின் நினைவுகூரல் உரிமையை ஒரு போதும் தடுக்க முடியாது.
2. தமிழ் மக்கள் என்போதும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள் உட்பட சிங்கள பௌத்த பேரினவாதம் தமக்கெதிராக தொடரும் இனவழிப்புத் தொடர்பாக சர்வதேச விசாரணையையே கோரி நிற்கின்றார்கள். அதற்குக் குறைவான எதையும் நாங்கள் ஏற்கப் போவதில்லை.
3. தமிழர் தாயகத்தை வல்வழைப்புச் செய்யும், தாயகத்தில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலைப் பலவீனமாக்கும் எந்த முயற்சியையும் சிங்கள - பௌத்த பேரினவாதம் எம்மீது தொடுத்துள்ள இனவழிப்புப் போரின் ஒரு அங்கமெனவே நாங்கள் எப்போதும் கருதுகின்றோம்.
4. தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்குரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்.
5. பல்தேசிய சனநாயக முறைக்கூடு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும்.


மே 18, 2023 - முள்ளிவாய்க்கால் பிரகடனம்

எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய எம் மக்களே !

இன்று மே 18, தமிழினப்படுகொலை நாள். சிங்கள அரசின் தமிழினப்படுகொலை, வரலாற்றில் திட்டமிடப்பட்டு, முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்டு இன்றுடன் 14 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. ஆக்கிரமிப்பு சிங்கள அரசிற்கு அடிபணியாது இறுதி வரைக்கும் பிராந்திய, பூகோள பேரரசு எகாதிபத்தியத்திற்கு எதிராக எழுந்த இனத்தின்ஆயுதப் போராட்டம் மட்டுமே மௌனிக்கப்பட்டது என்பதை சுட்டும் நாள். முள்ளிவாய்க்கால் சிங்கள அடக்குமுறை அரசிற்கு, பூகோள பேரரசு கட்டமைப்புக்கு எதிரான, ஈழத்தமிழினத்தின் எதிர்ப்பையும், எம் விடுதலை வேணாவாவையும் வரலாற்றில் எப்போதுமே பதிய வைத்துக்கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் இருந்துதான் ஈழத் தமிழினத்தின் வினைத்திறன் மிக்க சாமர்த்தியவலுமைய போராட்டத்தின் திசை தீர்மானிக்கப்படுகின்றது. தமிழினப் படுகொலைக்கான நீதி என்பது எமது விடுதலையை நோக்கிய பயணம். அந்த விடுதலைக்கான பயணத்தின் தூரத்தை வரலாறுதான் தீர்மானிக்கின்றது. அந்த வரலாற்றை நாமே எழுத வேண்டிய கட்டாயத்திற்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது என்பதை நாம் அறியாதது அல்ல. ஆனால் முள்ளிவாய்க்கால் மீண்டும் மீண்டும் அதை நினைவூட்டிக்கொண்டிருக்கின்றது. எமக்கு முன்னே எம் உறவுகள் கொத்துக்கொத்தாக படுகொலை செய்யப்பட்ட கணங்கள், நினைவுகள் எம்மை விட்டு ஒரு போதும் நீங்கப்போவதில்லை. அவர்களின் கனவுகளைச் சுமந்த காற்றின் கனதியை சுவாசித்துக்கொண்டும், அவர்களின் குருதியால் சிவந்து போன புனித பூமியின் மீது நின்றுகொண்டும்தான் நாங்கள் நினைவேந்துகின்றோம், சத்தியம் செய்கின்றோம்.

என்றுமில்லாதவாறு எம் தேசம் இன்று ஆயுதங்கள் அற்ற பெரும் போரை எதிர்கொண்டு நிற்க்கின்றது. இது நாளுக்கு நாள் விரிவடைந்து ஒவ்வொரு ஈழத் தமிழரின் வாசல் வரைக்கும் வந்துவிட்டது. சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புத் திணிப்பு பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளது. இவ்வாக்கிரமிப்புத் திணிப்பு, எம் இருப்பை உருக்குலைப்புச் செய்கின்றது. அதற்கெதிராகப் போராடுவதைத்தவிர தமிழர்களுக்கு வேறு வழிகளேதுமில்லை என்பதையும் இடித்துரைத்து நிற்கின்றது. முள்ளிவாய்க்கால் மண்ணிலும் நந்திக்கடல் வெளியிலும் எழுதப்பட்ட எங்கள் துயர் மிகு வரலாற்றிலும் உன்னத தியாகங்களிலும்தான் எமது எதிர்காலம் கட்டமைக்கப்பட்டுள்ளது. எமது தாயகத்தின் மண்ணிலும் காற்றிலும் கடலிலும் கலந்துள்ள எமது உறவுகளின் இறுதி மூச்சும், சிந்திய குருதியும் அவர்களின் இறுதியும் உறுதியுமான இலட்சியமும் எம்மை இன்றும் வழிநடத்தும் சக்திகளாக நிலைத்து நிற்கின்றன.

சிங்கள-பௌத்த அரசு தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதில் அரசியல் விருப்பு கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சிங்கள-பௌத்த ஏகாதிபத்தியத்தையும், சிறீலங்காவின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பையும் சிக்கலுக்குட்படுத்தாத தீர்வை முன்மொழிகின்றது. சிறீலங்காவின் ஒற்றையாட்சி கட்டமைப்பு முறைமைதான் இனப்பிரச்சினைக்கான அடிப்படை என்பதை சிங்கள அரசு ஏற்க முனைவதாக தெரியவில்லை. மத்தியிலே அதீத அதிகாரம் குவிக்கப்பட்ட ஆட்சி முறைமை, பல் தேசிய இனங்களைக் கொண்ட தேச - நாடுகளுக்கு ஒவ்வாத தன்மையை இன்னும் சிறீலங்கா மறுத்தே வருகிறது.

சிங்கள தேசம் தனது படை பலத்தை ஒன்றுதிரட்டி எம் பூர்வீகத் தாயகத்தை மிகச் செறிவாக இராணுவமயப்படுத்தி வருகின்றது.

இராணுவ மயப்படுத்தலின் அடிநாதமாக இருப்பது, இராணுவவாத விழுமியங்களில் ஈழத்தமிழர்களை நம்பிக்கை கொள்ள வைப்பதாகும்.

இராணுவமயமாக்கத்தின் நீட்சியாகவே போதைப்பொருள் பயங்கரவாதத்தை நோக்க வேண்டியுள்ளது. எம் தாயகத்தில் இளந்தலைமுறையினரை போதைக்கு அடிமையாக்குவதன் மூலம் ஆக்கிரமிப்பு அரசிற்கு எதிராக போராடுகின்ற விடுதலை மனநிலையில் இருந்து அவர்களை திசை திருப்புகின்றது. போதைப்பொருளை சிறீலங்கா அரசு ஈழத்தமிழர்ககளுக்கெதிரான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. எம்தலைமுறையை விடுதலை மன நிலையில் இருந்து திசை திருப்புவது மட்டுமல்லாது இன்னொரு கூட்டுத்தலைமைத்துவம் தலைதூக்காதவாறு பகிரதப் பிரயத்தனம் செய்கின்றது. போதை பொருளுக்கு இளம் தலைமுறையை அடிமையாக்குவதன் மூலம் ஈழத்தமிழர்களின் முதுபெரும் சொத்தான கல்வியை சீரழித்துவருகின்றது.

எம் தாயகத்தில் மிக அண்மையில் அதிகரித்து வரும் மத முரண்பாடுகளையும், சாதிய சிந்தனையின் எழுச்சியையும் ,சிங்கள அரசின் அல்லது சிங்கள அரசிற்கு துணைபோகும் சக்திகள் கையிலெடுத்துள்ள உத்தியாகவே (counter insurgency) நோக்க வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியம் என்பது மத, பிராந்திய வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கடந்த, ஒரே தேசத்தவர்கள் என்ற புரிதலின் அடிப்படையிலமைந்தது. சாதியம், பெண்ணடிமைத்தனம், மத அடிப்படைவாதம் போன்ற பிற்போக்குத்தனமான உள்ளக முரண்பாடுகளுக்கு முற்றாக எதிரான பாதையில் அவற்றை ஒழிப்பதையும் முதன்மை இலக்குகளில் ஒன்றாக வரித்துக் கொண்டது.

ஒரு தேசமென்பது வெறுமனே ஈழத்தமிழர் பண்பாட்டுக் கூட்டிருப்பு மட்டுமல்ல, ஈழத்தமிழர் பண்பாட்டு கூட்டிருப்புடனான அரசியல் கூட்டுத் திரட்சியும் கூட. ஈழத்தமிழர் பண்பாட்டுடனான அரசியல் கூட்டுத்திரட்சி ஈழத்தமிழ் மக்களின் பகிரப்பட்ட அரசியல் வேணாவாவில் இருந்து கட்டமைக்கப்படுகின்றது.

தேசம் என்பது எமக்கான பூர்வீகத்தாயகமும், அதைச் சூழவுள்ள கடல் எல்லையும், ஈழத்தமிழினத் தனித்துவமும், வரலாறும், மொழியும், ஒரு போதும் பராதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகள் உள்ளடங்கியதுமாகும். இதுவே விடுதலைப்போராட்டத்தையும், அதனோடு இணைந்தஈழத்தமிழர்களின் தியாகத்தையும் எம் மக்களை ஒரு புள்ளியில் இணைக்கின்றது. இவை அனைத்தும் சேர்ந்துதான் ஈழத்தமிழ்த்தன்மையை வரவிலக்கணப்படுத்துகின்றது.

ஈழத்தமிழ்த்தன்மையில் வாழுதல், போராட்ட வடிவமாக மாறி வருகின்றது. இப் போராட்ட வடிவம், விளிம்புமைய போராட்டமாக, பல்வேறு போராட்டக்களங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் மையப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் தமிழ்தேசியம் மக்கள் மைய நாளாந்த தேசியமாக வேண்டிய வரலாற்றுத் தேவையும் உணரப்பட்டு வருகின்றதை மறுக்கவும் முடியாது.

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் புவிசார் அரசியல் மிக முக்கியமானது. தற்போதைய பூகோள புவிசார் அரசியலின் செல் நெறி ஏக துருவ பேரரசு கட்டமைப்பு உருவாக்கத்திற்கான கள முனைப்புக்களை உள்வாங்கியிருக்கின்றது. ஏக துருவ பேரரசு தலைமைத்துவக் கட்டமைப்புக்கு, ஈழத் தமிழ் மக்களின் அயுத விடுதலைப் போராட்டம் தடையாக இருந்ததனால், ஆயுத போராட்டம் பல்தரப்பு பங்காளிகளால் சிதைக்கப்பட்டது என்பது புதிய தகவல் அல்ல. ஏகதுருவ பேரரசு கட்டமைப்பை பிராந்திய ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் முன்னெடுப்பதற்கு ஈழத் தமிழ் மக்களின் விடுதலை வேட்கையும், தமிழ்த் தேசியக் கோரிக்கையும் தொடர்ந்தும் சவாலாகவே இருக்கப்போகின்றது. பூகோள, பிராந்திய பேரரசு கட்டமைப்பு முயற்சிகளைக் கையாள்வதில்தான் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் இராசதந்திர பலம் தங்கியிருக்கின்றது.
இனப்பிரச்சினைத் தீர்வில் ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளும், கோரிக்கைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம். அவையாவன:
1. நினைவுகூரல் என்பது அடிப்படைஉரிமை சார்ந்தது மட்டுமல்ல ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட ஆகவே சிறிலங்கா அரசு ஈழத்தமிழர்களின் நினைவுகூரல் உரிமையை ஒரு போதும் தடுக்க முடியாது.
2. தமிழ் மக்கள் எப்போதும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள் உட்பட சிங்கள் பௌத்த பேரினவாதம் தமக்கெதிராக தொடரும் இனவழிப்புத் தொடர்பாக சர்வதேச விசாரணையையே கோரி நிற்கின்றார்கள். அதற்குக் குறைவான எதையும் நாங்கள் ஏற்கப் போவதில்லை.
3. தமிழர் தாயகத்தை வல்வழைப்புச் செய்யும், தாயகத்தில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலைப் பலவீனமாக்கும் எந்த முயற்சியையும் சிங்கள-பௌத்த பேரினவாதம் எம்மீது தொடுத்துள்ள இனவழிப்புப் போரின் ஒரு அங்கமெனவே நாங்கள் எப்போதும் கருதுகின்றோம்.
4. தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்குரியவர்கள் என்பதையும், தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும், ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்.
5. பல்தேசிய சனநாயக முறைக்கூடு தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும்.
தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரையும் ஓயோம்.
எமது மக்களின் விடுதலை வேண்டிய கனத்த சுவாசத்திலும், புனித பூமியிலும் நின்று அவர்களின் கனவுகளைச் சுமந்து தொடர்ந்து பயணிக்க சத்தியம் செய்கின்றோம்.
நன்றி
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு, 2023.

தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரையும் ஓயோம்.

எமது மக்களின் விடுதலை வேண்டிய கனத்த சுவாசத்திலும், புனித பூமியிலும் நின்று அவர்களின் கனவுகளைச் சுமந்து தொடர்ந்து பயணிக்க சத்தியம் செய்கின்றோம்.

நன்றி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு, 2023

# யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மே 18, 2023

யாழ் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படு கொலை வாரத்தின் இறுதி நாள் அஞ்சலி யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் வியாழக்கிழமை (18) மதியம் 2:30 மணியளவில் யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தூபியில் இடம்பெற்றது.

இதன் பொழுது பொதுசுடர் யாழ் பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராமினால் ஏற்றிவைக்கப் பட்டது.

தொடர்சியாக ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட் டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

இதன்பொழுது யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் , பேராசிரியர்கள், கலைப்பீட பீடாதிபதி எஸ் ரகுராம் , பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



















# சட்டவிரோத மணல் அகழ்வினால் அழிந்துவரும் சுண்டிக்குளப் பிரதேச வளங்கள்!

மே 19, 2023



கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக் குளம் கல்லாற்றுப் பகுதியில் உள்ள பல ஏக்கர் வனப் பகுதியும், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயமும் (தேசிய பூங்கா) சட்ட விரோத மணல் அகழ்வு காரணமாக அழிக்கப்பட்டு வருகிறது. இதனால் தமது பிரதேசம் வளம் குன்றி காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலையடைந் துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

பறவைகள் சரணாலய பகுதியில் உள்ள கண்டல் காடுகள் அழிக்கப்பட்டு, அங்கே மணல் அகழ்வு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

கடலின் நீர்மட்டத்தை விடவும் அதிக ஆழத்தில் குழிகள் தோண்டப்படுவதால் சுண்டிக்குளம் கடல் நீர் குடியிருப் புக்குள் புகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னரை விட தற்போது மணல் அகழ்வு வேலைகள் இரவு பகலாக நடைபெறுகின்றன. இதன்போது உழவு இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனங்கள் எந்நேரமும் இயங் கிக்கொண்டே இருக்கின்றன. இதனால் பாடசாலை மாண வர்கள் உள்ளிட்ட பொதுமக்களால் கல்லாற்றுப் பகுதியில் இருந்து சுண்டிக்குளம் வரையுள்ள பாதையில் பயணிக்க முடியாத அளவுக்கு அந்த வீதி குன்றுங்குழியுமாக காணப் படுகிறது.

இவ்வாறு அந்த வீதி சீரற்று இருப்பதால், நோயாளர் காவு வண்டிகள் கூட செல்ல முடியாமல் அவசர மருத்துவ தேவையுடையோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மணல் அகழ்வின் மூலம் எமக்கு ஏற்பட்டிருக்கும் இது போன்ற பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அரசியல் வாதிகளோ அல்லது பொலிஸாரோ அல்லது கனியவள பிரி வினரோ அல்லது ஏனைய எந்தவொரு அரச அதிகாரி களோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேலும் தொடருமேயானால், இங்கிருந்து நாங்கள் வெளியேற வேண்டிய நிலைமையே ஏற்படும் என அச்சத்தோடு தெரிவிக்கின்றனர்.

# நினைவேந்தல் தொடர்பில் சிறீலங்கா ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கடும் கண்டனம்!

மே 19, 2023

நினைவேந்தல்களைச் செய்யும் போது ஏனைய இனங்களை வெறுப்படையச் செய்யாமல் நினைவேந்தல் நிகழ்வுகளை நடாத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்த கருத்துக்கள் கடந்த திங்கட்கிழமை பத்திரிகைகளில் பிர தான தலைப்புச் செய்தியாக இடம்பிடித்திருந்தன. தமிழ்மக்கள் தங்களுக்கு நடந்த இனப்படுகொலைச் சம்பவங்களை வெளிப் படுத்தி அதற்கு நீதி வேண்டும் எனக் கோருகின்ற போது அது பெரும்பான்மைச் சிங்கள மக்களின் மனங்களைப் புண்படுத் துகின்றது என்ற அடிப்படையில் தான் அவர் இவ்வாறான கருத்துக்களைக் கூறியிருக்கின்றார் எனவும், உண்மையில் தமிழர் தாயகத்தில் நடந்தது என்ன? என்ற உண்மை சிங்கள மக்களுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காகவும், இனப் படுகொலைக்கு நீதி கோருகின்ற செயற்பாடுகளைக் கட்டுப் படுத்தும் வகையிலும், தமிழ்மக்களை அச்சுறுத்தும் வித மாகவும் ஜனாதிபதி இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருப் பதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் வைத்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழர் தாயகத்தில் பெரியளவிலான இனப்படுகொலையைச் செய்த பின்னரும் சரத் வீரசேகர போன்றவர்கள் எங்களுக்கு எதிராக இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் வந்தேறு குடிகள் என்பது போன்றும், இந்த மண் சிங் கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது எனவும் அவர்கள் கருத்துக்கள் கூறிக் கொண்டிருக்கின்ற போது அதனை நீங்கள் முற்றாக அனுமதித்துக் கொண்டிருக் கின்றீர்கள்.

தமிழர் தாயகத்தில் யுத்தம் இடம்பெற்ற போது பாதுகாப்பான யுத்த சூனியப் பிரதேசங்கள் என அறிவித்துவிட்டு அந்தப் பகுதி களுக்குள் தமிழ்மக்களைச் செல்லுமாறு கூறிவிட்டு அந்தப் பகுதி களுக்குள் இரசாயனக் குண்டுகளை இராணுவம் பாவித்தது. சர்வதேச ரீதியாகத் தடை செய்யப்பட்ட குண்டுகளை இரா ணுவம் பாவித்துத் தமிழ்மக்களைக் கொலை செய்தது என்ற உண்மையை நீங்கள் உங்கள் சிங்கள மக்களுக்குக் கூறுங்கள். சகோதர முஸ்லீம் மக்களுக்குக் கூறுங்கள்.



இவ்வாறான சந்தர்ப்பத்தில் மக்கள் உங்கள் மீது கோபப்படுகின் றார்களா? அந்த உண்மையைச் சொல்கின்ற எங்கள் மீது கோபப்படுகின்றார்களா? என்ற உண்மையை நீங்கள் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கும். இந்த உண்மைகள் சிங்கள மக்களுக்குத் தெரியவந்தால் இராணுவம் மீதும், சிங்கள ஆட்சியாளர்கள் மீதும் காறித் துப்புகின்றதொரு நிலைமை உருவாகும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

# உரும்பிராய் மண்ணில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!

மே 18, 2023

14 ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு உரும்பிராய் இளைஞர்களின் ஏற்பாட்டில் நேற்று வியாழக் கிழமை(18.05.2023) மாலை-04.30 மணியளவில் யாழ். உரும்பிராய் மேற்கு அன்னங்கை வீதியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு முள்ளிவாய்க்கால் மண்ணிலும், ஒட்டு மொத்தமாக யுத்தத்திலும் உயிரிழந்த அனைத்துத் தமிழ் உறவுகளுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிரிழந்த உறவுகள் நினைவாக 35 குடும்பங்களுக்குப் பயன்தரு தென்னங் கன்றுகள் நேரடியாகக் கையளிக்கப்பட்டன.



# தையிட்டி விகாரையை அகற்ற கோரி போராட்டம்: 09 பேர் பொலிசாரினால் கைது!

மே 23, 2023

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் சட்டவிரோதமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள விகாரையை , அகற்ற கோரி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட சட்டத்தரணி ஒருவர், நான்கு பெண்கள் உள்ளிட்ட 09 பேர் பலாலி பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தையிட்டி விகாரையை அகற்ற கோரி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் அவரது கட்சி உறுப்பினர்கள் சிலர் இன்றைய தினம் செவ்வாய்க் கிழமை குறித்த விகாரைக்கு சற்று தூரத்தில் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

அதன் போது அங்கு வந்திருந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் , இவ்விடத்தில் சட்டவிரோதமான முறையில் கூட முடியாது. அதனால் இங்கிருந்து அனைவரும் கலைந்து செல்லுமாறு பணித்தனர்.

அதனை மீறி அங்கு நின்றவர்களை சட்டவிரோதமான முறையில் கூடி, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க முயன்றனர் எனும் குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவர் , நான்கு பெண்கள் உள்ளிட்ட 09 பேரை கைது செய்தனர்.



அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தனியார் காணி ஒன்றில் நின்றிருந்த வேளை அவரை வலுக்கட்டாயமாக தூக்கி அக்காணியில் இருந்து பொலிசார் அப்புறப்படுத்தி இருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

# மன்னார் உயிலங்குளப் பிரதேசத்தில் சிறீலங்கா இராணுவத்தினால் பௌத்த விகாரை அமைக்கும் நடவடிக்கை!

மே 22, 2023

மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் சிறீலங்கா இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவினால் அப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரை அமைக்க இராணுவத்தினால் வேலைகள் இடம்பெற்று வருகின்றன.





இந்த பௌத்த விகாரை அமைக்கும் நடவடிக்கையினை வன்மையாக கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் புதிதாக இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து எம். பி. இன்று திங்கட்கிழமை (22) மதியம் அப்பகுதிக்கு விஜயம் செய்தார்.

அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

நாட்டின் பல பாகங்களிலும் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. அதன் அடிப்படையில் மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப்பிரிவினால் அப்பகுதியில் புதிதாக ஒரு பௌத்த விகாரையை அமைக்க இராணுவத்தினால் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

தொடர்ச்சியாக, மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகளே காரணங்களாக உள்ளன.

மன்னாரில் 5 பௌத்த விகாரைகள் உள்ளன. மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் ஆகிய இடங்களில் அவை உள்ளன. ஆனால், இங்கே பௌத்த குடும்பங்கள் ஐம்பது கூட இல்லை.

பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து வருகிறது.

இவ்விடயம் குறித்து உடனடியாக நான் புத்த சாசன அமைச்சரது கவனத்துக்கும், மாவட்ட திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

மக்களிடம் இருந்து எனக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அப்பிரதேசத்தில் இராணுவத்தினால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக அவர்கள் கூறியுள்ளனர். இதனால்தான் நேரடியாக அப்பகுதிக்குச் சென்று பார்வை

# யாழில் பாடசாலை மாணவியுடன் சேட்டை விட்ட சிறீலங்கா சிப்பாய் பொதுமக்களால் நையப்புடைப்பு!

மே 18, 2023

யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியில் இன்றைய தினம் திங்கட்கிழமை பாடசாலை முடிந்து வீடு நோக்கி சென்று கொண்டிருந்த மாணவியிடம் அங்க சேஷ்டையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாயை அப்பகுதிமக்கள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பலாலிப் பொலிஸார் மற்றும் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தனிமையில் சென்ற பாடசாலை மாணவியை பின்தொடர்ந்த குறித்த இராணுவ சிப்பாய் அங்கசேஷ்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் மாணவி குரலெழுப்பிய நிலையில் அங்கு கூடிய பொதுமக்கள் குறித்த இராணுவ சிப்பாயை நையப்புடைத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.



# கனடாவின் நிலைப்பாட்டை வெகுவிரைவில் முழு உலகும் பின்பற்றும்!

## பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்

மே 25, 2023

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவம் பௌத்தமயமாக்கப்பட்டுள்ளது. மகாவலி வலயத்தில் உள்ள தமிழர்களுக்கு சொந்தமான காணிகள் மகாவலி அதிகார சபையின் ஊடாக சிங்கள குடியேற்றத்துக்காக பயன்படுத்தப்படுகிறது.

இதுவும் ஒருவகையான இன அழிப்பு செயற்பாடு என்பதை ஆட்சியாளர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இலங்கை தொடர்பில் கனடா குறிப்பிட்ட கருத்தை வெகு விரைவில் முழு உலகும் குறிப்பிடும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (24) இடம்பெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனடா நாட்டு பிரதமர் ஜஸ்டின் ரூடோ குறிப்பிட்ட கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறோம். இவரது கருத்தை கனடாவின் எதிர்க்கட்சி தலைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கை தொடர்பில் கனடாவின் நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் புறக்கணித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இன அழிப்பு இடம்பெற்றது என்பது உண்மை. இலங்கை தொடர்பில் கனடா குறிப்பிட்ட கருத்தை எதிர்காலத்தில் அமெரிக்கா, பிரித்தானியா உட்பட முழு உலகமும் குறிப்பிடும். ஆகவே முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையிலான விசாரணையை நடத்த அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இலங்கை தொடர்பில் சர்வதேச நாடுகள் அதிருப்தியை வெளிப்படுத்தும் போது கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களை அழைத்து அவர்களிடம் கண்டனம் தெரிவிப்பதால் நாடு என்ற ரீதியில் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். அனைத்து நாடுகளையும் பகைத்துக் கொண்டால் தனித்தே செயற்பட வேண்டும்.



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவம் பௌத்த மயமாக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் உரிமைகள் மற்றும் காணிகள் திட்டமிட்ட வகையில் இராணுவத்தின் ஆதரவுடன் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இதுவும் ஒரு வகையான இன அழிப்பு என்றே குறிப்பிட வேண்டும்.

தமிழர்களுக்கு சொந்தமான மகாவலி எல் வலயம் தற்போது ஜே வலயமாக வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது. மகாவலி அதிகார சபை ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிங்கள குடியேற்றம் தீவிரப்படுத்தப்படுகிறது என்றார்.

# சர்வதேச விசாரணைக்கு சிறீலங்கா ஏன் அஞ்சுகிறது!

## யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

மே 24, 2023

யுத்த குற்றம் இடம்பெறவில்லை, தமிழ்கள் இனபடுகொலை செய்யப்படவில்லை என்றால் ஏன் சர்வதேச விசாரணைக்கு இலங்கை ஏன் அஞ்சுகிறது என்று தமிழ் தேசிய கூட்டமைபபின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

மேலும், மே 18ஆம் திகதியன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ரூடோ வெளியிட்ட கருத்தை தாம் மதிப்பதாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற பந்தய சூதாட்ட விதிப்பனவு திருத்த சட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

“முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்தை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது. ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ளது. ஆனால் இலங்கை தொடர்பில் கனடா பிரதமரின் கருத்தை நாம் மதிக்கிறோம்

கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்து தொடர்பில் இலங்கையில் உள்ள உயர்ஸ்தானிகரிகரிடம் வெளிவிவகாரத்துறை அமைச்சர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். கனேடிய பிரதமரின் கருத்து இந்த நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

இதன்மூலம் நாட்டில் இன முரண்பாடு உள்ளது என்பதை வெளி விவகாரத்துறை அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளார். இராணுவத்தினரிடம் பிள்ளைகளை ஒப்படைத்தோம், எமது பிள்ளைகளை தாருங்கள் என பாதிக்கப்பட்ட மக்கள் கோருவது நியாயமானதே இதனை எவ்வாறு பிரிவினைவாதம் என்று குறிப்பிட முடியும்.

காணாமல்போனார் விவகாரத்துக்கு ஒரு சிறந்த தீர்வை பெற்றுத் தருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இதனையே ஆட்சியில் இருந்த அரச தலைவர்கள் அனைவரும் குறிப்பிடுகிறார்கள். இலங்கை ஆட்சியாளர்கள் சர்வதேசத்தை ஏமாற்றுகிறார்கள். இதன் காரணமாகவே சர்வதேசம் இலங்கையை தொடர்ந்து வலியுறுத்துகிறது.

உண்மையை கண்டறிவதாக இலங்கை சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கியது. அதனையே சர்வதேசம் இன்று கோருகிறது. யுத்த குற்றம் இடம்பெறவில்லை, தமிழ்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என்றால் ஏன் சர்வதேச விசாரணைக்கு அச்சப்பட வேண்டிய தேவையில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் பிரித்தானியா, அமெரிக்கா உட்பட கரிசணை கொள்ள வேண்டும்.



தமிழர்கள் மீது படுகொலை கட்டவிழ்க்கப்படவில்லை, இரசாயன குண்டுத்தாக்குதல் பிரயோகிக்கப்படவில்லை என்றால் அரசாங்கம் சர்வதேச பொறிமுறை விசாரணைக்கு கதவைத் திறக்கலாம்.

இறுதி கட்ட யுத்தத்தில் பசியால் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் மரணித்ததை ஒருபோதும் மறுக்க முடியாது. இறுதி கட்ட யுத்தத்தில் இரசாயன குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதை பலர் தற்போது வெளிப்படுத்தியுள்ளார்கள், பலர் சாட்சியமளித்துள்ளார்கள்.” என்றார்.

# குருந்தூர் மலை ஆர்ப்பாட்ட விவகாரத்தால் ரவிகரன், மயூரன் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான வழக்கு ஒக்ரோபர் 19 2023 இற்கு வழக்கு ஒத்திவைப்பு!

மே25, 2023

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் , முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டசெயலாளருமான துரைராசா ரவிகரன் மற்றும், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் வழக்கிலக்கம் பி1053/22 என்னும் வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி சரவணராஜா முன்னிலையில் 25.05.2023 இன்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கினை ஆராய்ந்த நீதவான் குறித்த வழக்கினை எதிர்வரும் 2023.10.19 திகதிக்கு தவணையிட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணையின்போது நீதிமன்றிற்கு வருகை



தந்த அனைத்து சட்டத்தரணிகளும் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் 37 கிராம சேவகர் பிரிவுகளை ஒன்றிணைத்து மகாவலி 'ஜே' வலயமாக அறிவிக்க தீர்மானம்!

## பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்

மே 25, 2023

வடக்கு மாகாணத்தில் உள்ள 37 கிராம சேவகர் பிரிவுகளை ஒன்றிணைத்து மகாவலி 'ஜே' வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை தீர்மானித்துள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. சிங்கள குடி பரம்பலை விரிவுப்படுத்தும்.

1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி மீள்பரிசீலனை செய்யப்படும் என குறிப்பிடும் ஜனாதிபதி மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை ஏன் கவனத்தில் கொள்ளவில்லை.

இராணுவம், மகாவலி அதிகார சபை உட்பட அரச திணைக்களங்கள் தமிழர்களுக்கு எதிராகவே செயற்படுகிறது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) இடம்பெற்ற நிதி ஒழுங்குப்படுத்தல் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

2007 ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபையின் எல் வலயத்தில் தமிழர்களுக்கு சொந்தமான காணிகள் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தென்னிலங்கை சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மகாவலி அதிகார சபை ஊடாக முன்னெடுக்கப்படும் சிங்கள குடியமர்வு செயற்பாடுகளை பாராளுமன்றத்தின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளோம்.

மகாவலி எல் வலயம் மீள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட வேண்டும், மகாவலி அதிகார சபை காணிகள் பிரதேச சபைக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். 1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம் வெளியிட்ட வர்த்தமானிகளை மீள் பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி உரிய அமைச்சுகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஆனால் தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகளை புதிதாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. சிங்கள பரம்பரை விரிவுப்படுத்தும் செயற்பாடுகளில் மகாவலி அதிகார சபை முன்னெடுக்கிறது. இவற்றை மகாவலி அதிகார சபை கைவிட வேண்டும்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள அம்பாள்புரம், கரும்புள்ளியான், கொள்ளிவிலாங்குளம், கொம்புமுறிப்பு, நெட்டாங்கண்டல், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசம் குளம், செல்வபுரம், சிராட்டிக்குளம், சிவபுரம், வன்னிவிலாங்குளம், விநாயகபுரம், ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும், அதேபோல் அனிச்சங்குளம், பாரதிநகர், புகழேந்திநகர், திருநகர், யோகபுரம் மத்தி,யோகபுரம் கிழக்கு ஆகிய 07 கிராம அலுவலர் பிரிவுகளையும், மாந்தை மேற்கில் உள்ள பாலியாறு, அந்தோணியார்புரம், ஆத்திமோட்டை, இலுப்பக்கடவை, கள்ளியடி, கூறாய், கோயிற்குளம், காயாநகர், பெரியமடு ஈஸ்ட், பெரியமடு வெஸ்ட், பல்லமடு, வெடுத்தல்மடு ஈஸ்ட், நோர்த், உள்ளடங்களாக 15 கிராம சேகவர் பிரிவுகளையும் இணைத்து 37 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒன்றிணைந்து மகாவலி ஜே வலயமாக வர்த்தமானியில் வெளியிட மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.



1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிலங்கள் உரிய தரப்பினருக்கு கையளிக்கப்படும் என குறிப்பிடும் ஜனாதிபதி மகாவலி அதிகார சபையின் இந்த செயற்பாட்டை ஏன் கவனிக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி விடுவிக்கப்படும் என சர்வதேசத்திடம் குறிப்பிட்டு விட்டு மகாவலி அதிகார சபை ஊடாக காணிகளை தொடர்ந்து கையகப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் சகல பகுதிகளிலும் குடி கொண்டுள்ளார்கள். இராணுவ முகாம்களில் புத்தர் நிலை வைக்கப்படுகிறது, விகாரைகள் கட்டப்படுகிறது. தமிழர் பகுதியில் பௌத்த மயமாக்கல் தற்போது இராணுவ மயமாக்கபபட்டுள்ளது. இந்த நாட்டில் பல்லின சமூகத்தின் உரிமைகள் பெயரளவில் மாத்திரம் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆட்சியாளர்களும் எமது விடயத்தில் பார்வையற்றவர்களாக உள்ளார்கள்.

இராணுவமயமாக்கல் ஊடாக பௌத்த மயமாக்கலையும், மகாவலி அதிகார சபை ஊடாக சிங்கள பரம்பலை விரிவுப்படுத்தும் செயற்பாட்டையும் அரசாங்கம் உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என்றார்.

# அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியை சிறீலங்கா இராணுவத்தினர் சுவீகரிக்க முயற்சி; அளவீட்டு முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது – 25.05.2023!

மே 25, 2023

முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியினை, 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரித்து வழங்க எடுக்கப்ப முயற்சி அப்பகுதி மக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும் வியாழக்கிழமை (25) தடுத்து நிறுத்தப்பட்டது.



குறிப்பாக நில அளவை திணைக்களத்தினர் மற்றும், கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், குறித்த மாவீரர்துயிலுமில்லக் காணியினை அளவீடு செய்ய வருகைதந்திருந்தனர்.

இந் நிலையில் மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதிமக்கள் மற்றும், மக்கள் பிரதிநிதிகள் சிலரும் குறித்த காணிசுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு குறித்த காணியினை அளவீடு செய்து, இராணுவத்திற்காக சுவீகரிக்கும் நடவடிக்கையினை அனுமதிக்கமுடியாதென அப்பகுதிமக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும், அங்கு வருகைதந்த நில அளவைத்திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நில அளவைத்திணைக்களத்தினர் அங்கிருந்து புறப்பட்டுச்சென்றனர்.

மேலும் குறித்த எதிர்ப்பு நடவடிக்கையில் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டசெயலாளருமான துரைராசா ரவிகரன், இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் அன்ரனி. ஜெஜநாதன் பீற்றர் இளஞ்செழியன், தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துயன், மாவீரர்களின் பெற்றோர்கள், கிராம மக்கள் ஆகியோர் இணைந்து ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியினை தற்போது 23ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதுடன், அங்கு இரணுவத்தினரால்



விவசாய நடவடிக்கைகள், இராணுவத்தினருக்கான விளையாட்டு செயற்பாடுகள் இடம்பெறும் இடமாகவும் அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணி காணப்படுகின்றது. அதுதவிர குறித்த காணியில் இராணுவத்தினரால் உணவகம் ஒன்றும் நடாத்தப்பட்டுவருகின்றது.

இந் நிலையில் துயிலுமில்லக்காணியின் வெளிப்புறத்திலேயே வருடாவருடம் மாவீரர் நாளில் மாவீரர் நாள் அஞ்சலிகள் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இவ்வாறான சூழலில் அண்மையில் குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியினை இராணுவத்தினர் விடுவிக்க வலியுறுத்தி மாவீரர்களின் உறவுகள் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயப்படுகொலை; 18 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் செல் தாக்குதலில் உடல் சிதறி பலியாகி 35ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு நடைபெற்றது!

மே 29, 2023

வடமராட்சி "ஒபரேஷன் லிபிரேஷன்" நடவடிக்கையும் அல்வாய் மக்களின் படுகொலையும் இன்றுடன் 35 வருடங்கள் நிறைவு பெறுகின்றது





இராணுவம் வடமராட்சியை மீட்க ஒபேரேஷன் லிபிபேரசன் என்ற பெயரில் படை நடவடிக்கையை மேற்கொண்டனர் 1987-05-29 அதனை தொடர்ந்து வந்த நாள்களில் அல்வாய் பிரதேசம் மரண பூமியாக காட்சி தந்தது , தினம் தினம் அப்பாவி பொது மக்களும் குறிப்பாக இளைஞர்கள் பல பேர் வீதிக்கு வீதி படுகொலை செய்யப்பட்டனர், அல்வாய் பிரதேசத்தில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் மூன்று நாள்களில் படுகொலை செய்யப்பட்டனர், பல குடும்பத்தர்கள் மற்றும் இளைஞர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர், 29-05-1987 ஆம் ஆண்டு பாதுகாப்பு வலயம் என்று இராணுவத்தினால் அறிவிக்கப்பட்ட ஆலயங்கள், பாடசாலைகள் ,வைத்தியசாலைகள் என்பவற்றில் உயிர் தஞ்சம் கோரி மக்கள் அடைக்காலம் புகுந்தனர், இதன் ஒரு பகுதி மக்கள் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இரவு வேளை தமது உயிரை பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடன் அடைக்காலம் புகுந்தவேளை சரியாக 9-30 மணியளவில் இராணுவம் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் 18 மேற்பட்ட அப்பாவி மக்கள் உடல் சிதறி பலியாகினர், பல பேர் படுகாயம் அடைந்தனர், அதனை தொடர்ந்து மறுநாள் அல்வாய் பிரதேசம் இராணுவம் சுற்றி வலைக்கப்பட்டு இளைஞர்களை குறிவைத்து தேடுதல் வேட்டையை மேற்கொண்டது, இதன் போது மாலு சந்தியில் மூன்று இளைஞர்கள் சுட்டு படுகொலை செய்யப்பட்டனர், அல்வாய் பெரியார் பகுதியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் சிவஞானம் , சிவபாலன் ஆகியோர் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு மயாக்கை பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர் , இவ்வாறு அல்வாய் பிரதேசம் தினம் படுகொலை பிரதேசமாக காட்சி அளித்தது, இன்றுடன் 35வருடங்கள் நிறைவு பெறுகின்றது ,

29.05.1987 ஆம் ஆண்டு அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்த வேளை ஷெல் தாக்குதலில் கொல்லப்படட அல்வாய் மக்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் வணக்கம்.







# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை!

மே 28, 2023

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினை அரசாங்கம் முற்றாக கைவிட வேண்டுமெனக் கோரி கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை (26) வெள்ளிக் கிழமை காத்தான்குடியிலுள்ள ஜூம்ஆப் பள்ளிவாயல்களில் இடம் பெற்றது.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை இடம் பெற்றது.





# யாழ். தையிட்டி விகாரையை அகற்ற கோரி போராடச் செல்வோரைத் தடுக்க சிறீலங்கா காவல் துறை கடும் பிரயத்தனம்!

மே 25, 2023

யாழ்.தையிட்டியில் கவனயீர்ப்புப் போராட்டம் நடாத்துவதற்கு மல்லாகம் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றுமாறு கோரியும், அதனைச் சுற்றியுள்ள தனியாருடைய காணிகளை உடனடியாக உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலியுறுத்தியும் தமிழ்த்தேசியப் பேரவையால் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் மீண்டும் பலரதும் பங்குபற்றுதலுடனும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் தையிட்டிப் போராட்டக் களத்தில் ஒன்பது பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனுடன் மாத்திரம் போராட்டம் இரவு பகலாகத் தொடர்ந்தும் நீடித்தது.

இந் நிலையில் மல்லாகம் நீதிமன்றத்தால் இன்று பிணையில் விடுவிக்கப்பட்ட ஒன்பது பேரும் நேரடியாகப் போராட்டக் களத்திற்குச் சென்றதுடன் ஏனைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்களுடன் இணைந்து தொடர்ந்தும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந் நிலையில் இன்று வியாழக்கிழமையும் போராட்டம் தொடரும் எனப் போராட்ட ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று மாலை வேளையில் சர்ச்சைக்குரிய தையிட்டி விகாரை மற்றும் அதனை அண்டிய போராட்டம் இடம்பெறும் பகுதியிலும் பலாலி மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸார் ஏராளமாகக் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போராட்டக் களத்திற்குச் செல்லும் பிரதான



வழியாகக் காணப்படும் கலைவாணி முகப்பு வீதியில் இன்று மாலை-05 மணி முதல் போராட்டத்திற்குச் செல்வோரைத் தடுக்கும் வகையில் பொலிஸாரால் சட்டவிரோதமாகத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமை பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# குடும்பங்களாக சரணடையும் போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த குழந்தைகள் எங்கே?

மே 30, 2023

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் செவ்வாய்க்கிழைமை (30) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற இப்போராட்டத்தில் சர்வதேசமே எமக்கான நீதியை பெற்றுத்தா என்ற தொனிப்பொருளில் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தின் போது குடும்பங்களாக சரணடையும் போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29 க்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே?, புதிய பயங்கரவாத தடை சட்டத்தை உடன் நிறுத்து, புதிய புதிய சட்டங்களை இயக்கி மக்களின் குரல்களை நசுக்காதே போன்ற பல்வேறு பாதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.












# இனி எங்களால் போராட முடியுமா?

## வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் போன உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் சி. ஜெனிற்றா

மே 30, 2023

இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் முப்பதாம் திகதி சர்வதேச நீதியை கோரி கவன ஈர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

உறவுகளை கடத்தி காணாமல் ஆக்கப்பட்டு, சரணடைந்து, கையில் ஒப்படைக்கப்பட்ட, எமது உறவுகளை தேடித்தான் நாம் ஜனநாயக போராட்டத்தை அகிம்சை வழியில் 14 வருடங்களாக தொடர்ச்சியாக வீதியில் நின்று போராடி கொண்டிருக்கின்றோம்.




புதிய அரசாங்கமானது, பயங்கரவாத தடை சட்டத்தை எடுப்பதாக கூறி, புதிதாக பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டத்தை அமுல்படுத்த நினைக்கின்றார்கள்.

ஆனால் அதை செய்கின்ற போது எமது ஜனநாயக போராட்டத்திற்கான கருத்து சுதந்திரமோ, தனியாகவோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து போராடுவதற்கு பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமானது ஒரு படிக்கல்லாக அமையும் என்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், ஏனையவர்களிடமும் நிறைவேற்றாது நிறுத்த வேண்டும் என்பதனை ஊடக வாயிலாக கேட்டு கொள்கின்றோம்.

இலங்கை தேசத்து மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்ற போதும் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கும் எந்த ஒரு நீதியும் வழங்காமல் இந்த சர்வதேசம் பார்த்து கொண்டிருக்கின்றது. அதேபோன்று கடத்தி காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்ற உறவுகளை தேடி நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்ற போது இலங்கை தேசத்தை ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்கள்.

உறவுகள் இனியாவது மனிதர்களாக வாழ வேண்டும். ஏனையவர்களுடன் வாழ்வதற்கு உதவ வேண்டும் என்பதற்காக நடக்க இருக்கின்ற கூட்ட தொடரிலாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றங்கள் இழைத்தவர்களை பாரப்படுத்தி மக்களுக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் என்பதை நாம் மிகவும் பணிவாக கேட்டு நிற்கின்றோம்.

இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது. ஏனென்றால் அச்சுறுத்தல்கள், தடை உத்தரவுகள் இருந்தன. தற்போது நீதிமன்ற வழக்குகள் கூட எமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன. எனவே தொடர்ச்சியாக போராட சர்வதேசம் உறுதுணையாக இருக்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

# ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஜயாத்துரை நடேசனின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

மே 31, 2023

ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஜயாத்துரை நடேசனின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர் ஜயாத்துரை நடேசனின் திருவுருவப் படத்துக்கு யாழ்.ஊடக அமையத்தின் இணைப்பாளரும், மூத்த ஊடகவியலாளருமான கு. செல்வக்குமார் மலர் மாலை அணிவிக்க, பொதுச் சுடரை யாழ். ஊடக அமையத்தின் பொருளாளரும் ஊடக வியலாளருமான கம்சன் ஏற்றி வைத்தார். அதனை தொடர்ந்து, ஊடகவியலாளர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசன் தொடர்பில் அவர் காலத்தில் பணியாற்றிய ஊடகவியலாளர் செல்வக்குமார் குறிப்பிடும் போது,

31.05.2004 ஆம் ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப் பட்டு 2023 ஆம் ஆண்டு இன்றுடன் 19 ஆண்டுகளை கடக்கும் போதும் சுடப்பட்ட அன்றைய நாள் தான் நினைவில் வருகிறது. இத்தனை வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்காமல் தொடர்ந்தும் அவரின் பாதையில் நாம் பயணிக்கும் போது அச்ச உணர்வுதான் இன்றும் எழுகிறது.




நாளை இவரின் பாதையில் பயணிக்கும் ஊடகவிலாளர் களுக்கு என்ன நடக்குமோ என்ற நம்பிக்கை இல்லாத காலத்தில் இருக்கிறோம்.

ஏனெனில் சுடப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பில் முதற் கட்ட விசாரணையையே ஆரம்பிக்காத இந்த அரசுகளால் ஊடகவியலாளர் மத்தியில் அச்ச உணர்வு இன்றும் தொடர்கிறது என்றார்.

# மலையகத் தமிழ் மக்கள் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்!

## அருட்தந்தை சக்திவேல்

மே 31, 2023

இலங்கைக்கு மலையக மக்கள் அழைத்து வரப்பட்டு இந்த வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. இருப் பினும் கடந்த கால அரசாங்கங்கள் அம்மக்களுக்கு வாக்காளர் அந்தஸ்தினை மாத்திரமே வழங்கியுள்ளதே தவிர முழுமை யான இலங்கைக் குடிமக்களாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இனிவரும் காலங்களிலாவது மலையக மக்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என மலையகத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் கித்து சர அமைப்பினர் வலியுறுத் தியுள்ளனர்.

கித்து சர அமைப்பினால் செவ்வாய்க்கிழமை (29) கொழும்பில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

இதன்போது கலந்து கொண்ட அந்த அமைப்பின் உறுப் பினரான அருட்தந்தை சக்திவேல் கருத்து தெரிவிக்கையில்,

மலையக மக்கள் இந்த நாட்டுக்கு வருகை தந்து இந்த வருடத்துடன் 200 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. அவர்கள் பல வருடங்கள் பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்துள்ளனர்.

குறிப்பாக உணவின்றி பட்டினியாகவும், போதிய சுகாதார வசதிகள் இல்லாமலும், வீடுகளுமின்றி பாரிய இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்துள்ளனர். அந்த காலப்பகுதியில் அதிகளவி லான மக்கள் உயிரிழந்துள்ளார்கள். அவர்கள் உயிரிழந் துள்ளார்கள் என்பதை விடுத்து கொலை செய்யப்பட்டார்கள் என்று கூறுவது தான் பொருத்தமாக இருக்கும்.



மலையக மக்கள் அன்று தொடக்கம் இன்று வரையில் அடிமை வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மலையக மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இந்த மக்களும் நாட்டின் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அவர்களின் உரிமைகள் வாக்களிப்பதோடு நிறுத்தப்படாமல் ஏனைய மக்களை போன்று நிம்மதியாக வாழக்கூடிய சந்தர்ப் பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அவர்களுக்கு காணி உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கம் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு என நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு புதிய குடியேற்றங்களை நிறுவுகிறது. இருப்பினும் மலையகத்தில் இதுபோன்றதொரு எந்தவொரு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட

# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக 3ம் கட்டமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டம்! 31.05.2023














# உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா நிறுத்தாது!

### கனடாப் பிரதமர் ஜஸ்டின் ரூடோ

மே 18, 2023

இலங்கையில் தொடர்ந்து கஷ்டங்களை எதிர்நோக்கும் அனைவருக்கும் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா நிறுத்தாது என அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் அதாவது மே 18ஆம் திகதியன்று நினைவுக்கூரப்பட்டது.

இதனை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையில்.

“நாடு முழுவதிலும் நான் கடந்த பல ஆண்டுகளில் சந்தித்தவர்களின் அனுபவங்கள் உட்பட, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்க் கனேடியர்களின் அனுபவங்கள் - மனித உரிமைகள், சமாதானம், ஜனநாயகம் என்பனகுறைத்து மதிப்பிடப்படக் கூடாதென்பதற்கான நீடித்திருக்கும் நினைவூட்டலாக அமைகின்றன. இதன் காரணமாகவே, மே 18 ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒரு மனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது.

இலங்கையில் நிலவும் மனித உரிமைகள், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசிடம் கோரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை எமது சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நாம் நிறைவேற்றினோம். இலங்கையில் எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானத்தையும், மீளிணக்கத்தையும் அடைவதற்கு இன்றியமையாத அம்சங்களான மதம், நம்பிக்கை, பன்மையியல் ஆகியவற்றின் சுதந்திரத்தை வலியுறுத்தும் வேறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதில் கனடா உலக நாடுகளுக்குத் தலைமைத்துவம் வழங்கியுள்ளதுடன், உலகம் முழுவதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாம் தொடர்ந்தும் செய்லாற்றுவோம்.




The Prime Minister, Justin Trudeau, today issued the following statement on Tamil Genocide Remembrance Day:

"Today, we reflect on the tragic loss of life during the armed conflict in Sri Lanka, which ended 14 years ago. Tens of thousands of Tamils lost their lives, including at the massacre in Mullivaikal, with many more missing, injured, or displaced. Our thoughts are with the victims, survivors, and their loved ones, who continue to live with the pain caused by this senseless violence.

"The stories of Tamil-Canadians affected by the conflict – including many I have met over the years in communities across the country – serve as an enduring reminder that human rights, peace, and democracy cannot be taken for granted. That's why Parliament last year unanimously adopted the motion to make May 18 Tamil Genocide Remembrance Day. Canada will not stop advocating for the rights of the victims and survivors of this conflict, as well as for all in Sri Lanka who continue to face hardship.

"In October 2022, we joined our international partners in adopting an United Nations Human Rights Council (UNHRC) resolution that calls on the Sri Lankan government to address the human rights, economic, and political crises in the country. Canada has been a global leader in the adoption of other UNHRC resolutions calling for freedom of religion, belief, and pluralism in Sri Lanka – essential elements to secure peace and reconciliation in the years to come – and we will continue our work to safeguard human rights across the world. And in January 2023, our government imposed sanctions against four Sri Lankan government officials in response to human rights violations on the island.

"On behalf of the Government of Canada, I invite all Canadians to recognize the many contributions that Tamil-Canadians have made – and continue to make – to our country. I also encourage everyone to learn more about the impact of the armed conflict in Sri Lanka, and express solidarity to all those who suffered or lost loved ones."

அத்துடன், இலங்கைத்தீவில் புரியப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரச அதிகாரிகள் நான்கு பேர் மீது 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் எமது அரசு தடைகளையும் விதித்தது.

தமிழ்க் கனேடியர்கள் எமது நாட்டுக்கு ஆற்றிய மற்றும் தொடர்ந்து ஆற்றிவரும் பல்வேறு பங்களிப்புகளையும் கண்டுணருமாறு கனேடிய அரசின் சார்பாக அனைத்துக் கனேடியர்வளையும் நான் கேட்டுக்கொள்கிறேன். இலங்கையில் ஆயுதப் போரினால் ஏற்பட்ட தாக்கம் பற்றி அறிந்துகொள்ளுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், அன்புக்குரியவர்களுகளை இழந்தவர்களுக்கும் ஆதரவை வெளியிடுமாறும் அனைவரையும் ஊக்குவிக்கிறோன்” எனக் கூறிப்பிட்டார்.

# சிறீலங்கா தூதரகத்தின் எதிர்ப்பையும் மீறி கனடாவில் பிரம்டன் மாநகரத்தில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி!

மே 24, 2023

கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைக்கும் முயற்சிகளிற்கு கனடாவிற்கான சிறீலங்கா தூதரகம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தமிழர்களை நினைவு கூறுவதற்காக கனடாவில் உள்ள இலங்கை தமிழ் சமூகத்தினர் நினைவுத்தூபியை அமைப்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளிற்கே சிறீலங்கா தூதரகம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சிறீலங்காவின் எதிர்ப்பையும் மீறி பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின்போது இழக்கப்பட்ட உயிர்களை நினைவுகூறுவதற்கான தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார் என டெய்லிமிரர் தெரிவித்துள்ளது.



# கனடிய பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் Pierre Poilievre தமிழினப் படுகொலை நினைவு நாள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை!

மே 18. 2023

கனடாவின் பழமைவாதக் கட்சியின் (Conservative Party of Canada) தலைவர் கௌரவ Pierre Poilievre அவர்கள், தமிழின அழிப்பு நினைவு நாளையொட்டி வெளியிட்ட அறிக்கை.

"இலங்கையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ் மக்களும், ஏனைய கலாச்சாரக் குழுக்களும் தமது நாடு போரினால் பாதிக்கப்பட்டதால் கற்பனைக்கெட்டாத துன்பங்களை அனுபவித்தனர். பல தசாப்தகால வன்முறை மற்றும் அழிவுகள், எண்ணற்ற இலங்கையர்களின் மரணத்திற்கு வழிவகுத்தது. சமாதானத்துடனும் சுதந்திரத்துடனும் வாழ்வதைத் தவிர வேறு எதையும் விரும்பாத பல்லாயிரக்கணக்கான மக்கள், யுத்தத்தின் இறுதி மாதங்களில் கொல்லப்பட்டனர். பல வருட குழப்பத்தின் பின்னர், 2009 ஆம் ஆண்டில், முள்ளிவாய்க்கால் கிராமத்தில் போர் முடிவுக்கு வந்தது.

தமிழின அழிப்பு நினைவு நாளில், இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதி நாட்களில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களை நாம் மரியாதையுடன் நினைவுகூறுகிறோம். இலங்கையில் வரலாற்றில், இந்த இருண்ட அத்தியாயத்தின் போது கற்பனை செய்ய முடியாத கொடூரங்கள், இனப்படுகொலைகள் மற்றும் போர்க்குற்றங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெயர் அறியப்பட்டவர்களையும், அறியப்படாதவர்களையும் நாங்கள் நினைவுகூருகிறோம். நாம் ஒருமித்து, கடந்த காலத்தின் காயத்தை எதிர்காலத்திற்கான நம்பிக்கையாக மாற்றமுடியும்.

இராஜபக்ச ஆட்சிக்கு எதிர்த்து நிற்க உலக நாடுகளை வழிநடத்திய முன்நாள் பழைமைவாத அரசாங்கத்தின் அடிச்சுவடுகளை கனடா பின்பற்ற வேண்டும். இராஜபக்ச ஆட்சியின் இனப்படுகொலை மற்றும் இழிவான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, 2013 ஆம் ஆண்டு கனடா பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்தது. இதன் காரணமாக ஏனைய நாடுகளும் இதே வழியைப் பின்பற்ற நிர்ப்பந்திக்கப்பட்டு, இலங்கை அரசைத் தனிமைப்படுத்தி, உலகமே தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக நின்றது.

இன்று, பழமைவாத கட்சியினர் இந்த இனப்படுகொலையை செய்தவர்களுக்கு, பொறுப்புக்கூறுவதற்கான தங்கள் அழைப்பைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள். குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இராஜபக்சவை கைது செய்ய வேண்டும். அவர் தனது குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றிற்குப் பதிலளிக்கவேண்டும். என்ற கோரிக்கையில், இலங்கை மனித உரிமை ஆர்வலர்களுடன் நாங்களும் இணைந்து கொள்கிறோம். பிரதமர் என்ற வகையில், தமிழ் மக்களுக்காக நான் எழுந்து நின்று, இலங்கையின் செழிப்புக்கு இடையூறாக இருப்பவர்களை அகற்றவும் Magnitsky தடைகளை விதிக்கவும் பாடுபடுவேன்.




தமிழின அழிப்பு நினைவு நாளில், பழமைவாத கட்சியினர் இலங்கையில் உள்ள அனைத்து தனிநபர்களுக்குமான மனித உரிமைகள், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றனர். தமிழர்களுக்கும், மற்றும் அனைத்து இலங்கையர்களுக்கும் மனித உரிமைகளுடன் சமத்துவத்தையும் கொண்டு வரப் பாடுபடும் அனைவருக்கும் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். கடந்த காலத்தின் காயத்தை எதிர்காலத்திற்கான நம்பிக்கையாக மாற்றுவதற்கு அவசியமாகத் தேவையான வேலையை நாங்கள் ஒருமித்துச் செய்வோம்". - அறிக்கையில் தெரிவித்தார்.

# கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில் மின்சாரம் பயன்படுத்துவோருக்கு வெகுமதி!

மே 26, 2023

கனடாவில் மின்சாரத்தை குறைவாக பயன்படுத்துவோருக்கு வெகுமதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கனடாவின் ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

மக்கள் அதிக அளவில் மின்சாரத்தை பயன்படுத்தும் பீக் நேரங்களில் மின்சாரத்தை குறைவாக பயன்படுத்தும் நபரகளுக்கு இந்த சலுகை வழங்கப்பட உள்ளது.

முற்கொடுப்பனவு அடிப்படையிலான கடன் அட்டைகள் வெகுமதியாக வழங்கப்பட உள்ளது.

குறிப்பாக காற்று சீராக்கிகள் பயன்படுத்துவதனை வரையறுத்துக் கொள்ளும் மற்றும் மின்சார பயன்பாட்டை வரையறுத்துக் கொள்ளும் பயனர்களை இந்த வெகுமதி வழங்கப்பட உள்ளது.

இந்தத் திட்டத்திற்கு பீக் பாக்ஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

சக்தி வளத்தை குறைந்த அளவில் பயன்படுத்துவதற்கு விரும்பும் வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த திட்டம் அமல்படுத்த உள்ளது.

இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் வாடிக்கையாளர்கள் தங்களது காற்று சீராக்கியின் மத்திய கட்டமைப்பின் அல்லது வெப்ப உற்பத்தியாக்கியின் பிரதான அலகில் தெர்மோஸ்டாட் கருவியை பொருத்த அனுமதிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்து கருவி wi-fi தொழில்நுட்பத்தின் ஊடாக காற்று சீராக்கிகள் கட்டுப்படுத்தப்பட உள்ளன.

இந்த புதிய திட்டத்தின் ஊடாக 2025 ஆம் ஆண்டு அளவில் 650 மில்லியன் டாலர் பணத்தை சேமிக்க முடியும் என சக்திவள அமைச்சர் டட் ஸ்மித் தெரிவிக்கின்றார்.




இந்த திட்டத்தில் இணைந்து கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு 75 டாலர் பெறுமதியான இலத்திரனியல் முற்கொடுப்பனவ மாஸ்டர் கார்ட் வழங்கப்பட உள்ளது.

ஒன்றாரியோ மாகாணம் முழுவதும் சுமார் 6 லட்சம் ஸ்மார்ட் தர்மா ஸ்காட்ஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

# ரொறன்ரோவில் வெப்பநிலை தொடர்பில் வெளியான அறிவிப்பு!

மே 14, 2023

ரொறன்ரோவில் வெப்பநிலை அதிகரிப்பு தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் நிலவிய மிக அதிகளவு வெப்பநிலை எதிர்வரும் நாட்களில் ரொறன்ரோவில் பதிவாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனேடிய சுற்றாடல் திணைக்களம் இந்த விபரத்தை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஏழு நாட்களில் பகல் நேரத்தில் 26 முதல் 29 பாகை செல்சியஸ் வரையில் வெப்பநிலை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



வழமையாக ஆண்டின் இந்தப் பகுதியில் நிலவும் வெப்பநிலையை விடவும் கூடுதல் அளவில் வெப்பநிலை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் 15 முதல் 17 பாகை செல்சியஸ் அளவில் வெப்பநிலை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## தமிழ்நாட்டில் தலைதூக்கும் போதை கலாச்சாரம்!

மே 17, 2023

போதை கலாச்சாரத்தால் சீரழியும் நபர்களை மீட்டு அவர்களுக்கு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவரும், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

எதிர்கால இந்தியா இளைஞர்கள் கைகளில் இருக்கிறது என்று நம்பினார் காந்தியடிகள். "நூறு இளைஞர்களை என்னிடம் கொடுங்கள் இந்தியாவை மாற்றி அமைத்துக் காட்டுகிறேன்' என்றார் விவேகானந்தர். இவையெல்லாம் இளைஞர்கள் மீதும் அவர்கள் தம் ஆற்றல் மீதும் வைத்த நம்பிக்கை.

ஆனால், எதிர்கால தலைமுறையின் போக்கு திசை மாறி செல்வது பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. அதாவது, ஈரோட்டில் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா விற்பனை செய்த 2 இளம்பெண்கள் உள்பட 6 பேரை காவல்துறை கைது செய்துள்ளது.

மருத்துவத்திற்காக பயன்படுத்தப்படும் மாத்திரைகளை பயன்படுத்தி போதை கொள்ளும் பழக்கம், சமீப காலமாக, தமிழ்நாட்டில் இளைஞர்களிடையே அதிகரித்து வருகிறது என்ற தகவல் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்துகிறது. குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவர்களை குறிவைத்து போதை பொருள்கள் விற்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் மதுபோதையோடு விதவிதமான நவீன போதை பொருள்கள் அதிக அளவில் புழங்கி வருகின்றன. எதிர்கால சமுதாயத்தை தலைமை தாங்கி வழி நடத்த வல்ல வாய்ப்புகள் பல இருந்தும் சில சுற்றுப் புறத் தீமைகளால் ஈர்க்கப்பட்டுச் சீரழியும் அவலத்தை என்றவென்று சொல்வது?.

மதுவும், போதைப்பொருட்களும், தமிழ்நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஒரு தலைமுறையையே சமூகப் பொறுப்பற்றவர்களாகவும் கிரிமினல்களாகவும் மெல்ல மெல்ல மாற்றி வருகிறது.

பாலியல் பலாத்காரம் போன்ற பாவங்களைக் கல்வி நிலையங்களிலிருந்தே தொடங்கும் அவலங்கள் இளைஞர்களின் நெஞ்சில் வேரோடி வருகின்றன. கல்வி கற்கும் சூழல் ஒருபுறமிருக்க வீட்டிலோ தொலைக்காட்சியில் சிக்கித் தவிக்கும் சீரழிவை என்னென்பது?

கழிப்பான சுவரொட்டி விநோதங்கள் ஆபாசத் திரைப்படக் காட்சிகளைச் சுமந்த விளம்பரங்கள் இளைஞனின் அழிவுக்கு வரவேற்புக் கம்பளம் விரிக்கின்றன. இவற்றையும் தாண்டி விற்பனையாகும் போதைப் பொருள் மயக்கில் தன்னைத் தொலைத்துக் கொள்கிறான். இப்படியாகப் பல்வேறு நிலையில் தள்ளப்படும் இளைஞனின் சக்தி, அவனைச் சுற்றியுள்ள சூழலை மையமாக வைத்து நோக்கினால் அவன் அடைய வேண்டிய இலக்குக்குக் கடுமையாகப் போராட வேண்டியதாகவே உள்ளது.

எனவே, எதிர்கால சமுதாயத்தை வழிநடத்தக்கூடிய இளைஞர்களை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும், ஒன்றிய, மாநில அரசுக்கு உள்ளது. இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் போதைப் பொருட்கள் விற்பனையை தடுத்து நிறுத்த வேண்டும். போதை ஊசி மருந்துகளை சப்ளை செய்யும் கும்பலை கண்டறிந்து அவர்களை கைது செய்யும் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும்.

இவை தவிர, மருத்துவர்களின் பரிந்துரை இன்றி, மாத்திரைகள் வாங்க வருபவர்களுக்கு மாத்திரை கொடுக்க கூடாது அப்படி கொடுத்தால், சம்பந்தப்பட்ட மருந்தகத்தின் உரிமையாளர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசு முன் வரவேண்டும்.



பாடத்திட்டத்தின் வாயிலாக, போதைப்பொருட்கள், மதுவால் ஏற்படும் தீமை குறித்து விளக்குவது, மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதேநேரத்தில் பூரண மதுவிலக்கு என்பது, மனித சமுதாயத்தை அழிவில் இருந்து காப்பாற்றும் என்பதை புரிந்து செயல்பட வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது.

தற்போது, ஈரோட்டில் போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா விற்பனை செய்த 2 இளம்பெண்கள் உள்பட 6 பேரும், 25 வயதுக்கு குறைவானவர்கள். அவர்களுக்கான எதிர்காலம் உள்ளது.

அதனால், போதைப்பொருட்கள் பழக்கத்தால் ஏற்படும் உடல்நல பாதிப்பு, சமுதாய சீரழிவு குறித்து விழிப்புணர்வும், மதுவால் ஏற்படும் தீமை குறித்து, 6 பேருக்கு எடுத்து புரிய வைக்க வேண்டும். அச்சீரழிவில் இருந்து மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கும், காவல்துறைக்கு உள்ளது. அவர்களை திருத்தும் வகையில், ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கேட்டுக்கொள்கிறது என அறிக்கையில் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

## விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டில் சாராயம் அருந்தியவர்கள் 21 பேர் பலி!

மே 17, 2023

விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டில் சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21ஆக அதிகரித்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் உள்ள எக்கியர்குப்பத்தில் சாராயம் குடித்து இதுவரையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12ஆக இருந்து வந்த நிலையில், தற்போது பலி எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளது.

ராஜவேலு என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். மேலும் பலர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.

அதேபோல் செங்கல்பட்டு சித்தாமூர் அருகே பெருங்கரணை மற்றும் பேரம்பாக்கத்தில் சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் வரை 5 பேர் உயிரிழந்திருந்த நிலையில், ஜம்பு, சங்கர், முத்து ஆகியோர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தனர்.

இதன் நிலையில் திண்டிவனத்தில் கைது செய்யப்பட்ட பிரபல சாராய வியாபாரி மருவூர் ராஜா மீது விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி அவர்களின் உத்தரவின் பேரில் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார். இவர் திமுக மாமன்ற உறுப்பினர் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## தனுஷ்கோடியில் முள்ளிவாக்கால் நினைவேந்தல்!

மே 18. 2023

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி தனுஷ்கோடி அரிச்சல்முனையில் தமிழர் கட்சி சார்பில் அனுசரிக்கப்பட்டது.





இலங்கையில் உள்நாட்டு போரின் போது ஈழத் தமிழர்களை கொத்து கொத்தாக முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக்கப்பட்டதை அடுத்து ஆண்டுதோறும் உலக தமிழர்கள் மற்றும் இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களால் மே 18ஆம் தேதி முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இன்று மே 18ஆம் தேதி முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தையொட்டி தமிழர் கட்சி சார்பில், தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் உருவப்புகைப்படத்தை ரெஜிபோர்மில் உருவாக்கப்பட்ட படகில் வைத்து கடலில் விடப்பட்ட பின்னர் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை சென்னையிலுள்ள மெரினா கடற்கரையில் அமைக்க வேண்டும். மே 18 நினைவு தமிழின அழிப்பு நாளாக அறிவித்து அனுசரிப்பு தினமாக தமிழக அரசு நடத்த வேண்டும் என கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.

# தமிழ்நாட்டில் வரலாறு காணாத வெயில்! பொதுமக்களுக்கு மருத்துவர்கள் அறிவுரை

மே 17. 2023

தமிழ்நாட்டில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்து கொள்ள வேண்டும் என பொது மக்களுக்கு மருத்துவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில், கடந்த இரு தினங்களாக பல்வேறு மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக சென்னை, வேலூர், கடலூர், மதுரை, விழுப்புரம் , காஞ்சிபுரம் , திருவள்ளூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 16 மாவட்டங்களில் வெயிலின் அளவு 100 டிகிரி ஃபாரன்ஹீட்டாக பதிவாகியுள்ளது.

வெயிலின் அளவு அதிகரித்துள்ளதால், உணவு, உடை போன்று அன்றாட பழக்கவழக்கங்களில் சில கட்டுப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு காற்றோட்டம் அதிகமாக இருந்தது. தற்போது காற்றோட்டமே இல்லை. அதனால் தான் வெப்பநிலை அதிகரித்து காணப்படுகிறது. அதேபோல் காலையில் வெயில் குறைவாக இருக்கும், அதன்பிறகு வெயில் அதிகமாக காணப்படும், மாலையில் வெயில் குறைவாக இருக்கும், கடல் காற்று வீசும். ஆனால் தற்போது அதுபோன்று எதுவும் இல்லை.

இதன் காரணமாக உடலில் உள்ள நீரும், உப்பும் குறைந்து விடும். அதாவது உடலில் 70 சதவீதம் நீர் தான், அந்த நீர் குறைந்தவுடன் உடலில் உள்ள ஒவ்வொரு செல்கள் காய்ந்து சுருங்கி விடும். அதனால் செல்கள் வேலை செய்வது தடைபடும். உடல் வலி, சோர்வு போன்றவை ஏற்படும்.

சென்னை போன்ற கடற்கரை பகுதிகளில் உள்ளவர்களுக்கு கொஞ்சமாவது வியர்க்கும், தண்ணீர் தாகம் ஏற்படும். ஆனால் கடல் இல்லாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வியர்க்காது, தண்ணீர் தாகம் ஏற்படாது. அவர்கள் தண்ணீர் குடிக்க மாட்டார்கள்.

அவர்களுக்கு மயக்கம் ஏற்படவாய்ப்பு உள்ளது. எனவே தண்ணீர் மட்டுமல்ல, ஏதாவது நீர் ஆகாரங்கள் இளநீர், மோர், பழச்சாறு போன்ற ஏதாவது குடித்தால் நல்லது.

காலையில் எழுந்தவுடன் ஒரு லிற்றர் தண்ணீரை மொத்தமாக குடிக்கக்கூடாது. ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கு இரண்டு லோட்டா அளவு தண்ணீர் குடிப்பது தான் நல்லது.

சர்க்கரை நோய் உள்ளவர்கள், இரத்த அழுத்தம் அதிகம் உள்ளவர்கள் மருத்துவர்கள் பரிந்துரைந்த அளவு தண்ணீர் மற்றும் நீர் ஆகாரங்களை சாப்பிடுவது நல்லது.

மேலும், இளநீர் தான் குடிக்க வேண்டும் என்று இல்லை, ஏதாவது நீர் ஆகாரங்கள் குடிப்பது நல்லது. அதேபோன்று ஜீரணமாகக்கூடிய வேக வைத்த உணவுகளை உண்பது நல்லது. காரமான உணவுகளை தவிர்ப்பது நல்லது. எண்ணெயில் பொறித்த உணவுகள் குறிப்பாக, சைனீஸ் உணவு எனப்படும் துரித உணவுகளை தவிர்ப்பது மிக மிக நல்லது.

தண்ணீரை நன்றாக காய்ச்சி ஆற வைத்து குடிப்பது நல்லது. உடலில் எவ்வளவு வியர்வை வெளியேறுகிறதோ அதை சரி செய்யும் வகையில் தண்ணீர் குடிக்க வேண்டும்.



உடலில் தண்ணீர் இல்லையென்றால் உடல்வலி, சோர்வு போன்றவை ஏற்படும். வெயிலினால் மருந்து, மாத்திரைகள் விரைவில் கெட்டுப்போக வாய்ப்புள்ளது, அதனால் அளவுக்கு அதிகமான மருந்துகளை வாங்கி வைப்பதை தவிர்க்க வேண்டும் என மருத்துவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் சர்க்கரை நோயாளிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவர்களுக்கு காலில் உள்ள உணர்ச்சிகள் குறைந்து விடும் என்பதால் கால் சுடுவதும், வலியும் தெரியாது. அவர்கள் செருப்பு இல்லாமல் நடக்கக்கூடாது. காலையில் எழுந்திருக்கும் போது காலில் ஏதாவது கொப்பளம் ஏற்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும்.

தற்போது தண்ணீர் மூலம் மஞ்சள் காமாலை பரவக்கூடும், வியர்க்குரு, தட்டம்மை, அக்கி, தோல் வியாதி, உதடுகளில் பிளவு, நாக்கு வறட்சி, வலிப்பு, வயிற்றுவலி, தலைவலி, தலைசுற்றல், செரிமான கோளாறு, படபடப்பு, பேசும் போது உளறல், அரிப்பு போன்றவை ஏற்படும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# தமிழகத்தில் மூன்று ஈழத்தமிழ் இளைஞர்கள் பலி!

மே23, 2023

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அருகே உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வந்த மூன்று இளைஞர்கள் சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் ஒரு உந்துருளியில் சென்றுள்ளனர்.

அப்போது அவர்கள் “ரிக்ரொக்” இணையத்தில் பதிவிட தாங்கள் உந்துருளியில் செல்வதை கைபேசியில் காணொளி எடுத்தபடி செல்லவே ஒருகட்டத்தில் முன் சென்ற பார ஊர்தியை முந்திச் செல்ல முயன்றுள்ளனர்.

பாரவூர்தியை ஒரு வளைவில் அவர்கள் முந்திய போது விபத்தில் சிக்கியதாக கூறப்படுகிறது. இதில் உந்துருளியில் வந்த 3 பேரும் சிதறி விழுந்து சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கும்மிடிப்பூண்டி சிப்காட் காவல்துறையினர் இளைஞர்களின் உடலை மீட்டு பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில் விபத்து குறித்து அவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.



விசாரணையில் அவர்கள் மூவரும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை சேர்ந்த தயாளன் (வயது19), சார்லஸ் (வயது21), ஜான் (வயது20) என்பது தெரியவந்தது.

இதையடுத்து வழக்குப் பதிவு செய்த காவல்துறையினர் விபத்து ஏற்படுத்தியதாக பாரவூர்தி சாரதியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அனைத்து பாடசாலைகளிலும் தமிழ் மொழி கட்டாயம்!

மே 23, 202

சென்னை - தமிழை கட்டாய மொழி பாடமாக்க வேண்டும் என தனியார் பாடசாலைகள் இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ உட்பட அனைத்து பாடசாலைகளிலும் தமிழ் பாடத்தை பள்ளிக்கல்வித்துறை கட்டாயமாக்கி உள்ளது எனவும், அனைத்து தனியார் பாடசாலைகளும் மாநில பாடத்திட்டத்தில் தமிழ் பாடத்தை கற்பிக்க ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று தனியார் பாடசாலைகள் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,




அனைத்து வகை பள்ளிகளிலும் தமிழ், கட்டாய மொழி பாடமாக இருக்க வேண்டும்.

2024-25க்குள் அனைத்து தனியார் பாடசாலைகளும் 10ம் வகுப்பு வரை தமிழ் கற்பிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து பாடசாலைகளிலும் தகுதியான ஆசிரியர்களால் தமிழ் கற்பிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மாணவர்களுக்கு தமிழ் மொழியை திறம்பட கற்பிக்க தகுதியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

9 -12ம் வகுப்புகளில் கட்டாயமாக கூடுதல் மொழியாக தமிழ் கற்பிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட உத்தரவுகளை கடைப்பிடிக்க வேண்டும் என தனியார் பாடசாலைகள் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

## உலக செய்திகள்

# கென்யாவில் மூடநம்பிக்கையினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 200ஐ தாண்டியது!

மே 16, 2023

கென்யாவில் கடவுளை நேரில் காண போதகர் ஒருவரால் தவறாக வழிநடத்தப்பட்ட, பட்டினி வழிபாட்டில் மரணமடைந்ததாக கூறப்படும் விசுவாசிகளின் எண்ணிக்கை 201 என அதிகரித்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



சனிக்கிழமை, மேலும் 22 சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில் இந்த எண்னிகை அதிகரித்துள்ளது. பெரும்பாலான சடலங்கள் உருக்குலைந்து காணப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மீட்கப்பட்ட சடலங்கள் அனைத்தும் கென்யா வின் கட லோரப்பகுதியில் அமைந்துள்ள தேவாலயத்தின் விசு வாசிகள் என்றே கூறப்படுகிறது.

தொடர்புடைய தேவாலயத்தின் போதகர் பால் மெக்கன்சி இந்த விவகாரம் தொடர்பில் கைதாகியுள்ளார்.

இந்நிலையில், அந்த தேவாலயத்திற்கு தொடர்புடை யவர்கள் என கூறப்படும் 600 பேர்கள் வரையில் மாயமாகியுள்ளதாக பகீர் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த மாதம் கைது செய்யப்பட்ட மெக்கன்சி மீது பயங் கரவாதம் தொடர்புடைய வழக்குகள் பதியப்படும் என்றே அதிகாரிகள் தரப்பு கூறுகின்றனர்.

அதேவேளை சுமார் 800 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட அந்த தேவாலயத்தில் டசின் கணக்கான சவக்குழிகள் தோண்டப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

தற்போது அந்த குழிகளை தோண்டும் பணிகள் முன் னெடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமது தேவாலயத்தை 2019ல் மூடிவிட்டதாக மெக்கன்சி கூறி வருகிறார்.



மேலும் மீட்கப்பட்ட உடல்களில் கடந்த வாரம் 100 க்கும் மேற்பட்ட உடல்களில் நடத்தப்பட்ட உடற்கூறு ஆய்வுகளில், பாதிக்கப்பட்டவர்கள் பட்டினி, கழுத்தை நெரித்தல், மூச்சுத் திணறல் மற்றும் பொருட்களால் தாக்கியதால் ஏற்பட்ட காயங்களால் இறந்ததாக தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், பல சடலங்களில் உள்ளுறுப்புகள் மாயமாகியுள்ளதாக உள்ளூர் பத்திகைகள் தகவல் வெளியிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைதான போதகர் மெக்கன்சி மட்டுமின்றி, அவரது மனைவி உட்பட 16 சந்தேக நபர்கள் தற்போது நீதிமன்ற விசாரணையை எதிர்கொண்டு வருகின்றதாகவும் கென்யா தகவல்கள் கூறுகின்றன.

# சிறீலங்கா கொழும்பில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் முரண்பாடு!

மே 18, 2023

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையின் 14 வருட நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை சிறீலங்கா கொழும்பு பொரளைப் பகுதியில் காலை 10.30





மணிக்கு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், மற்றுமொரு குழுவினர் பதாதைகளை ஏந்தியவாறு நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை குழப்பும் முகமாக செயற்பட்டனர்.

இதன் போது ‘புலிகளின் நினைவேந்தல் வேண்டாம்’ என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை காணமுடிந்தது.



இதையடுத்து குறித்த பகுதியில் பதற்ற நிலை அதிகரித்த நிலையில், பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

வடக்குகிழக்கில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வு களிற்கான ஆதரவை வெளிப்படுத்தும் விதத்தில் சிறீ லங்கா கொழும்பில் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் இடம்பெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவிற்கு எதிராக புதிய தடைகளை வெளியிட்டன G7 நாடுகள்!

மே 19. 2023

குரூப் ஆஃப் செவன் (G7) முக்கிய தொழில்துறை நாடுகளின் தலைவர்கள் ஜப்பானில் வெள்ளிக்கிழமை தங்கள் உச்சிமாநாட்டைத்

தொடங்கியவுடன் அமெரிக்காவும் பிரிட்டனும் ரஷ்யாவிற்கு எதிராக புதிய பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.

ரஷ்ய வைரங்களை குறிவைக்க திட்டமிட்டுள்ளதாக லண்டன் கூறியது. அதே நேரத்தில் வாஷிங்டன் மாஸ்கோவிற்கு ஏற்கனவே உள்ள தடைகளைத் தவிர்க்க உதவும் நிறுவனங்களைப் பின்தொடரத் திட்டமிட்டுள்ளதாக பல செய்திகள் தெரிவித்தன.

இங்கிலாந்து ரஷ்ய வைரங்கள் மீதான தடையை விதித்து வருகிறது. மேலும் அமெரிக்கா கணிசமான தடைகள் தொகுப்பை வெளியிட உள்ளது.

அவர்களின் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக, G7 நாடுகளின் தலைவர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா மீது வீசப்பட்ட அணுகுண்டின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்தனர்.



# மெக்சிகோவின் முன்னாள் மேயருக்கு 92 வருட சிறை தண்டனை!

மே 19, 2023

மக்சிகோவில் கடத்தல் வழக்கில் தொடர்புடைய முன்னாள் மேயருக்கு 92 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு மெக்ஸிகோவின் தென் மாகாணமான குரேரோவின் இகுவாலா நகரில் 6 முக்கிய சமூக தலைவர்களை கடத்திய வழக்கில், 62 வயதான ஜோஸ் லூயிஸ் அபார்காவு-க்கு, 92 ஆண்டுகள் சிறைத் தண்டனையுடன் 52,000 டாலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் கடத்தப்பட்ட நபர்களில் ஆர்டுரோ ஹெர்னாண்டஸ் என்ற விவசாயத் தலைவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.

மெக்சிகோவில், நிகழ்ந்த மிகக் கொடுமையான மனித உரிமை மீறல்களிலும் அபார்க்கா ஈடுபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 2014-இல் பேருந்துடன் 43 மாணவர்கள் மாயமானதால், அதே ஆண்டு அவர் கைது செய்யப்பட்டு மத்திய மெக்சிகோவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார்.

# பப்புவா – நியூகினியில் டோக் பிசின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல் வெளியீடு!

மே 22, 2023

பப்புவா- நியூகினியில் டோக் பிசின் மொழியில், மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை இந்திய பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ளார்.

இந்தியா - பசிபிக் தீவுகள் ஒத்துழைப்புக்கான மன்றத்தின் மூன்றாவது உச்சிமாநாட்டையொட்டி இந்திய பிரதமர், நேற்று பப்புவா நியூகினிக்கு சென்றடைந்தார்.

இதன்போதே, டோக் பிசின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல் இந்திய பிரதமரினால் வெளியிடப்பட்டுள்ளது.

பப்புவா - நியூகினிக்கு சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்ற அந்நாட்டு பிரதமர் ஜேம்ஸ் மரபே, அவரது பாதங்களைத் தொட்டு, அவருக்கு சம்பிரதாய வரவேற்பு அளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# கொரோனாவை விட ஆபத்தான தொற்று நமது கதவைத் தட்டப்போகிறது; உலக சுகாதாரன நிறுவனம் எச்சரிக்கை!

மே 25, 2023

கொரோனாவை விட ஆபத்தான தொற்று நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கேப்ரியேசஸ் கூறியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் வருடாந்திரக் கூட்டம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானம் கேப்ரியேசஸ் பேசினார். அப்போது, கொரோனா பெருந்தொற்றால் உலகம் முழுவதும் இரண்டு கோடி பேர் இறந்துள்ளனர். இனி, கோவிட் பெருந்தொற்று உலகுக்கு அச்சுறுத்தலாக இருக்காது. ஆனாலும, அந்தப் பெருந்தொற்று முற்றிலுமாக மறைந்துவிடவில்லை. தொலைவில் இருக்கிறது. கொவிட் தொற்று நோயை விட, அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய மிகவும் ஆபத்தான தொற்று நோய் பரவ வாய்ப்பு உள்ளது. அந்தத் தொற்று பரவாமல் தடுப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு உலக நாடுகள் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இந்தப் புதிய பெருந்தொற்று கோவிட் பெருந்தொற்றைவிட அதிக உடல் பாதிப்புகளையும், உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தக் கூடியது என்பதால், அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக இருக்க வேண்டும்.

கொவிட் தொற்று நோய் வந்தபோது அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக இல்லை. அதன் காரணமாக அது மிகப்பெரிய சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியது. புதிதாக வரவுள்ள தொற்று நோயும் வீழ்த்தக் கூடியதாக இருக்காது. அது நமது கதவைத் தட்டப் போகிறது. நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிட்டால் அது நிச்சயம் நடக்கும். இப்போதே நாம் செய் யாவிட்டால், பிறகு எப்போது? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.



# அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவன போட்டியில் சாதனை படைத்த ஈழத்தமிழ் மாணவன்!

மே 25, 2023

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை, இகல்வெல்லல் யார்க்கும் அரிது" என்ற திருக்குறளுக்கு இலக்கணமாக ஒரு ஈழத் தமிழ் மாணவன் சர்வதேச அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளார்.

போருக்குள் பிறந்து, வளர்ந்து தாய் நிலத்தில் இருந்து அகதியாக தத்தளித்துச் சென்ற இந்த மாணவனின் சாதனை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மத்தியில் பாராட்டுக்களைப் பெற்று வருகிறது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவில் கல்வி கற்றுவரும் ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திரகுமார் மேனகா தம்பதிகளின் புதல்வனான அர்ச்சிகன் அமெரிக்காவில் உள்ள விண்வெளி குறித்த நிறுவனமான National Space Society (NSS) சர்வதேச ரீதியாக மாணவர்களிடையே நடாத்திய போட்டியில் வெற்றி பெற்று ஈழத் தமிழர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

விண்வெளியில் மனிதர்களைக் குடியமர்த்தும் போது பின்பற்ற வேண்டிய அறிவுசார் நுட்பங்களை உள்ளடக்கி, அவரது சிந்தனையில் உருவான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக NATIONAL SPACE SOCIETY (NSS) அறிவித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவன போட்டியில் உலகம் முழுவதும் 19 நாடுகளில் இருந்து 26725 பங்கேற்ற நிலையில், ஈழத்தமிழ் மாணவனான விஜேந்திர குமார் அர்ச்சிகன் அனுப்பிய செயற்றிட்டத்தை ஏேஏஅ அங்கீகரித்து, அவரை வெற்றியாளராக அறிவித்துள்ளதோடு, அமெரிக்காவில் உள்ள Texas மாநிலத்தில் NSS அமைப்பின் தலைமையில் இந்த மாதம் இடம்பெறும் அறிவியல் மாநாட்டிற்கும் அவர் அழைக்கப் பட்டிருப்பதுடன், அங்கு உரையாற்றும் வாய்ப்பினையும் பெற்றுள்ளார்.

இன்று சாதனை மாணவனாக பாராட்டுப் பெறும் அர்ச்சிகன் தாயகத்திலிருந்து தனது பெற்றோரோடு அனைத்தையும் இழந்து, வலிகளை மட்டுமே சுமந்து கொண்டு அகதியாக இந்தியாவிலே தஞ்சமடைந்திருந்தார்.

இம் மாணவனின் சாதனை எந்தச் சூழலிலும் சாதிக்க முடியும் என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக அமைந்துள்ளது. உலகம் முழுவதும் பல்வேறு தரப்பினரிடமிருந்து அர்ச்சிகனுக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளது.



# சீனாவில் ஒமிக்ரான் துணை வகை XBB வைரஸ் அச்சத்தில் மக்கள்!

மே 26, 2023

சீனாவில், ஒமிக்ரான் துணை வகை XBB வைரஸ் மூலம் மீண்டும் கொரோனா விரைவாகப் பரவி வருவதனால் மக்கள் அச்சத்தில் உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் புதியவகை கொரோனா அலை, ஜூன் மாத இறுதிக்குள் சீனாவில் உச்சம் தொடும் எனவும் அப்போது ஒரு வாரத்தில் 6.5 கோடி பேருக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ள நிலையில், இரண்டு புதிய கொரோனா தடுப்பூசிகளை சீனா விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.

கடந்த மே 22ஆம் திகதி சீனாவில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், சுவாச நோய்க்கான சீன தேசிய மருத்துவ ஆராய்ச்சி மையத்தின் இயக்குநரான நிஜாங் நன்ஷான் கூறுகையில்,

"ஒமிக்ரான் துணை வகை XBB வைரஸ் விரைவாகப் பரவுவதால் நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது உலகின் பிற பகுதிகளையும் பாதிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

சீனாவில் இருந்து உருவான கொரோனா, உலகம் முழுவதும் பல நாடுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில், தற்போது இந்தச் செய்தி உலக நாடுகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை 76ஆவது உலக சுகாதார மாநாட்டில், "கொரோனாவைவிட பெருந்தொற்றை எதிர்கொள்ள உலக நாடுகள் தயாராக இருக்க வேண்டும்" என்று உலக சுகாதார




அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதோனம் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# எவரெஸ்ட் சிகரத்தில் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவேந்தல்!

மே 27, 2023

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பல தமிழ் மக்கள் கொல்லப்பட்டு இந்த ஆண்டுடன் 14 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், உலக நாடுகள் பலவற்றிலும், குறிப்பாக, தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் இந்த முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டன.

அந்த வகையில், இலங்கையில் பிறந்து இங்கிலாந்தில் புலம்பெயர்ந்து வாழும் விவேகானந்தன் துஷியந்தன் என்ற 46 வயதான நபர் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவேந்தலை 8849 மீற்றர் உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் கடந்த மே மாதம் 18ஆம் திகதி அனுஷ்டித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது,

நான் கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்து மலையில் ஏறும் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றேன். ஆனாலும், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவேந்தலை எவரெஸ்ட் மலை சிகரத்தில் அனுஷ்டிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதுக்குள் இருந்தாலும், அதனை சாத்தியப்படுத்த கடந்த காலங்களில் நான் கடுமையாக பாடுபட்டேன்.

இதற்காக நான் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி எவரெஸ்ட் மலையின் சிகரத்தை நோக்கி ஏற ஆரம்பித்தேன்.

என்னுடன் 5 பேர் கொண்ட குழுவினர் எவரெஸ்ட் சிகரத்தை நோக்கி ஏற ஆரம்பித்தனர். இதன் முதல் நிலையாக பேஸ் கேம்ப் (Base Camp) 5350 மீற்றர் உயரம் வரை சென்று அங்கு தங்கியிருந்து, மீண்டும் முதலாவது கேம்ப் (Camp 1) 6000 மீற்றர் உயரம் வரை சென்றோம்.

பின்னர் அங்கிருந்து 2ஆவது கேம்ப் (Camp 2) 6400 மீற்றர்






உயரம் வரை சென்று, அங்குள்ள காலநிலைக்கேற்ப எம்மை தயார்ப்படுத்திக்கொண்டோம்.

அதன் பின்னர், அங்கிருந்து 3ஆவது கேம்ப் (Camp 3) 7300 மீற்றர் உயரத்துக்கு ஏறினோம். அங்கிருந்து 4ஆவது கேம்ப் (Camp 4) 7925 மீற்றர் உயரத்துக்கு ஏறினோம். அங்கும் எம்மை காலநிலைக்கேற்ப தயார்ப்படுத்தும்போது கடும் குளிரினால் எமது பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால், கடந்த மே மாதம் 18ஆம் திகதி, முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவேந்தல் தினமான அன்று நாம் 8849 மீற்றர் உயரமான எவரெஸ்டின் சிகரத்தை அடைந்து அங்கு நான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டித்தேன் என்கிறார் துஷியந்தன்.

விவேகானந்தன் துஷியந்தன் திருமணம் முடித்து இங்கிலாந்தில் வாழ்ந்து வருகின்றார். அவருக்கு 3 பெண்பிள்ளைகள் உள்ளனர்.

துஷியந்தன் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரையடுத்து 13 வயதில் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து சென்றுள்ளார்.

அத்தோடு இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார். மரதன், சைக்கிளோட்டம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடும் இவர் மலையேறுவதை ஆரம்ப காலங்களில் பொழுதுபோக்காக கொண்டிருந்தார்.

இந்நிலையில், 2010ஆம் ஆண்டு மலேசியாவின் கொற்றுகினபாலோ, 2016இல் ஆபிரிக்காவின் கிளிமஞ்சாரோ, 2020 இல் இங்கிலாந்தின் வேல்ஸ், 2022இல் நேபாளத்தில் ஜலன்பீக், லொபட்ரே, மனசிலு போன்ற மலைகளில் ஏறி பயிற்சி பெற்றுள்ளார்.

ஆரம்பகால மலையேறும் பயிற்சியை இவருக்கு ஜோன்குப்த வழங்கிய போதிலும், எவரெஸ்ட் மலையில் ஏறும்போது இவரது பயிற்சியாளராக யான்தப்பா இருந்துள்ளார்.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது இலங்கை தமிழனும், இலங்கையைச் சேர்ந்த ஆணும் தானே எனக் கூறும் துஷியந்தன், இதற்கு முன்னர் மலேசிய தமிழர் ஒருவர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியுள்ளதாக கூறுகிறார்.

தனது இனத்தின் மீதான பற்றும், நாட்டின் மீதான பற்றுமே தன்னை சிகரம் தொடுமளவு சாதிக்க வைத்ததாக கூறும் இவர், எவ்வளவு கஷ்டப்பட்டாலும் நாம் சாதிக்க வேண்டும் என உறுதிபட தெரிவிக்கிறார்.

# பயங்கரவாத தடைச்சட்டத்தை சிறீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் பயன்படுத்துகின்றது!

## சர்வதேச மன்னிப்புச்சபை

மே 27. 2023

பயங்கரவாத தடைச்சட்டத்தை கைவிடுவதாக தொடர்ச்சியாக உறுதியளித்துள்ள போதிலும் சிறிலங்கா அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்துவது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கரிசனை வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும் என விடுக்கப்படும் வேண்டுகோள்களையும் இலங்கை அரசாங்கம் புறக்கணிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

முகமட் அஸ்வர் முகமட் அனாஸ் முகமட் ஹபீர் ஜபீர் முகமட் சித்தீக் இராவுத்தர் மரீக்கார் ஆகிய நால்வரும் இலங்கை பொலிஸாரினால் மே 18ம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனசர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

நாங்கள் முன்னர் கரிசனை வெளியிட்டுள்ளபடி பயங்கரவாத தடைச்சட்டம் கண்மூடித்தனமான கைதுகளிற்கும் நீண்டகாலம் தடுத்துவைப்பதற்கும் துணைபோகின்றது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் காலத்திற்கு காலம் ஏதேனும் நியாயமான அல்லது உரிய செயல்முறை பாதுகாப்பின்றி சிறுபான்மையினத்தவர்களை இலக்குவைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை சித்திரவதைகள் போன்றவற்றின் மூலம் பலவந்தமாக வாக்குமூலம் பெறப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதவானிற்கு வழங்கிய தகவல்களின் படி அதிகாரிகள் மேலும் நால்வரிடம் வாக்குமூலங்களை பெறவுள்ளனர் அவர்கள் தாங்களும் கைதுசெய்யப்படலாம் என அச்சம்கொண்டுள்ளனர் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

அரசாங்கம் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவேளை இந்த விடயங்கள் கவலையை ஏற்படுத்துகின்றன என தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கான வரைவிலக்கணத்தை மேலும் விஸ்தரிக்க முயல்கின்றது எனவும் தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் இவ்வலுவான ஆதாரங்கள் இருந்தால் நியாயமான விசாரணை தரங்களை பயன்படுத்தி சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட குற்றத்திற்காக அவர்களிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தவேண்டும் எனவும் மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

2019 உயிர்த்தஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை உடனடியாகவும் பாரபட்சமின்றியும் சர்வதேச மனித உரிமைகள்தரநிலைகளிற்கு இணங்க முன்னெடுக்கவேண்டும் எனவும் மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# உலகப்பரபெங்கும் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!






























# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

LIFE INSURANCE

Mortgage Insurance Line of Credit Insurance

LiLAND

- Life Insurance (Whole / Term) ஆயுள் காப்புறுதி
- Non-Medical Up to Age 85 வயது வரை மருத்துவ பரிசோதனை அற்ற
- Critical Illness Insurance with 100% Cash back கொடிய நோய்களுக்கான காப்புறுதி கட்டிய பணம் முழுவதும் மீள பெற முடியும்

**20 வருடம் மட்டும் பணம் செலுத்தும் காப்புறுதி**

இருபது வருடங்களுக்கு பின் பணம் கட்ட வேண்டியதில்லை. ஆனால் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும். இருபது வருடங்களுக்கு பின் விரும்பினால் காசு பெறுமதியை **Cash Back Value** பெறமுடியும்.

**Living Benefits / Income Replacement**

- If you get sick, accident or soft tissue injury
- For Self-Employed
- For Business People if you don't have benefits
- 2 years, 5 years up to Age 70 (Long Term Disability) Claim எடுக்காவிட்டால் 50% பணம் மீள பெறமுடியும்

**Super Visa, RRSP Loan, RESP (Education)**

கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness) for 25 Sickness நோய் வராத பட்சத்தில் கட்டிய பணம் முழுக்க மீளப்பெற முடியும்.

(24 Yrs Experience)

**INCOME TAX**

E-FILING Tax

REFUND within 10 Days

- ★ Accounting
- ★ Bookkeeping
- ★ Payroll - HST
- ★ New Business Registration



இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

**Philip Chandran**

Liland Insurance

**416-450-9043**

philipsam0715@hotmail.com

வருமான வரித்தினைக்களகத்திற்கு நேரடியாக வருமான வரிப்படிவங்களை அனுப்புதல்.

உங்கள் வருமானவரி மீளளிப்புப் பணத்தை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளல்.

*INSURANCE IS LIKE YOUR MUM AND DAD*

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான் ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள் சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு நீதி பரிபாலனத்திற்கு அவசியம்!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



“பூரணமான சுயாட்சி அதிகாரங்களைக்கொண்ட தனியரசை நாம் இன்னும் உருவாக்கவில்லை. எனினுலம், நீண்டகால விடுதலைப் போரின் பெறுபேறாக எமது தாயகத்தின் பெருமளவு நிலப்பரப்பு மீட்கப்பட்டு எமது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை நாம் நிர்வகித்தபோதும் ஓர் அரசுபோல் முழுமையாக பரிபாலனம் செய்யும் அளவிற்கு எமது அமைப்பு வளர்ச்சியும், முதிர்ச்சியும் அடையவில்லை. இந்தக் குறைபாட்டிற்கு ஒரு காரணமும் இருக்கத்தான் செய்கிறது. அதாவது, நீண்டகாலமாக, எமது இயக்கம் எதிரியின் தாக்குதல்களுக்கு முகம்கொடுத்து போரிட்டுக்கொண்டிருந்ததால் எமது முழுக்கவனமும், சக்தியும் யுத்த நடவடிக்கைகளிலேயே திரும்பி இருந்தது. ஆயினும், காலக் கிரமத்தில் பல பகுதிகள் மீட்கப்பட்டு இன்று நாம் மீட்கப்பட்ட பிரதேசங்களை நிர்வகிக்கவேண்டி சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்குறோம். இன்று ஒரு புறம் யுத்தத்தை நடாத்திக்கொண்டு மறுபுறம் நிர்வாகத்தையும் நடாத்த வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டிருக்கிறது.

தமிழீழத் தனியரசு என்ற இலக்கை நோக்கி நாம் நகர்ந்துகொண்டிருக்கிறோம். அந்தத் தனியரசுக்கான அத்திவாரங்களை நாம் இப்போதிருந்தே கட்டி எழுப்பவேண்டும். சீவில் நிர்வாகத் துறையில் நாம் இப்பொழுதிருந்தே பயிற்சியும், தேர்ச்சியும் பெறாதுபோனால் மலரப்போகும் தமிழீழத்தில் அரச நிர்வாகத்துறையில் நாம் நிறையச் சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும். நீதித்துறை அரச நிர்வாக இயந்திரத்தில் முக்கிய பங்கைவகிக்கும் ஒரு நிறுவனம் என்பதால் இப்பொழுதிருந்தே இத்துறை சம்பந்தமாக எமது போராளிகளாகிய உங்களுக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

சமத்துவமும், நீதியும், மனிதாபிமானமும் தழைத்தோங்கும் ஒரு புதிய சமுதாயமாக தமிழீழத்தைக் கட்டி எழுப்பவேண்டும் என்பதே எமது இலட்சியம். இந்த இலட்சிய நோக்கை அடைவதற்காக எமது போராளிகள் ஒப்பற்ற தியாகங்களை, அர்ப்பணிப்புகளை செய்திருக்கிறார்கள். இந்தப் புனித இலட்சியத்துடன் உருவாக்கம்பெறும் ஒரு சமூக அமைப்பில் நேர்மையும், ஒழுக்கமும் இல்லாத மனிதர்கள் நிர்வாகத் துறையில் புகுந்து சமூகத்தைச் சீரழிக்க நாம் அனுமதிக்கமுடியாது. நாம் இரத்தம் சிந்திப் போராடும் இலட்சியத்தையே இது மாசுபடுத்திவிடும்.

சமூக நிர்வாகத்தில் நீதித்துறை பிரதானமானது. நேர்மை, ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளைக் கொண்டவர்களே நீதிபரிபாலனத்தைக் கையாளவேண்டும். முன்பு நீதி பரிபாலனத்திற்கென நாம் உருவாக்கிய இணக்கமன்றுகள் என்ற அமைப்பில் பல தவறுகள் நிகழ்ந்ததை நீங்கள் அறிவீர்கள். இந்த இணக்க மன்றுகளால் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் மக்களின் விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் இலக்காகின. சுயநலமற்ற முறையில் பாரபட்சமற்ற முறையில், நீதி வழுவாது தீர்ப்புகள் வழங்கப்படவில்லை. எனவேதான் ஒழுக்கமும், கட்டுப்பாடுமுடைய எமது இயக்கத்தைச்சேர்ந்த போராளிகளை நீதி நிர்வாகத்துறையில் பயிற்ற வேண்டுமென நான் விரும்பினேன்.

ஒரு பிரச்சினையை ஆராய்வதற்கும் தீர்ப்பு வழங்குதவற்கும் பிரத்தியேகமான மனப்பக்குவம் அவசியம். சுயநலமற்ற, சொந்த விருப்பு வெறுப்புக்கள் அற்ற, தனிப்பட்ட உணர்வுகளுக்கும், பந்த பாசங்களுக்கும் இடமளிக்காத ஒரு நேர்மையான பார்வை அவசியம். நீதியான தீர்ப்புக்களை வழங்குவதற்கு இப்படியான விசேட மனப்பண்புகள் இன்றியமையாதவை. மற்றவர்களது வெளித் தோற்றங்களிலோ, பேச்சு வன்மையிலோ ஏமாந்துபோகாமல் உண்மையைத் தேடிக்கண்டு கொள்ளும் ஆற்றலை நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். “கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்தறிவதே மெய்” என்ற முதுமொழிக்கமைய உண்மையைக் கண்டறிந்து, நீதியான தீர்ப்பு வழங்கப்படுவது அவசியம்.

ஒரு சமுதாயத்தில் குற்றச்செயல்களையும் அராஜகத்தையும் தடுத்து நிறுத்தி, சமுதாயத்தில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டவே நீதித்துறை தோற்றம் கொண்டது. எமது சமுதாயத்திலும் ஒழுங்கும் கட்டுப்பாடும், சமூக தர்மமும் வளர்ந்தோங்க எமது நீதி நிர்வாகம் செம்மையான முறையில் சீரமைக்கப்படவேண்டும். எமது தாயகத்தில் தனியரசை நிறுவும் போராட்டத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் நாம் ஒரு தரமான நீதிநிர்வாக கட்டமைப்பை இப்பொழுதிருந்தே உருவாக்க முயற்சி செய்வோம்.

இன்றைய உலக ஒழுங்கை பலம்தான் நிர்ணயிக்கிறது. வலுமிக்க வல்லரசுகள், தாம் விரும்பியவாறு சர்வதேச உறவுகளையும், சர்வதேச சட்டத்தையும் ஒழுங்கையும் உலகம்மீது திணித்துவருகின்றன. நெப்போலியன் யுகத்திலும் அப்படித்தான் நடந்தது. தான் படையெடுத்த நாடுகள் மீது தான் நெறித்த சட்டங்களையும் நீதிபரிபாலன முறையையும் நெப்போலியன் திணித்துவிட முயன்றான். மேற்கத்தைய காலனித்துவ வல்லரசுகளும் அப்படியே செய்தன. இன்று அமெரிக்காவும் வல்லரசுகளும் தமது பலத்தைக்கொண்டு தமது நலன்களைப்பேணும் வகையில் ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்க முயல்கின்றன. இந்திய வல்லரசு எமது தாயகத்தை ஆக்கிரமித்தபோது உள்நாட்டு நீதிமுறையை அலட்சியம்செய்த, தான் விரும்பியபடி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முயன்றது. இப்படியாக பலத்தையும் தேசிய சுயநலனையும் அடிப்படையாகக்கொண்டு உலகவல்லரசுகளிடமிருந்து எழும் அதிகாரப் போட்டிகளும் ஆக்கிரமிப்புகளும் மனித நீதியை மாசுபடுத்தி வருகின்றன. இப்படியான இன்றைய உலகத்தின் நடப்பியலை நாம் நன்கு படித்தறிந்துகொள்ளவேண்டும். எமது நாட்டிற்கு ஏற்ப, எமது மக்களின் நல்வாழ்விற்கு ஏற்ப, எமது சமூகத்தின் உயர்ச்சிக்கு ஏற்ப ஒரு தனித்துவமான தனிச்சிறப்புடைய நீதிபரிபாலன முறையை நாம் உருவாக்கவேண்டும்.


நாமும் ஒரு பலமான அரசைக் கட்டி எழுப்பவேண்டும். நமது நாடு பலம்மிக்கதாக இருந்தால்தான் வலுமிக்க அந்நிய ஆதிக்கங்களின் ஊடுருவல்களையும், தலையீடுகளையும், அழுத்தங்களையும் நாம் எதிர்கொள்ள முடியும்; எமது தனித்துவத்தை நாம் பேணமுடியும். ஒரு பலமான அரசுக்கு ஆதாரமாக நிற்கும் உறுதியான அரச நிறுவனங்களை நாம் இப்பொழுதிருந்தே கட்டி எழுப்பவேண்டும். நீதி நிர்வாகமானது ஒரு வலுவான அரசிற்கும், கட்டுப்பாடான சமூக அமைப்பிற்கும் ஆணிவேரானது. சமூக நீதி சரிவரப் பேணப்பட்டால்தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வளரும்.”

குறிப்பு: 25.01.1993 அன்று, தமிழீழ சட்டக் கல்லூரியில் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரிக்கிறோம்.


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# உன்னையும் என்னையும் போன்ற இளம்பிள்ளைகள் சிலர் வாழ்ந்தனர்... நம் சம காலத்தில் உனக்கு தெரியுமா?





உன்னையும் என்னையும் போன்ற இளம்பிள்ளைகள் சிலர் வாழ்ந்தனர்...
நம் சம காலத்தில் ,
உனக்கு தெரியுமா?

உன் நாவிலும் என் நாவிலும் நாள்தோறும் பேசும் தாய் தமிழைத்தான் அவர்களும் பேசினர்...!

உன்னையும் என்னையும் போல் அந்த இளம்பிள்ளைகள்.

வானுயர்ந்த புகழ்மிக்க பல்கலைகழங்களில் பட்டம் பெற்றவர்கள் அல்ல,
வானத்தைவிடவும் புகழ்மிக்க இலட்சியங்களோடு அவர்கள் வாழ்ந்தனர்...!

எந்த நடிகரையும் அவர்கள் தலைவராக கொண்டாடியதில்லை.
ஆனால்,
உன்னதமான ஒருவனை அவர்கள் தலைவனாக கொண்டிருந்தனர்.

அவர்கள் திரையரங்குளில் சத்தம் போட்டதில்லை.
பதுங்கு குழிகளின் நிசப்தம் அறிந்தவர்கள்...

விக்கெட்கள் விழுந்துவிட்டதற்காக பொறுமியவர்கள் அல்ல, விழும் பிணங்களுக்கு இடையே ரவைகளை பொறுக்கி கொண்டிருந்தவர்கள்...

அவர்கள் பொறியியல் படித்தவர்கள் அல்ல,
மின்சாரம் உற்பத்தி செய்யவும் வாகனங்களை தயாரிக்கவும் அவர்களுக்கு தெரியும்...!

விடுதலை வேள்விக்கான மூலப்பொருட்களிலிருந்து முழுமையான தளவாடங்கள் வரை அவர்களே தயாரித்தனர்...!

அவர்கள் மாலுமிகள் அல்ல,
கப்பலோட்டினர்...!
அவர்கள் விமானிகள் அல்ல,
விமானம் இயக்கினர்...!
அவர்கள் தத்துவம் படித்தவர்கள் அல்ல,
தத்துவமாகவே வாழ்ந்தனர்...!

அவர்களில் பலர் பள்ளிப்படிப்பையே முடித்தது கிடையாது.
ஆனாலும் அவர்களைப்போல் களத்தில் யாரும் பாடம் கற்பிக்க முடியாது.

அவர்கள் வாழ்வின் அர்த்தம் அறிந்தவர்கள் அல்ல, ஆனால் அவர்களைப்போல் அர்த்தமுடைய வாழ்வை யாரும் வாழ்ந்துவிட முடியாது...!

அவர்கள் புனித நூல்களின் வார்த்தைகளை ஓதியவர்கள் அல்ல,
ஆனால் அவர்கள் உச்சரித்த மண் விடுதலை என்ற வார்த்தையை விட புனிதமானது வேறில்லை...!

எந்த துறவியைவிடவும் அவர்களுடைய துறவறம் உயர்ந்தது...!

எந்த தவசிகளின் தவங்களை விடவும் அவர்களின் விடுதலை தவம் உயர்ந்தது...!

அவர்கள் ஒவ்வொரு நாளும் அடிபட்டு வாழ்ந்தனர்...!
ஒரு நாளும் அடிமையாய் வாழ்ந்ததில்லை...!



அவர்கள் இருந்தவரை அவர்களுடைய மண் அவர்களுடையதாக இருந்தது...!

அவர்கள் இருந்தவரை அவர்களுக்கென்று ஒரு தேசம் இருந்தது...!

அவர்கள் மண் அவர்களிடம் இல்லாமல் போனபோது அவர்கள் இந்த மண்ணிலேயே இல்லாமல் போயினர்.


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
FREE EFILE SERVICE
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
www.kevtax.com
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866 / FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


AR GROUP
Arasan
ARASAN RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643




# யாழ் நூலக எரிப்பு: அடையாள அழிப்பின் ஆறா வடு!



**ஈழத் தமிழனின் வாழ்வில் சிங்கள வெறியர்களால் 01.06.1981 அன்று யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்டு ஆறாத வடுவின் 42ம் ஆண்டு நினைவுகள் தாங்கிய நாள் இன்றாகும். இலங்கையின் இனப்பிரச்சினையில் ஓர் முக்கிய நிகழ்வாக, விளைவுகளை உருவாக்கிய வன்முறையாக அமைந்த யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்ட நாள் இன்றாகும்.**

ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை என்பார்கள். வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் புலமைச் சொத்தாக கருதப்பட்டு வந்த யாழ் நூலகம் எரித்துச் சாமபலாக்கப்பட்ட சம்பவம் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கறையாக ஆகி விட்டிருக்கிறது.

தமது தமிழ் மரபையும், வரலாற்றையும் ஆவணப்படுத்தி வைத்திருக்கும் ஒரு தொல்பொருள் வைப்பகமாகவும் தான் பேணப்பட்டு வந்தது. மீளப் பெற முடியாத அரிய நூல்களையும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரான ஏடுகளும் கூட அங்கு பாதுகாக்கப்பட்டு வந்தன. அந்த நூலகம் அரசு கொடுத்தத்தல்ல. அன்றைய தமிழ் புலமையாளர்கள் சேர்ந்து உருவாக்கியது. பின்னர் தான் அது மாநகர சபை கையேற்று நடத்தியது.

70களின் இறுதியில் வடக்கு கிழக்கெங்கும் தொல்பொருள் ஆய்வுகள் என்கிற பேரில் கண்டு பிடிக்கப்பட்டவற்றைக் கொண்டு ஆதலால் வடக்கு கிழக்கு முழுவதும் சிங்களவர்களின் பிரதேசங்கள் என்று நிறுவும் வேலைத்திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை மறுத்தொதுக்குவதற்கான இந்த வேலைத்திட்டத்தில் அரசின் உதவியுடன் பல்வேறு இனவாத அமைப்புகள் பல முனைகளில் திட்டமிட்டு மேற்கொண்டிருந்தன. 77 இனக் கலவரத்தை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிடம் கூட சாட்சியமளித்த பல இனவாத சக்திகள் கலவரத்தைப் பற்றி பேசுவதை இந்த தொல்பொருள் ஆதாரங்களைப் பற்றியே அதிகம் பேசின என்பது அந்த சாட்சியங்களில் இருந்து காண முடியும். மடிகே பஞ்ஞாசீல தேரர், ஹரிச்சந்திர விஜேதுங்க, எச்.எம்.சிறிசோம போன்றோர் அங்கு பெரிய அறிக்கைகளையே சமர்ப்பித்தனர். அவை சிறு கை நூல்கலாவும் கூட சிங்களத்தில் வெளியிடப்பட்டன.

**யார் இந்த சிறில் மெத்தியு**

அந்த பாதையில் வளர்த்தெடுக்கப்பட்டவர் தான் சிறில் மெத்தியு. இலங்கையின் வரலாற்றில் பல இனவாதிகளை உருவாக்கிய முக்கிய கோட்டையாக அன்றிலிருந்து இன்றுவரை திகழ்வது களனி பிரதேசம். அந்தத் தொகுதியின் ஐ.தே.க. அமைப்பாளர் சிறில் மெத்தியு. 1977 தேர்தலில் களனி தொகுதி மக்களால் வெற்றியடையச் செய்யப்பட்டவர் சிறில் மெத்தியு. அதே தொகுதியைச் சேர்ந்தவர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜே.ஆர் சிறில்



மெத்தியுவுக்கு தொழில் மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சராக நியமித்தார். 1980ஆம் ஆண்டு சிறில் மெத்தியு தனது அதிகார பலத்துடன் வடக்கில் அகழ்வாராய்ச்சிகளை விஸ்தரிப்பதற்காக அதிகாரிகளை அனுப்பி தனது வழிகாட்டலின் பேரில் மேற்கொண்டார்.


இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக “அரச தொழிற்துறை பௌத்த சங்கம்” என்று ஒன்றை ஆரம்பித்து திருமலையில் புல்மூடை - குச்சவெளி பிரதேசத்தில் “அரிசிமலை ஆரண்ய சேனாசனய” என்கிற ஒரு பௌத்த தளத்தை ஆரம்பித்தார். சிறில் மெத்தியு தயாரித்த அறிக்கையை அதிகாரபூர்வமாகவே இலங்கையின் கலாசார உரிமைகள் பற்றி யுனெஸ்கோ நிறுவனத்திடம் கையளித்து அந்த பிரதேசங்களை பாதுகாத்து தருமாறும் முறைப்பாடொன்றை செய்தார். அந்த அறிக்கை இன்று வரை சிங்கள தேசியவாதிகளால் போற்றப்பட்டுவருகிறது. வடக்கு கிழக்கு சிங்களவர்களின் பூர்வீக உடமை என்கிற வகையில் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் பௌத்தமதமும், அதன் செல்வாக்கும் இருந்திருக்கிறது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் அந்த வரலாற்றை சிங்களத்துடன் இணைத்து சிங்கள பௌத்த வரலாறாக புனையும் சிங்கள பேரினவாதம் அதை காலாகாலமாக செய்து வருகிறது. தமிழ் பௌத்தம் என்கிற ஒன்று இருந்தது என்பதையும், அதன் செல்வாக்குக்குள் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்கிற உண்மையை ஏற்றுக்கொண்டு, அதை உறுதி செய்வதன் மூலமே சிங்கள பௌத்த புனைவுகளுக்கு பதிலடி கொடுக்க முடியும் ஆனால் யாழ் - சைவ - தமிழ் மையவாத மரபு அதற்கு இடங்கொடுப்பதில்லை. தமிழ் பௌத்தத்தை கொண்டாட அந்த மரபு இடங்கொடுப்பதில்லை. வெகு சில




ஆய்வுகளையே அப்படி காண முடிகிறது.

தமிழர்களுக்கு உரிமை கோருவதற்கு அங்கு ஒன்றும் இல்லை. அது பயங்கரவாதக் கோரிக்கைகளே என்று நிறுவும் வகையில் அவர் நூல்களை எழுதி பிரசுரித்தார். “கவுத கொட்டியா?” (புலிகள் யார்? - 1980), “சிஹளுனி! புதுசசுன பேராகனிவ்” (சிங்களவர்களே பௌத்தத்தைக் காத்திடுங்கள்!) என்கிற நூல்கள் மிகவும் மோசமான இனவாத நூல்கள். தன்னை தீவிர சிங்கள பௌத்தனாக ஆக்கிக்கொண்ட சிறில் மெத்தியு தமிழ் விரோத போக்கையும், வெறுப்புணர்ச்சியையும் வளர்த்துக்கொண்டிருந்தவர்.



யாழ் நூலக எரிப்புக்கு சிறில் மெத்தியு மட்டும் பொறுப்பில்லை. அதற்கு ஏதுவான இனவாத அலை ஏற்கெனவே வளர்தெடுக்கப்பட்டு, நிருவனமயப்படுத்தப்பட்டுத் தான் இருந்தது. ஆனால் சிறில் மெத்தியு அந்த உடனடி நிலைமைகளுக்கு தலைமை கொடுத்தார் என்பது வெளிப்படை. இந்த காலத்தில் சிறில் மெத்தியு பாராளுமன்றத்தில்

சிறில் மெத்தியு ஆற்றிய உரைகளில் இனவாத விசர்நாயொன் றின் கர்ஜனைகளைக் காண முடியும்.

சிறில் மெத்தியுவின் இந்தப் போக்கை ஐ.தே.க அரசாங்கமும் ஜே.ஆரும் கண்டுகொள்ளவில்லை. தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவை சிறில் மெத்தியுவால் சகிக்கக் கூட முடியவில்லை. எம். சிவசிதம்பரம் சிறில் மெத்தியுவுக்கும் இடை யில் பாராளுமன்றத்தில் கடுமையான வாதம் நிகழ்ந்தது. தமிழ் மாணவர்களை குறுக்குவழியில் பல்கலைக்கழகத்துக்கு அனுப் புவதற்காக வினாத்தாள் திருத்துனர்கள் மோசடி செய்து அதிக புள்ளிகளை வழங்கினார்கள் என்று பகிரங்கமாக குற்றம் சாட் டினார். அந்த விவாதத்தில் அவரை ஆதாரத்தை முன்வைக்கக் கோரியபோதும் கையில் ஒரு கடுதாசியை வைத்துக் கொண்டு கடைசி வரை சமர்ப்பிக்கவில்லை. ஆனால் இன்று வரை சிங் கள நூல்களில் சிறில் மெத்தியு கூறியது உண்மை என்றே பதிவு செய்யப்பட்டுள்ளதையும் காண முடிகிறது.

“நாம் எதனையும் ஏற்றுக்கொள்வோம் ஆனால், நேர்மையற்றவர்கள் என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது... கஷ்டப்பட்டு படித்துப் புள்ளிகள் பெறும் மாணவர்களை நோகடிகின்ற, இழிவுசெய்கின்ற கருத்துக்கள் இவை” அவர் ஆத்திரத்துடன் உரையாற்றினார்.

வடக்கில் எழுச்சியுற்ற தமிழர் உரிமை இயக்கங்களை எதிர் கொள்ள இப்படியான சக்திகள் சிங்களத் தரப்புக்கு தேவைப் பட்டுக்கொண்டிருந்தது. குறிப்பாக அரசாங்கத்துக்குள்.


**ஐ.தே.வின் மானப் பிரச்சினைக்கு விலை**

வடக்கில் தமிழ் இளைஞர்களின் எழுச்சி அரசாங்கத்துக்கு ஒரு பெரும் சவாலாகவே இருந்தது. 77 கலவரம் நிகழ்ந்து அதன் மீதான விசாரணையும் கூட அந்த சூட்டைத் தணிய வைக்க வில்லை. மாவட்ட சபைகள் தேர்தலில் கூட்டணியுடன் போட்டி யிட்டு எப்பெரும் விலையைக் கொடுத்தாவது பல ஆசனங் களைக் கைப்பற்ற வேண்டும் என்று களம் இறங்கியது ஐ.தே. க. அருவருக்கத்தக்க தேர்தல் மோசடிகளில் இறங்கியது பற்றி பல சர்வதேச அறிக்கைகள் கூட சுட்டிக் காட்டியுள்ளன. வாக்குப் பேட்டிகள் சூறையாடப்பட்டன. பொலிசாரின் கெடுபிடிகள் சாமான்ய மக்களுக்கு அதிரித்திருந்தன.

இந்த நிலையில் ஐ.தே.க நியமித்திருந்த பிரதான வேட்பாள ரான தியாகராஜா தமிழ் இயக்கங்களால் குறி வைக்கப்பட் டிருந்தார். அவர் மே 24 அன்று அவர் கொல்லப்பட்டார். ஐ.தே.கவுக்கு இது பேரிடியாக இருந்தது. வெற்றி வாய்ப்புகள் கைநழுவிப் போவதை உணர்ந்த அவர்கள் இதனை தமக் கெதிரான சவாலாகவே பார்த்தனர்.

தேர்தல் பணிகளை நேரில் நின்று கவனிப்பதற்காக ஜே.ஆர், அமைச்சர் சிறில் மெத்தியுவையும், மெத்தியுவுக்கு நெருக்கமான அமைச்சர் காமினி திசாநாயக்கவையும் அவர்கள் தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், அமைச்சரவை யின் செயலாளர் ஆகியோரைக் கொண்ட ஒரு சிறப்புக் குழுவை மே 30 ஞாயிறு அன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். அதைவிட ஏற்கெனவே அதிகளவில் பொலிசார் குவிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்துக்கு மேலதிகமாக வெளி மாவட்டங்களிலிருந்து 500 பொலிசாரிக் கொண்ட ஒரு பெரும் படையும் அனுப்பப்பட்டது. ஒரு பெரும் அசம்பாவிதத்துக்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்படுவதை யாழ்ப்பாண மக்கள் அறிந்திருக்கவில்லை.

தேர்தலுக்கு இன்னும் 4 நாட்களே இருந்த நிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் பரபரப்புமிக்கதாக இருந்தது. மே.31 ஆம் திகதி தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் அம்மன் கோவிலடியில். இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த மூன்று பொலிஸார் இளைஞர் சிலரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் கானார்கள். இரண்டு பொலிஸார் ஸ்தலத்திலேயே உயிரிழந் தார்கள்.




## எரித்து நாசமாக்கப்பட்ட யோகேஸ்வரன் எம்.பியின் வீடு

**அரச பயங்கரவாதம்**

சொற்ப நேரத்தில் அங்கு விரைந்த ஆயுதமேந்திய பொலிஸ் படையொன்று தமது வெறியாட்டத்தைத் தொடங்கியது. வீதியில் கண்டவர்களையெல்லாம் அடித்து துன்புறுத்தினர். வீதி வெறிச் சோடியது. ஆத்திரத்தில் அருகில் இருந்த அனைத்தையும் சின்னாபின்னப்படுத்தினர். 150க்கும் மேற்பட்ட கடைகள் கொள் ளையிடப்பட்டும் தீயிடப்பட்டும் நாசம் செய்யப்பட்டன. அருகி லிருந்த கோவிலுக்கு தீவைத்த அவர்கள், தொடர்ந்து அருகி லிருந்த வீடுகளையும் வீதியிலிருந்த வாகனங்களையும் தீக் கிரையாக்கத் தொடங்கினர். பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு சாம்பலாக்கப்பட்டு தரைமட்ட மாக்கப்பட்டது. யோகேஸ்வரனும் அவரது மனைவியும் மயி ரிழையில் உயிர் தப்பியோடினர். ஈழநாடு பத்திரிகைக் காரி யாலயம் தீ வைத்து கொளுத்தப்பட்டது. அதன் ஆசிரியர் கோபாலரத்தினம் கொடூரமாக தாக்கப்பட்டார். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயமும் தீ வைத்து நாசமாக்கப்பட்டது. நான்கு தமிழர்கள் வீதிக்கு இழுத்து வரப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்கள். யாழ்ப் பாணப் பெரிய கடையில் கட்டியெழுப்பப்பட்ட திருவள்ளுவர் சிலை, ஔவையார் சிலை, சோமசுந்தரப் புலவர் ஆகியோரின் சிலைகளும் உடைத்து துவம்சம் செய்யப்பட்டன.


இந்த அராஜகத்தை யாழ்ப்பாண விருந்தினர் விடுதியில் இருந் தபடி இயக்கிக் கொண்டிருந்தார்கள். சிறில் மெத்தியு, காமினி திசாநாயக்க தலைமையிலான குழு. ஏற்கெனவே இறக்கப் பட்டிருந்த நூற்றுக்கணக்கான காடையர்களும் தம் பங்குக்கு கொள்ளைகளிலும், நாசம் செய்வதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் அவசர கால சட்டம், அமுலில் தான் இருந்தது. சக லதும் முடிந்த பின்னர் தான் காலம் கடந்து ஜுன் 2அன்று ஊர டங்கு சட்டத்தைப் பிறப் பித்தது அரசாங்கம். அந்த சட்ட நடவடிக் கைகள் காடையர் களுக்கு பாதுகாப் பையும், பாமரர் களுக்கு இழப்பையும் தான் தந்தது. மொத்தத் தில் சொல்லப்போனால் அரச பயங்கரவாதம் இந்த சட்டங்களின் மூலம் மேலதிக அதி காரங்களுடனும், வசதிகளுடனும் மக்களை கட்டிப்போட்டு சூறையாடியது. அவர்களின் சொத்துக்களை அளித்து சின்னாபின்னமாக்கியது.





சிறில் மெத்தியு, பிரேமதாச, லலித் அத்துலத் முதலி, ஹெக்டர் ஜெயவர்த்தன, ஜே.ஆர்.ஜெயவர்த்தன

இரவிரவாக நடந்த இந்தக் கொடுமை களுக்கு இடைவேளை கொடுக்கவில்லை. அவர்களின் நாசகர தாகமும் அடங்க வில்லை. மறுநாளும் தொடர்ந்தது ஜுன் 1 அவர்கள் யாழ் பொது நூலகத்துக்குள் நுழைந்தார்கள். அங் கிருந்த 97,000க்கும் மேற்பட்ட நூல்களை யும், காலங்காலமாக பாதுகாக்கப்பட்டு வந்த ஓலைச்சுவடி களையும், பல கை யெழுத்து மூலப் பிதி களையும் சேர்த்து கொளுத்தினார்கள். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற “யாழ்ப் பாண வைபவ மாலை”யின் ஒரேயொரு மூலப் பிரதியும் அழிக் கப்பட்டவற்றுக்கு உதாரணம்.





இரவிரவாக தீயில் பொசுங்கிக் கொண்டிருந்த அந்த புலமைச் சொத்துக்களுடன், பல்லாயிரக் கணக்கானோரை உருவாக்கிய அந்த நூலகம் எரிந்துகொண் டிருந்ததை யாழ். புனித பத் திரிசியார் கல்லூரியின் மேல் மாடிக் கட்டடத்தில் வாழ்ந்து வந்த 74 வயதுடைய தாவீது அடிகள் இதனைக் கண்ணுற்ற அதிர்ச்சியில் மாரடைப்பில் உயிர்துறந்தார்.



"தமது புலமைச் சொத்தின் ஒட்டுமொத்த அழிப்பின் அடையாளமாகவே பார்த்தார்கள். பொது நூலக எரிப்பானது, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் அடக்குமுறைமிக்க அரசுக்கு எதிராகத் திருப்பியது' என்று குறிப்பிடுவார் பேராசிரியர் சிவத்தம்பி.

மா.க. ஈழவேந்தன் தமிழினத்தின் மீதான பண்பாட்டுப் படுகொலை என்றார்.



பேராசிரியர் சுனில் ஆரியரத்ன தமிழ் மொழி, கலை, பண்பாடு என்பவற்றை சிங்கள சமூகத்து கொண்டு போய் சேர்க்கும் முக்கிய சிங்கள புலமையாளர். யாழ் பல்கலைக்கழகத்திலும் கற்றவர். அவர் இப்படி குறிப்பிடுகிறார்.

"ஆயிரக்கணக்கான வரலாற்று இதிகாசங்களைக் கொண்டவர்கள் தமிழ் மக்கள். மிகவும் கிடைத்தற்கரிய நூல்களையும் கொண்டிருந்தது யாழ் நூலகம். நாங்கள் எங்களுக்குத் தேவையான நூல்களை பல்கலைக்கழக நூலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட போதும் அதை விட மேலதிகமான தேவைகளுக்கு யாழ் போது நூலகத்தையே நாடினோம். உலகில் எங்கும் கிடைத்திராத நூல்களும், இந்தியாவில் கூட கிடைத்திராத பல நூல்கள் ஆவணங்களும் பாதுகாப்பாக அங்கு இருந்தன. இனி அந்த நூல்களை எந்த விலை கொடுத்தாலும் நமக்கு கிடைக்கப்போவதில்லை. புராண வரலாற்று தொல்லியல் சான்றுகளை எரித்து அழித்ததற்கு நிகர் இது."

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சுவாமிநாதன் விமல் இப்படி கூறுகிறார்.

"காலனித்துவகாலத்து நூல்களும், யாழ்ப்பாணத்தின் கல்வி மறுமலர்ச்சி சம்பந்தப்பட்ட மூல ஆவணங்களும், ஈழத்து தமிழ் இலக்கியத்தை வெளிப்படுத்தும் எங்கும் கிடைத்திராத நூல்களும் கூட இங்கு சேகரிக்கப்பட்டிருந்தன."

இலங்கையின் அரச பயங்கரவாதம் காலத்துக்கு காலம் கலவரங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தலைமை கொடுத்து வந்திருக்கிறது தான். இதற்கு முந்திய 1939, 1956, 1958, 1977 முக்கிய கலவரங்களின் போதும் அழிவுகளை ஒவ்வொரு கோணத்தில் கண்ணுற்றிருக்கிறோம் ஆனால் 1981 இல் அழித்தவற்றில் தலையாய இழப்பாக, மறக்கவும், மன்னிக்கவும் முடியாத இழப்பாக பதிவானது யாழ் நூலக அழிப்பு.



தென்னாசியாவின் சிறந்த நூலகமாகவும், இலங்கையின் இரண்டாவது பெரிய நூலகமாகவும் அறியப்பட்டது அது.

**கணேசலிங்கத்தின் வாக்குமூலம்**



யாழ் நூலக எரிப்புக்கு காரணமான எவரும் இறுதிவரை உத்தியோக பூர்வமாக தண்டிக்கப்படவில்லை. அவர்கள் எவரும் சட்ட ரீதியாக குற்றம் சுமத்தப்படவுமில்லை. ஆனால் 1993 மார்ச் மாதம் அப்போது வெளிவந்த சரிநிகர் பத்திரிகைக்கு ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் இனப்பிரச்சினை குறித்த ஒரு பேட்டியை வழங்கியிருந்தார். அதில் அவர் அன்றைய கொழும்பு மேயரும், ஐ.தே.க.வின் பொருளாளருமாக இருந்த கே.கணேசலிங்கத்துடன் ஒரு உயர்ஸ்தானிகரின் வீட்டு விருந்தொன்றில் பரிமாறிக் கொண்ட கருத்துக்களை வெளியிட் டிருந்தார்.

"அங்கு மது பரிமாறப்பட்டிருந்தது "க" போதை நிலையில் இருந்தார். 1981 யாழ் நூலக தீவைப்புக்கு நீங்களும் மெத்தியு போன்றோருக்கு உடந்தையாக இருந்திருக்கிறீர்களே:"

என்று கேட்ட கேள்விக்கு.



கணேசலிங்கம்: "அந்த நேரம் கள்ள வாக்குகளைப் போடுவத காகத்தான் நாங்கள் போயிருந் தோம் என்பது உண்மை.... நானோ, சிறில் மெத்தியுவோ, காமினியோ பெஸ்ரல் பெறே ராவோ காரணமல்ல. அதைச் செய்தது பொலிஸ் அதிகாரி ஹெக்டர் குணவர்த்தன தான். நாங்கள் அதைத் தடுக்க வில்லை."

ஐவன்: 83 கலவரத்தில் சிறில் மெத்தியுவுக்கு நேரடிப் பங்கு இருந்ததை ஏற்றுக் கொள்கிறீர்களா?

கணேசலிங்கம்: "1983 கலவரத்திற்கு நானும் பங்களிப்பு செய்திருக்கிறேன். நானும் சிறில் மெத்தியுவும் மட்டுமல்ல அரசோடு இருந்த எல்லா சிரேஷ்ட அரசியல் வாதிகளும் அக்கலவரத்தைப் பாவித்தார்கள்... தமக்கு தேவையானதை செய்துகொண்டார்கள். காமினி, லலித், மெத்தியு, பிரேமதாச அனைவரும் பாவித்தார்கள். நாங்கள் எவரும் யோசிக்கவில்லை அது அவ்வளவு சிக்கலைக் கொண்டு வரும் என்று. சாதாரணக் கலவரத்தைப் போல எழும்பி அடங்கி விடுமென்றே கருதியிருந்தோம்"

ஐவன்: "இப்படி ஒரு கேவலமான செயலைச் செய்ய தமிழனான நீங்கம் எப்படி உடந்தையாக இருந்தீர்கள்."

பிரேமதாச அரசாங்கத்தின் போது காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி பிரேமதாசவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்த போது பிரேமதாச இந்த உண்மைகளை உடைத்தார். காமினி திசாநாயக்க நூலக எரிப்பில் ஆற்றிய பாத்திரத்தைப் பற்றிய உண்மைகளை அன்றைய ஜனாதிபதி பிரேமதாச மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

புத்தளம் முஸ்லிம் கல்லூரியில் பிரேமதாச ஆற்றிய உரையின் போது:

"1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் நடைபெற்ற வேளையில் கட்சிக்காரர்கள் நாட்டின் பிர பகுதிகளிலிருந்து பலபேரைச் சேர்த்துக்கொண்டு வடக்கு நோக்கிச் சென்றார்கள். வடக்கில் நடைபெற்ற தேர்தலை நடக்க விடாமல் குழப்பியதோடு குழப்பமும் செய்தார்கள். யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் விலைமதிப்பற்ற புத்தகங்களைக் கொளுத்தியவர்கள் யாரென்று அறிய விரும்பினால் எம்மை எதிர்ப்பவர்களின் முகத்தைப் பார்த்தால் தெரியும்" என்றார்.

அன்று அவரை எதிர்த்து நின்றவர்கள் வேறு யாருமில்லை காமினி திசாநாயக்க தலைமையிலான குழுவே.


"வடக்கு கிழக்கில் தற்போதைய நிலைமையை எழுப்பியவர்கள் யார். இதற்கு பிரதானமான காரணம் திரு.காமினியே பத்து வருடங்களுக்கு முன் 1981ல் நடந்த சம்பவங்கள் இந்நாட்டின் சமுதாயங்களுக்கு இடையிலான உறவுகளில் இது ஒரு கறை படிந்த துரயரமான சம்பவமாகும்... மாவட்ட அபிவிருத்தி சபை முறையை பாராளுமன்றத்தில் காமினி திசாநாயக்கவே எதிர்த்தார். தேர்தலுக்கு முதல் காமினி நிறைய ஆட்களை கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றார்...

மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல்களில் சதிநாசவேலைகள் இடம்பெற்றபின்னர் ஒரு சர்வதேச நூல்நிலயமான யாழ் நூல் நிலையமான யாழ் நூலகம் எரியூட்டப்பட்டது. வாக்குச் சீட்டுக்களால் நீதியை பெறுவதற்கே எமது தலைவர்களால் முடியாவிடில் நாங்கள் நீதியை குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ் தீவிரவாதிகள் நினைத்தனர். இப்படித்தான் அவர்கள் தீவிரவாத செயலில் இறங்கினார்கள்.."


**அழிப்பின் சிகரம்**

கடந்த 2016 டிசம்பர் மாதம் யாழ் நூலக எரிப்புக்கு முதற் தடவையாக பகிரங்கமாக மன்னிப்பு கேட்டார் பிரதமர் ரணில்.

சிறில் மெத்தியு ஒரு வீரனாகவே இனவாதிகள் மத்தியில் இன்னும் திகழ்கிறார். 1981 சம்பவத்தில் சிறில் மெத்தியுவை கண்டும் காணாது இருந்ததன் விளைவு தான் 1983 கலவரத்திலும் மெத்தியு அதனை தனக்கு கிடைத்த லைசன்சாக கருதி ஆடிய ஆட்டம். பிரேமதாசா போன்றோரின் எதிர்ப்பைத் தொடர்ந்து பின்னர் அவர் விலத்தப்பட்ட நாடகம் வேறொரு உப கதை. உண்மையில் சிறில் மெத்தியுவை எவரும் விலத்தத் துணியவில்லை அவர் தானாக விலகினார் என்பது தான் உண்மை.



சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனத்தின் தலைவர் Orville H. Schell, தலைமையில் உண்மையறியும் குழுவொன்று இதனை விசாரிப்பதற்காக 1982இல் சென்றது.



இந்தக் குற்றச்சாட்டுக்கு காமினி பூசி மெழுகி எழுதியிருந்த கடிதத்துக்கு ஜனாதிபதி பிரேமதாச மீண்டும் பதிலளித்தார். அது பற்றிய செய்தி 1991 ஒக்டோபர் 26 ஆண்டு வெளியான ஈழநாடு பத்திரிகையில் செய்தியும் வெளியானது, அதில்

Orville H. Schell சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவராகவும் விளங்கியவர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பக்கசார்பில்லாத புலனாய்வுப் பிரிவை நிறுவவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார். 1981 மே, யூனில் ஏற்பட்ட அழிவிற்கு யார் பொறுப்பாளி என்பதைக் கூறுவதற்கு அரசாங்கம் தயாராக

இருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ் நூலகத்தை பின்னர் புனரமைத்து தமிழர்களுக்கு தந்ததாக சிங்கள அரசு கைகழுவிக் கொண்டது. ஆனால் கைநழுவிப் போன தமிழர் நம்பிக்கையை அவர்களால் திருப்பிப் பெற முடியவில்லை. அது அடுத்து வரும் பெரிய இழப்புகளுக்கு முத்தாய்ப்பாக ஆனது. ஒரு போராட்டத்தின் விதையாக ஆனது. தமக்கான தலைவிதியை தீர்மானிக்கும் வித்தானது.

யாழ் நூலக எரிப்பு அடையாள அழிப்பின் சிகரம்.

இந்த அரச பயங்கரவாதச் செயலுக்கு ஒருவகையில் காரண மாக இருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன றோட்டரிக் கழக வைபவத்தில் ஆற்றிய உரையில் இப்படி குறிப்பிடுகிறார்.

**யாழ் பொது நூலகமே எனது அரசியல் வாழ்வுக்கு அத்திவாரமிட்டது. (11.06.1982 வீரகேசரி செய்தி)**

நன்றி: என்.சரவணன் - தினக்குரல் 03.09.2017

## கால வரிசைப்படி யாழ் நூலக வரலாற்றுக் குறிப்பு

**1933**

இல் யாழ்ப்பாணத்தில் ஒரு இலவச தமிழ் நூலகத்தை திறக்க வேண்டும் என்கிற சிந்தனையில் அன்றைய நீதிமன்ற காரிய தரிசியாக பணிபுரிந்த க.மு.செல்லப்பா இளைஞர் முன்னேற்ற சங்கத்திடம் தெரிவித்தார். இளைஞர்களுடன் சேர்ந்து வீடு வீடாக சென்று நூல்கள் சேகரிக்கப்பட்டன.

**11.12.1933**

செல்லப்பா நூலகத்தின் அவசியத்தைப் பற்றி "A central Free Tamil Library in Jaffna" என்கிற தலைப்பில் ஒரு அறிக்கை விட்டார்.

**04.06.1934**

யாழ் மத்திய கல்லூரியில் நீதிபதி சீ.குமாரசுவாமி தலைமையில் கூடிய புலமையாளர்கள் மற்றும் அரச உயர் உத்தியோகத் தர்கள் அனைவரும் கூடி இதற்கான ஒரு குழுவை நியமித் தார்கள்.

**01.08.1934**

ஆஸ்பத்திரி வீதியில் மின்சார நிலையத்துக்கு எதிர்ப்பக்கமாக வுள்ள கடைகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்து ஆரம்பித் தார்கள். பலரும் நின்றுகொண்டு குவிந்திருந்து படிக்கத் தொடங் கினார்கள். பாகிஸ் இடப்பற்றாக்குறையினால் பக்கீஸ் பெட் டிகளின் மீதிருந்து படித்தார்கள்.

**01.01.1935**

நூலகம் உத்தியோகபூர்வமாக கோலாகலமாக யாழ்ப்பாண நகர சபையிடம் கையளிக்கப்பட்டது. 844 தரமான நூல் களுடன் (இவற்றில் 694 நூல்கள் பொதுமக்களால் அன்பளிப்பு செய்யப்பட்டவை) மாநகராட்சி மன்றத்தின் மராமத்துப் பகுதி அமைந்துள்ள பகுதியில் அது இயங்கியது.

**1936**

மழவராயர் கட்டடத்துக்கு மாறியது.

**16.05.1952**

"யாழ்ப்பாண மத்திய நூலக சபை" என ஒரு ஆளுநர் சபை உரு வாக்கப்பட்டது.

**29.05.1954**

நகரபிதா வணக்கத்துக்குரிய லோங்பிதா, பிரித்தானிய உயர்ஸ் தானிகர் செசில் செயேஸ், அமெரிக்க தூதுவர் பிலிப் குறோல், இந்திய உயர்தானிகராலயத்தில் முதல் காரியதரிசி சித்தாந்தசாரி ஆகிய இவரும் சேர்ந்து வீரசிங்கம் முனியப்பர் கோயில் முன் னுள்ள முற்ற வெளியில் அடிக்கல் நாட்டினார்கள். ஆசிய அபிவிருத்தி நிதியம் இந்திய உயர்ஸ்தானிகராலயம் உள்ளிட்ட மேலும் பலர் நிதியுதவிகளை வழங்கினர். சிறிது சிறிதாக பலரது உதவிகளும் நூலகத்துக்காக திரட்டப்பட்டன. நிதி சேகரிப்புக் காக களியாட்ட விழாக்களும் நடத்தப்பட்டன.

**11.10.1959**

நூலகத்தின் இட நெருக்கடி தொடர்ந்தும் இருந்த நிலையில் மேல் மாடி கட்டி முடிக்குமுன்பே கீழ் மண்டபத்தை நகர பிதா அல்பிரட் துரையப்பா குமுகும் வைபவத்தை நடத்தினார். பழம் பெரும் நூல்களின் தொகுதிகளை கோப்பாய் வன்னியசிங்கம் மட்டும் பண்டிதர் இராசையனார் நினைவாகவும் கிடைத்தன. முதலியார் குள சபாநாதனிடமிருந்து பல அரிய நூல்கள் விலைக்கு கிடைத்தன. இப்படி பல அரிய ஆவணங்களும், ஓலைச்சுவடிகளும், கையெழுத்து மூலப் பிரதிகளும் சேகரிக் கப்பட்டன.

**03.11.1967**

மேல் தளம் பூர்த்தியாக்கப்பட்டு பின்னர் சிறுவர், பகுதி, அடுக்கு அறை என்பனவும் திறக்கப்பட்டன.

**01.06.1981**

யாழ் நூலகத்தை சிங்களக் காடையர்கள் எரித்து சாம்பலாக் கினர். 97000க்கும் மேற்பட்ட நூல்கள், அரிய ஓலைச் சுவடிகள் அனைத்தும் எரித்துப் பொசுக்கப்பட்டன. பின்னணியில் அரசாங்க அமைச்சர்கள் காமினி திசாநாயக்க, சிறில் மெத்தியு. இந்த சம்பவத்தைக் கண்ட வணக்கத்துக்குரிய சிங்கராயர் தாவீது அடிகளார் திகைத்து மாரடைப்பில் மரணமானார்.

**07.02.1982**

புதிதாக திருத்தப்போவதாக அடிக்கல் நாட்டல்

**10.12.1982**

இடைக்கால ஒழுங்காக ஒரு பகுதி திருத்தியமைக்கப்பட்டு வாசிகசாலையின் சிறுவர் பகுதி, உடனுதவும் பகுதியும் இயங் கத் தொடங்கியது.

**14.07.1983**

இரவல் கொடுக்கும் பகுதி மீள இயங்கத் தொடங்கியது.

**10.01.1984**

மாநகர எல்லைக்குட்பட்டவர்களுக்கு மட்டமே மட்டுப்படுத்தப் பட்டிருந்த நூலக உறுப்புரிமை யாழ் மாவட்டத்தினர் அனை வருக்குமாக விஸ்தரிக்கப்பட்டது.

**05.06.1984**

மீண்டும் திறக்கப்பட்டது.

**உசாத்துணை :**


Thurairajah, V.S., The Jaffna Public Library Rises From Its Ashes, (2007)

Selvarajah, N. ed., Jaffna Public Library- A historic compilation (2001)

http://www.vikalpa.org/?p=6895

பொன்விழாப் பொலிவு காணும் பொதுசன நூலகம்- க.சி.குலரத் தினம் (மீள்விக்கப்பெற்ற யாழ் மாநகர நூலகம் திறப்பு விழா மலர் -1984

யாழ்ப்பா பொதுசன நூலகம் (எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள்) 01.06.2015 - தங்க முகுந்தன்

மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது - 1981

Burning Memories of Jaffna Library Full Documentary - Someetharan

யாழ்ப்பாணப் பொது நூலகம் - ஒரு வரலாற்றுத் தொகுப்பு எ.செல்வராஜா

யாழ்ப்பாணப் பொது நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது - வி.எஸ்.துரைராஜா


நன்றி: நமது மலையகம் இணையம்

26-10-1991

# யாழ்ப்பாண நூல்நிலையத்தை தீயிட்டவர் காமினியே

(கொழும்பு)

## - ஜனாதிபதி பதில்

கலை நிகழ்வுப் பிரதியை சமர்ப்பிக்க கோரிக்கை

(நாவற்குழி)

நவம்பர் 21 முதல் 27 வரை

26.10.1991 ஈழநாடு பத்திரிகையில் வெளியான செய்தி

யாழ்ப்பாண மாநகரசபை நூல்நிலைய நம்பிக்கை நிதி.

30. 4. 1984 வரையுள்ள வரவு செலவு விபரம்.

வரவு.

| | | |
|---|---|---|
| 01. | மீதி முன்கொண்டுவரப்பட்டது | 19,926.09 |
| 02. | ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் கௌரவ ஜனாதிபதி அவர்களின் நன்கொடை | 20,00,000.00 |
| 03. | கொடித்தினம், நூலகவாரம் (யாழ்ப்பாணம், கொழும்பு) | 7,38,114.15 |
| 04. | நோர்வே ஏஜென்சி, நொறாட் | 3,22,580.00 |
| 05. | யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை | 3,00,000.00 |
| 06. | செல்வி. குமாரி சுவர்ணமுகியின் நிகழ்ச்சி வசூல்.(யாழ்.கொழும்பு) | 1,56,476.47 |
| 07. | உலகத்திருச்சபைகள் கழகம் | 1,50,000.00 |
| 08. | சாம்பியாவில் வாழும் இலங்கையினர் | 1,18,934.55 |
| 09. | வங்கியில் நேரடியாக வைப்பிலிடப்பட்ட தொகை (விபரம் தெரியாதவர்கள்) | 1,18,023.29 |
| 10. | ஜேர்மனியில் வசிக்கும் இலங்கையர் | 1,12,996.64 |
| 11. | இலங்கைத் தமிழர் சங்கம், விக்ரோறியா, அவுஸ்திரேலியா | 1,01,098.43 |
| 12. | கனடாவில் உள்ள இலங்கையர் | 82,566.28 |
| 13. | போரூ சமூகம் | 82,000.00 |
| 14. | லண்டன் வாழ் இலங்கை மக்கள் | 78,860.50 |
| 15. | மாநகர முதல்வரும், உறுப்பினர்களும் | 76,433.55 |
| 16. | புனேயில் வசிக்கும் இலங்கையர் | 75,728.42 |
| 17. | நிலையான வைப்பிலிருந்து மீளப்பெற்ற தொகைக்குரிய வட்டி | 66,500.00 |
| 18. | தனிநபர் வரவு | 60,584.51 |
| 19. | லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம் | 60,000.00 |
| 20. | சுற்றன் தேசிய வங்கி, கொழும்பு | 50,000.00 |
| 21. | ''றெட்பானு'' (இலங்கையில் நோர்வே ஸ்தாபனம்) | 50,000.00 |
| 22. | நைஜீரியாவில் வாழும் இலங்கையர் | 49,881.80 |
| 23. | நோர்வே நாட்டில் வாழும் இலங்கையர் | 49,485.30 |
| 24. | சவூதிஅரேபியாவில் வசிக்கும் இலங்கையர் | 44,203.00 |
| 25. | மொறிஜீயஸ் தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பு | 38,444.22 |
| 26. | இலங்கைத் தமிழர் சங்கம், நோர்வே | 34,510.79 |
| 27. | நலவிருத்திச்சங்கங்கள், கழகங்கள், சம்மேளனங்கள், இயக்கங்கள் | 25,146.67 |
| 28. | அமெரிக்காவில் வாழும் இலங்கை மக்கள் | 23,261.00 |
| 29. | கென்னியாவில் உள்ள இலங்கையர் | 23,164.34 |
| 30. | ஆண்டகையும், மெதடிஸ்தசபையும் (கொழும்பு) | 17,619.86 |
| 31. | அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர் | 13,673.35 |
| 32. | திரு. எம். எம். சிவசண்முகம், முட்டை ஓவியர், தமிழ்நாடு | 11,172.00 |
| 33. | பாக்தாத், அபுதாபி, துபாய், அல்ஜீரியா, குவைத், சுவீடன் | 10,944.60 |
| 34. | பிரான்ஸ் நாட்டில் உள்ள இலங்கையர் | 10,000.00 |
| 35. | இலங்கை புகையிலை ஸ்தாபனம், கொழும்பு | 10,000.00 |
| 36. | இலங்கை வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, கொழும்பு | 10,000.00 |
| 37. | ஆண்டகை, யாழ்ப்பாணம் | 10,000.00 |
| 38. | இலங்கை சர்வோதயச் சங்கம் | 10,000.00 |
| 39. | குருநாகல் சைவமகாசபை | 6,290.00 |
| 40. | ஆட்டுக்கலைக்கழகம், கொழும்பு | 6,037.90 |
| 41. | குண்டன் மால்ஸ், கொழும்பு | 5,000.00 |
| 42. | ஸ்ரீலங்கா நூலகச்சங்கம், கொழும்பு | 5,000.00 |
| 43. | றொட்டறிக் கழகம், மட்டக்களப்பு | 2,500.00 |
| 44. | இந்தியா, பீக்கில், மலேசியா வாழ் மக்கள் | 2,200.00 |
| | | 52,39,357.71 |


TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில் எங்கும் கண்டிடாத சேவை
சிங்கப்பூர், துபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1% முதல் தங்க நகை அடைகு சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New RANGANAS JEWELLERY
647-947-2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com
kprranga@hotmail.com


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# 05 யூன் 1956 இக்கினியாகலை படுகொலை

1940களில் அக்காலகட்டத்தில் விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா அம்பாறை மாவட்டத்தில் அரச நிதியுதவியுடன் பல சிங்கள குடியேற்றத் திட்டங்களை நிறுவினார். இதன் பின்னர் அரச உதவியோடு அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா அபிவிருத்தித் திட்டம், திருகோணமலையில் கந்தளாய் குடியேற்றத் திட்டம், அல்லைக் குடியேற்றத் திட்டம் போன்ற குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு சிங்கள மக்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்டார்கள். அவர்களுக்குச் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுக் காவல்துறை - இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் விகாரைகளும் கட்டிக் கொடுக்கப்பட்டது. பௌத்த விகாரைகளில் பெரிய கண்டாமணி பொருத்தப்பட்டு மணியோசை கேட்கும் தூரம் மட்டும் சிங்கள பௌத்தர்களுக்குரிய பிரதேசமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் கணிக்கப்பட்டது. இந்த வகையில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் சூறையாடப்பட்டன.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காலஞ் சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமரானார். அவரது தேர்தல் வாக்குறுதிகளிலொன்றான சிங்களம் மட்டும் சட்டத்தை 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதற்கு எதிராக அக்காலகட்டத்தில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவித்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட முடிவு செய்தது. இதன் விளைவாக அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி 1956ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பிலுள்ள பழைய நடாளுமன்றக் கட்டிடத்திற்கு முன்னால் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியது. இதில் தமிழ்த் தலைவர்கள் கட்சி பேதங்களுக்கு அப்பால் கலந்து கொண்டார்கள். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த தமிழ் கல்விமான் வணபிதா தனிநாயகம் அடிகளும் இந்தச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார். அன்றைய தினம் சத்தியாக்கிரகிகள் சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டதுடன், சிங்களவர்களால் தமிழர்கள் மீதான இனக்கொலை தூண்டிவிடப்பட்டது. தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். பல தமிழ் மக்கள் மோசமான வகையிலும் கோரமாகவும் கொல்லப்பட்டதுடன், கொழும்பிலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் கொள்ளையடிக்கப்பட்ட பின் தீவைத்துக் கொழுத்தப்பட்டன. இலங்கைத்தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான பகையுணர்வு மேலோங்கிக் காணப்பட்டது.



அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்க் காடையர்கள் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டார்கள். இதில் இக்கியாகலை என்ற இடத்திலிருந்த கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த நூற்றி ஐம்பது தமிழ்த் தொழிலாளர்கள் அதே தொழிற்சாலையில் வேலை செய்த சிங்களத் தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர். பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். அரைகுறை உயிருடன் இருந்தவர்களும் இறந்தவர்களும் எரியும் தீயில் தூக்கி வீசப்பட்டார்கள். இங்கு நடைபெற்ற இனப்படுகொலையே இக்கினியாகலை இனப்படுகொலையென வர்ணிக்கப்படுகின்றது. இதுவே இலங்கை வரலாற்றில் முதல் முதலில் பெருந் தொகையாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும். இப்படுகொலைகளில் ஏறக்குறைய நூற்றி ஐம்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதாக "எமேர்ஜேன்ஸி 58" என்ற நூல் தகவல் வெளியிட்டுள்ளது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)


# 1958 ஆம் ஆண்டு தமிழினப்படுகொலை (மே 22 - யூன் 02)

1958ஆம் ஆண்டு இனப்படுகொலை என்பது திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்குப் பலமான பின்புலம் ஒன்று இருக்கிறது. 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட முப்பத்துமூன்றாம் இலக்கச் சிங்களம் மட்டும் சட்டம் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகத் தமிழர் தரப்பினர் 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள். இந்தப் போராட்டம் சிங்களக் காடையர்களால் வன்முறை பிரயோகிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 1957ஆம் ஆண்டு தமிழர் தரப்பினர் திருமலைக்குப் பாதயாத்திரை சென்று அங்கே ஒரு மாநாடு நடாத்தினார்கள். பண்டாரநாயக்கா அரசிற்கு ஒரு வருட காலக்கெடு கொடுத்து அதற்குள் தமிழ் மொழிக்குச் சமவுரிமை கொடுக்கவேண்டும் என்றும் தமிழ்ப் பிரதேச அபிவிருத்திகளுக்காக பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் திருமலை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வேண்டுகோளுக்கு அமைய பண்டாரநாயக்கா அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் தான் அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்கா தந்தை செல்வநாயகத்தோடு ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தார். இதன் விளைவாக 26.07.1957 அன்று தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியோடு பண்டாரநாயக்கா ஒரு உடன்படிக்கை செய்தார். இதுவே புகழ்பெற்ற 1957 பண்டா-செல்வா உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி சாப்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா கண்டிக்குப் பாதயாத்திரை போனார். அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியானது முதல் காலடி என்ற வெளியீட்டையும் வெளியிட்டு இனவாதப் பரப்புரையில் ஈடுபட்டது. ஐக்கிய தேசியக்கட்சியின் பரப்புரை நாளேடான "சியரட்ட" மிக மோசமான இனவாதப் பரப்புரையைத் தமிழருக்கு எதிராக மேற்கொண்டது. கண்டிக்குப் பாதயாத்திரை போகப் புறப்பட்ட ஜே.ஆர் இன் பாதயாத்திரை இம்புள்கொட என்ற இடத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பண்டாரநாயக்கா தலைமையில் வந்த இன்னொரு குழுவால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதற்கிடையில் பண்டாரநாயக்காவைப் பதவிக்குக் கொண்டுவந்த பிக்கு பெரமுனவைச் சேர்ந்த பௌத்த பிக்குமாரும், ஜாதிக விமுக்தி பெரமுனவைச் சேர்ந்த வெலிமடை எம்.பி கே.எம்.பி இராஜரட்னாவும் கொழுமப் ஆனந்தாக் கல்லூரி அதிபர் மெத்தானந்த போன்றவர்களும் சிங்கள தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆர்.ஜி. சேனநாயக்கா போன்றவர்களும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு பண்டாரநாயக்காவுக்கு அழுத்தம் கொடுத்ததுடன், பிரதமர் பண்டாரநாயக்காவின் கொழும்பு ஏழு, றொஸ்மீட் பிளேசிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்னால் பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறியுமாறு முழக்கமெழுப்பினார்கள். அவர்களது முழக்கத்திற்கும், வேண்டுகைகளுக்கும் அடிபணிந்த பண்டாரநாயக்கா, தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட பண்டா-செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார்.

இதனைத் தொடர்ந்து 1958ஆம் ஆண்டு மே மாதம் இருபத்து நான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய திகதிகளில் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா மாநாட்டிற்கு வருகைதந்து கொண்டிருந்த மட்டு-அம்பாறையைச் சேர்ந்த தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் பயணம் செய்த தொடருந்து பொலநறுவை மாவட்டத்தில் கிங்குராகொட என்னும் தொடருந்து நிலையத்தில் வழிமறிக்கப்பட்டுச் அதிலிருந்த தொண்டர்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார்கள். இதே காலப்பகுதியில் நுவரெலியா மாநகரசபையின் மேயர் செனிவிரட்ண மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்தபோது மட்டக்களப்பில் வைத்து தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொல்லப்பட்டார். பிரதமராக இருந்த பண்டாரநாயகக்கா இதைப் பெரிதுபடுதத்தி இலங்கை வானொலியில் பரப்புரை செய்தார். இதைத் தொடர்ந்து தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான இனக்கொலை வெடித்தது. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பாணந்துறையில் சிறீ கதிர் வேலாயுதசுவாமி கோயிற் குருக்கள் ஆலயத்திற்குள் வைத்து உயிரோடு கொழுத்தப்பட்டார். பொலநறுவை அரசினர் வைத்தியசாலையில் சிங்கள மக்களுக்குச் சிகிச்சை அளித்த தமிழ்த் தாதியான பாலிப்போடி என்பவரின் மனைவி பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார்.




இவ்வளவும் நடந்தும் பண்டாரநாயக்காவினுடைய அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ அல்லது ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ இல்லை. தமிழர்கள் தாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டபோதும் பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்டு அனுபவிக்கட்டும் என்று கூறினார். இந்த

# 1958 ஆம் ஆண்டு தமிழினப்படுகொலை (மே 22 – யூன் 02)

இனக்கொலை யின் போது தமிழ் மக்களின் பல வீடுகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பல தமிழ்க் குழந்தைகள் கொதிக்கும் தாரில் போடப்பட்டார்கள். மேலும் இக்கட்டத்தில் இலங்கையில் தங்கியிருந்த பிரபல ஆங்கில நாளேட்டாளரான டாசி வித்தாச்சி அவர்கள், பண்டாரநாயக்கா அரசினால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின் தனது தாய் நாட்டிற்குச் சென்று "அவசரகாலச் சட்டம் ஐம்பத்தெட்டு" என்ற நூலை எழுதி வெளியிட்டார். இன்று இந்நூல் உலகப் புகழ் பெற்ற நூலாகக் கருதப்படுகின்றது.

இக்காலத்தில் எல்லாமாக முன்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அக்காலகட்டத்தில் வெளியான நாளேடுகள் வாயிலாக அறியமுடிகின்றது. பல நூற்றுக் கணக்கான மக்கள் வெட்டி அங்கவீனப்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன, அவர்களது உடைமைகள் தீவைத்து எரிக்கப்பட்டன. இக் காலகட்டம் பற்றி எத்தகைய விசாரணைகளும் மேற்கொள்ளப் படவில்லை. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு எத்தகைய நிவாரணமோ நட்டஈடோ வழங்கப்படவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப்

# யாழ் நூலகம் அழிப்பு – 01 யூன் 1981

தெற்காசியாவிலேயே மிகப்பெரியதும், அருமைமிக்க பழைமை வாய்ந்த நூல்களை கொண்டதுமாக யாழ் பொது நூலகம் விழங்கியது. தீவின் வடக்கில் வாழ்ந்து வந்த மக்களின் கல்விசார் பொக்கிஷமாக இந் நூலகம் இருந்தது. யாழ்நகரத்தின் தெற்கே புகழ்பெற்ற விழையாட்டு மைதானத்தின் கிழக்கு தொங்கலில் இதன் கட்டிடம் அமைந் திருந்தது. பிரிட்டிசார் காலத்தில் கட்டப்பட்ட யாழ் சென்றல் கலலூரி, மணிக்கூட்டுக் கோபுரம் என்பன இதற்கருகே அமைந் திருந்தன.

இந்நூலகம் 97,000 மேலான மிக பழைய நூல்களைக்கொண்டு, இத்தீவிலே இது தனித்துவமுடையதாக இருந்தது. அக்காலத் தில் மாணவர்கள், ஆராச்சியாளர்கள், மற்றும் வெளிநாட்டு பிரமுகர்கள் இந்நூலகத்தை தேடி வருவார்கள்.

01.06.1981 அன்று, சிறீலங்காவின் முப் படைகளும் சேர்ந்து இந்நூலக வழாகத்துள் இறங்கினர். அங்கிருந்த பாதுகாப்பு ஊழியரை துரத்திவிட்டு நூலகத்துக்குள் உடைத்துக் கொண்டு நுழைந்தனர். சில நிமிடங்களில் 97,000 அருமைவாய்ந்த புத்தகங்களையும் எரித்துச் சாம்பலாக்கினர். நூலகக் கட்டிடமும் தீமூட்டப்பட்டது.

தெற்காசியாவிலேயே மிக அருமை வாய்ந்த தொகையான புத்தகங்களை எரித்த இச் சம்பவம், மானிட சரித்திரத்திலேயே ஒரு துயரச் சம்பவமாக செதுக்கப்பட வேண்டியது எனலாம்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப் படுகொலைகள் (1956-2008)









# யாழ். நூலகம் – அழிக்கப்பட்ட தமிழர் அறிவுச் சுரங்கம்





# புத்தரின் படுகொலை

புத்தரின் படுகொலை
நேற்று என் கனவில்
புத்தபெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக்கொன்றனர்.
யாழ் நுலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது!
இரவின் இருளில் அமைச்சர்கள் வந்தனர்.
“எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?”
என்று சினந்தனர்
“இல்லை ஐயா
தவறுகள் எவையும் நிகழவே இல்லை
இவரைச்சுடாமல்
ஓர் ஈயினைக்கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையால்த்தான்”
என்றனர் அவர்கள்
“சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை”
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.
சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச்சென்றனர்
தொண்ணுறாயிறம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்.
சிகாலோகவாத சூத்திரத்தினைக் கொழுத்தி
எரித்தனர்
புத்தரின் சடலம் அஸ்த்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது

– கவிஞர் எம்.ஏ.நு:.மான்

# தமிழின அழிப்பு
# 1981 மே 31, யூன் 01, 02, 03



தீ மூட்டப்பட்ட நாச்சிமார் கோவில் கோபுரம்



சி.எஸ்.கே. சந்தியில் தலை ஒடிக்கப்பட்ட திருவள்ளுவரும் எரிந்துபோன கடைகளும்



பஸ் நிலையத்தில் தீக்கிரையாகி அழிக்கப்பட்ட 36 தொடர் கடைகள்



சுன்னாகத்தில் கொளுத்தப்பட்ட வரிசைக் கடைகள்



யாழ்ப்பாணத்தின் பழமை வாய்ந்த சந்தை எரிந்து எஞ்சிய காட்சி



ஆஸ்பத்திரி வீதியில் கொடூரமாகச் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்ட நியூ. கொழும்பு ஸ்ரோரும் ஈ.ஏ. பாப் கடைகளும்



எரிந்து அழிந்து கிடக்கும் 'ஈழநாடு அலுவலகம்




நெருப்புக்கு இரையாக்கப்பட்டுச் சிதைந்து கிடக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம்



சுன்னாகத்தில் கொடியோரின் தீயிடலால் எரிந்த கடைகள் சில

# 1981
# மே 31, யூன் 01, 02, 03


சுமார் 97,000 அருமையான நூல்களுடன் எரிந்து நாசமாகிவிட்ட யாழ். பொதுசன நூலகம்


தலையுடைந்த நிலையில் சோமசுந்தரப் புலவரின் சிலை


எரிந்து உடைந்த நாசமாக்கப்பட்ட யாழ். எம்.பி. திரு. யோகேஸ்வரனின் வீடும், அவர் நண்பனின் காரும்


பஜார் வீதியில் [சி. பொன்னம்பலம் வீதி] தனியார் கடைகள் எரிக்கப்பட்டும் கூட்டுறவுக் கடைகள் எரிக்கப்படாதும் காணப்படுகின்றன

# தமிழின அழிப்பு


'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலய முன்றலில் எரிக்கப்பட்ட மோட்டர் சைக்கிளும் சைக்கிள்களும்


காங்கேசன் துறையில் தீக்கிரையான செல்லையா அன் பிறதேஸ்




# ஆனந்தபுரம் செல்வீச்சு 04. யூன் 1986

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஆனந்தபுரம் அமைந்துள்ளது. இக்கிராமம் கிளிநொச்சி நகரத்தின் தெற்கே ஒரு மைல் தூரத்திலுள்ளது. இச்சிறிய கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது.

1986களில் அரச படைகள் பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் பரவலாக இராணுவ முகாம்களை விரிவாக்கத் தொடங்கியதுடன், பொதுமக்கள் வாழும் பிரதேசங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டார்கள்.

1986.06.04ஆம் நாள் அதிகாலை 5 மணிக்கு கிளிநொச்சி நகரில் முகாமிட்டிருந்த அரச படையினர் ஆனந்தபுரத்தை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இவ்வாறு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகளில் சில ஆனந்தபுரம் செல்வா வீதியிலுள்ள இராமையா பெரியான்பிள்ளை என்பவரின் வீட்டின் மேல் வீழ்ந்து வெடித்தது. வீட்டினுள் தாயின் அரவணைப்பில் ஐந்து பிள்ளைகளும் உறங்கிக்கொண்டிருந்தனர். வீட்டின் மீது வீழ்ந்த எறிகணையினால் இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் படுக்கையில் உடல் சிதறி உயிரிழந்தார்கள். மற்றைய மகன் தலையிலும், உடல் முழுவதும் காயங்களுக்குள்ளாகிய நிலையில் அக்கராயன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் அங்கு மரணமானார். தாய் தலையிலும் உடல் முழுவதும் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாண வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் பொதுமக்கள் ஆனந்தபுரக் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்தார்கள். எறிகணைத் தாக்குதல்கள் முடிவடைந்த பின்னர் கிராமத்திற்கு மீண்டும் திரும்பிய பொதுமக்களால் உயிரிழந்த நான்கு மாணவர்களினதும் உடல்கள் வீட்டு வளவினிலேயே அடக்கம் செய்யப்பட்டன. பிள்ளைகளின் நினைவாக அவர்களை அடக்கம் செய்த இடத்தில் கல்லறையும், இரத்தினபுரம் கண்டி வீதியில் மீனாட்சி அம்மன் வித்தியாலயத்தில் ஐந்து பிள்ளைகளின் நினைவுச்சின்னம் என்ற மணிக்கூட்டு கோபுரம் கட்டப்பட்டது. இவை இரண்டும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சத் ஜெய இராணுவ நடவடிக்கையில் சேதத்திற்குள்ளாகி காணப்படுகிறது. உயிரிழந்த நான்கு பிள்ளைகளும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களாவர்.

ஐந்து பிள்ளைகளை இழந்த்த தாய் பெரியதம்பி கனகமணி தெரிவிக்கையில்,
“ஆனந்தபுரம்: 1986 நாங்கள் வசித்த வீட்டின் மேல் கிளிநொச்சி நகரில் இருந்த சிறீலங்கா இராணுவத்திரால் ஏவப்பட்ட எறிகணை வீழ்ந்து வெடித்ததில், எனது ஐந்து பிள்ளைகள் அவ்விடத்திலேயே உடல்சிதறிப் பலியாகினர். நானும் ஒரு பிள்ளையும் படுகாயத்துடன் யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டோம். இச்சம்பவத்தில் எனது கணவர் மன நிலை பாதிக்கப்பட்டு தற்போது சுகமடைந் துள்ளார்.”

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. பெரியான்பிள்ளை புஸ்பகாந்தன் சிறுவன் - 15
02. பெரியான்பிள்ளை செந்தில்குமார் மாணவன் -18
03. பெரியான்பிள்ளை கமலநாதன் மாணவன் -20
04. பெரியான்பிள்ளை கிருபாணி சிறுமி -11
05. பெரியான்பிள்ளை வாமதேவி சிறுமி -1

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கந்தளாய் படுகொலை - 04,05 யூன் 1986

1986ம் ஆண்டு யூன் மாதம் நான்காம், ஐந்தாம் திகதிகளில் கந்தளாய் நான்காம் கட்டை என்னும் இடத்தில் காவல் நின்ற விமானப்படையினரும், ஊர்காவற் படையினரும் இணைந்து பிரயாணிகள் பேருந்தினை வழிமறித்துத் தமிழர்களை அடையாளங்கண்டு தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் பல பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காணாமற் போனார்கள். சிலர் காயத்துடன் உயிர்தப்பினார்கள்.

1986.06.05 ஆம் திகதி வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பேருந்தைக் கந்தளாய் நான்காம் கட்டைப் பகுதியில் வைத்து விமானப்படையினரும் ஊர்காவல் படையினரும் இணைந்து தாக்கியதுடன், பேருந்தினைத் தீயிட்டும் எரித்தார்கள். எரிந்த நிலையில் பேருந்திலிருந்து ஒரு சிறுமி, ஒரு கைக்குழந்தை உட்பட பத்திற்கும் மேற்பட்டவர்களது கருகிய உடல்கள் மீட்கப்பட்டன. இரண்டு தினங்களிலும் விமானப் படையினர், ஊர்காவற் படையினரின் தாக்குலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், முப்பத்தைந்திற்கும் மேற்பட்டவர்களுக்கு என்ன நடந்ததென்று இன்றுவரை தெரியவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)





# மண்டைதீவுக்கடல் படுகொலை – 10 யூன் 1986

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நகர மையத்தி லிருந்து தெற்குக் கரையோரக் கிராமங் களாகக் குருநகர், பாசையூர், மண்டைதீவு ஆகியன அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்தின் தென்மேற்காக வேலணைப் பிரதேசசபை எல்லையினுள் மண்டைதீவு அமைந்துள்ளது. மூன்று பக்கமும் கடலாற் சூழப்பட்டதும், மறு புறம் நிலப்பரப்பையும் கொண்ட ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக் கும் கிராமமாக மண்டைதீவு காணப்படுகிறது. யாழ். நகரத்தின் இக்கரையோரக் கிராம மக்கள் தமது சீவனோபாயத் தொழிலாகக் கடற்றொழிலையே நம்பி வாழ்கின்றனர்.

10.06.1986 அன்று கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி விசைப் படகினில் வந்த கறுப்புச்சீருடை அணிந்த கடற்படையினரைக் கண்டு மீனவர்கள் தமது கைகளை உயர்த்தியவாறு தாம் பொதுமக்கள் என்பதை அடையாளம் காட்டினார்கள். ஆனால் கடற்படையினர் மீனவர்களைக் கடலில் வைத்து கண்களைத் தோண்டியும், வயிற்றினை வெட்டியும் இறுதியில் துப்பாக்கி யால் சுட்டும் கைக்குண்டுகளை வீசியும் கொன்றனர். இச்சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த முப்பத்திரண்டு பேரும் மண்டை தீவைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் முப்பத்து மூன்று மீனவர்கள் உயிரிந்தார்கள் மீனவர்களின் இபடகுகள், வலைகள், கருவிகள் என்பன சேதமாக்கப்பட்டன.



இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தையா முத்துசாமி - 55
02. கிறிஸ்தோப்பர் ஸ்நாச்சி - 54
03. பங்கிராஸ் தார்சியஸ் - 30
04. பங்கிராஸ் அன்ரன் விமலதாசன் தவம் - 23
05. பங்கிராஸ் அன்ரனி யூலியஸ் - 33
06. பற்றிக் அலோசியஸ் டோனாஸ் - 58
07. தமியன் எருமின் றூபேட் உதயகுமாரன் - 26
08. முடியப்பு அன்ரனிதாஸ் இராஜகுமார் - 32
09. மனுவல் பயஸ் - 56
10. மனுவல் பற்றிக் - 60
11. மனுவல் மரியநாயகம் - 38
12. முத்தையா சுவாமிநாதன் செபமாலை யோசெப் - 57
13. அன்ரன் செல்றொன் வீன் - 21
14. அலோசியஸ் டியூஸ் டோறோஸ்டியூக் - 24
15. அலோசியஸ் லிகோரி டோனாஸ் மெளன்ட் - 34
16. ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை - 68
17. அருளானந்தம் பெனடிக்ற் - 32
18. அருளானந்தம் பொனிபஸ் - 60
19. யோன் யோஜ் - 56
20. யோசப்பர்ணாந்து அந்தோனிப்பிள்ளை பர்ணாந்து - 62
21. பெனடிக்ற் கியூபேட் றேசன் றமேஸ் - 19
22. பெனடிக்ற் மாசில்லா மகேந்திரன் - 25
23. பெனடிக்ற் அலிஸ்ரன் - 30
24. பெனடிக்ற் லிகோரி - 27
25. செபதேயு சேவியர் - 62
26. சோமசுந்தரம் சோதிநாதன் - 62
27. ஞானப்பிரகாசம் எட்வேட் கெலின்சன் ஜெயகாந்தன் - 17
28. சுப்பிரமணியம் கோபால கிருஸ்ணன் - 20
29. சவிரியான் யேசுதாசன் நிக்சன் - 13
30. விசுவநாதன் விமலநாதன் - 23
31. எமிலியானுஸ் மக்சிமஸ் ஈஸ்வரன் - 21




# சேருவில் படுகொலை – 12 யூன் 1986

1986.06.12 அன்று ஈச்சிலம்பற்றையிலிருந்து அகதிகளுக்கான உணவுப்பொருட்களை எடுத்துச் செல்லும் போது, மகிந்தபுரவில் ஊர்காவற் படையினரால் இரண்டு கிராமத் தலைவர்கள், மூன்று அரச ஊழியர்கள் மற்றும் இருபது தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள். இத்தாக்குதலில் இருபத் தொரு பேர் உயிரிழந்தார்கள். இரண்டு பேர் காயமடைந்தார்கள்.

இவர்கள் ஈச்சிலம்பற்றில் இனக்கொலை களினால் இடம்பெயர்ந்து அகதிகளாகத் தங்கியிருந்தவர்களுக்கான உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றவர்களாவர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-

# சம்மாந்துறைப் படுகொலை – 10 யூன் 1990

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரதேசசெயலர் பிரிவில் சம்மாந்துறைக் கிரா மம் அமைந்துள்ளது. இக்கிராமம் வயல் களைக் கொண்ட விவசாயக் கிராமம் ஆகும். இப்பிரதேசத்தில் கண்ணகி அம்மன் கோயில் காளிகோயில் போன்ற பல ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்துக்களின் வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ளன.

1990.06.10 இல் முசுலிம் குழுக்கள் இராணுவத்தினருடன் இணைந்து பொது மக்கள் மீது இங்கு தாக்குதல் நடத்தினார்கள். இவர்களின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக ஓடிய பொதுமக்கள் மீது இராணுவத்தினர் சுட்டதில் பலர் உயிரிழந்தனர். அன்று இராணு வத்தினரும் முசுலிம் குழுக்களும் நடாத்திய தாக்குதலில் முப்பத்தேழு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசரட்ணம் இராமச்சந்திரன், கூலி - 19
02. க.வடிவேல் - -
03. த.தாசன் - -
04. தம்பிராசா உருத்திரன், மாணவன் -16
05. மா.கணபதிப்பிள்ளை - -
06. சு.கணேசன் - -
07. சின்னத்தம்பி மார்க்கண்டு - -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-

# வந்தாறுமூலை படுகொலை 09 யூன் 1991

09.06.1991 அன்று மாவடிவேம்பு, வந்தாறு மூலை ஆகிய இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் வந்தாறுமூலைப் பிரதேசத் தினைச் சுற்றி வளைத்து வந்தாறுமூலை முதலாம் குறுக்கு வீதியில் நின்ற நான்கு



பொதுமக்களை வாள்களினால் வெட்டிப் படு கொலை செய்தார்கள். அதனைத் தொடர்ந்து கருவங்கேணியில் ஆறு பொதுமக்களை சுட்டுப் படுகொலை செய்தார்கள். மொத்தமாகப் பத்துப் பொதுமக்கள் அன்றைய தினம் இராணுவத்தினரின் தாக்குதலில் உயி ரிழந்தார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கொக்கட்டிச்சோலை படுகொலை – 12 யூன் 1991








28.01.1987 அன்று இராணுவத்தினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிப்படைந்த கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் மீண்டும் செழிப்புற்று மக்கள் ஓரளவு சந்தோசமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.




12.06.1991 அன்று அம்பிலாந்துறை, கல்லடி போன்ற இராணுவ முகாங்களிலிருந்த இராணுவத்தினர் கனரக வாகனங் களுடன் கொக்கட்டிச்சோலை, அரசடித் தீவு மற்றும் மகி ழுத்தீவு ஆகிய கிராமங் களைச் சுற்றி வளைத்து அங்கிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத் தினை மேற்கொண்டார் கள். இராணுவத் தினரின் இத்தாக்குதலில் 166இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார் கள். பலர் காயமடைந்தார்கள். 400இற்கும் மேற் பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன. அரிசி ஆலை ஒன்றினுள் நுழைந்த இராணுவத் தினர் அங்கு பணிபுரியும் பதினேழு பொது மக்களையும் அரிசி ஆலையுடன் சேர்த்து எரித்தார்கள்.

12.06.1991 அன்று இராணுவத்தினரின் தாக்குதலில் மொத்தமாக 220இற்கும் மேற் பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். இவர் களின் உடல்கள் அனைத்தும் இராணுவத் தினரால் ரயர் போட்டு அரைகுறையாக எரிக்கப்பட்டன.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மாங்குளம் செல்வீச்சு – 08 யூன் 1997

எழில் கொஞ்சும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வளம் நிறைந்த நகரமாகவும், முல்லை மாவட்டத்தில் தொடருந்து தரிப்பிடத்தைக் கொண்ட ஒரே ஒரு நகரமாகவும் ஏ-09 பாதையில் மாங்குளம் அமைந்துள்ளது. இங்கு ஆரம்பத்தில் மக்கள் தொகை ஓரளவு குறைவாகக் காணப்பட்டபோதிலும் 1996, 1997 காலப்பகுதியில் பொதுமக்கள் மீதான இராணுவத்தினரின் கண்மூடித்தனமாக தாக்குதல்களால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி போன்ற பல்வேறு பிரதேசங் களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் இந்நகரம் ஒரு மக்கள் தொகை நிறைந்த நகரமாக மாறியது. அன்றைய காலகட்டத்தில் புளியங்குளச் சந்தியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நாளாந்தம் மக்கள் குடியிருப்புக்கள் மீது எறிகணைத் தாக்குதல் களை நடாத்தி மக்களுக்குப் பெரும் அழிவு களை ஏற்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் புளியங்குளப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 08.06.1997 அன்று பி.ப. 1.40 மணி தொடக்கம் 02.05 மணிவரை மாங்குளம் சந்திப்பகுதியை இலக்குவைத்து சரமாரியான எறிகணைத் தாக்குதலை நடத்தினர். இவ் எறிகணைத் தாக்குதலில் அப்பிரதேசத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் உட்பட ஏழு பொதுமக்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். பிள்ளைகளை யிழந்த மாங்குளத்தைச் சேர்ந்த இந்த் திராணி தெரிவிக்கையில்,

"கணவரும் நானும் கூலி வேலைக்குப் போவோம். கஞ்சி குடிக்கக் கூட வழியில்லாத நிலையில் இருக்கும்போது ஒரு நாள் கணவர் வேலைக்குச் சென்ற நிலையில் பிள்ளைகள் பாடசாலைக்குப் பணம் கட்டவேண்டும் என்றார்கள். பணம் இல்லாத நிலையில் அன்றை நாள் கூலிச் சம்பளத்தை வைத்து அடுத்த நாள் பாடசாலைக்கு அனுப்பலாம் என்ற எண்ணத்தில் அவர்களை வீட்டில் மறித்து விட்டு நானும் கூலி வேலைக்குப் போய் விட்டேன். அவ் வேளையிற்தான் சிறீலங்கா விமானப்படையின் கிபீர் விமானங் கள் எங்கள் வீட்டிற்கு அயலிற் குண்டுகளைப் போட்டது. நான் வீட்டிற்கு ஓடி வருவதற்கு முன் கணவர் வந்து பிள்ளைகளைப் பார்த்தபோது ஒரு பிள்ளை உடனேயே இறந்துவிட்ட நிலையில் மற்றைய பிள்ளை தண்ணீர் தண்ணீர் என்று அழுதுகொண்டும் இருந்தது. அந்த நேரந்தான் நானும் வந்தேன். அந்த நிலைமையை எவ்வாறு சொல்வதென்றே தெரியவில்லை. அழுது புலம்பி வைத்திய சாலைக்குக் கொண்டு போவதற்கிடையில் மற்றைய பிள்ளையும் இறந்து விட்டது. அந்தச் சம்பவத்தில் எனது பிள்ளைகளைப் பறி கொடுத்த நிலையில் மிகவும் மனவருத்தத் துடன் வாழ்ந்து வருகின்றேன். சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் கரிப்பட்டமுறிப்பு பகுதி அனைத்தும் எறிகணைத் தாக்குதல்கள் நடந்தவண்ணமிருந்தது. அதனாற் பயந்து போய் இன்றைக்கும் எறிகணை வீசுவானோ என்ற பயத்தில் இருக்கும் போதுதான் இச்சம் பவம் இடம்பெற்றது. எனது பிள்ளைகள் மரத் திற்குக் கீழ் விளையாடிக் கொண்டிருந் திருக்கிறார்கள். அந்த நேரந்தான் கிபீர் குண்டு களைப் போட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் என்னுடைய இரு பிள்ளைகள் உட்பட ஏழு பேர் இறந்தார்கள் ஐம்பதிற்கும் மேற்பட் டவர்கள் காயமடைந்தனர்."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின்



கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. க.ஜயாசாமிப்பிள்ளை - 33
02. கந்தசாமி - -
03. ஜெ.சாமிப்பிள்ளை - -
04. அ.பாலச்சந்திரன் - 40
05. ஜெயபாலசிங்கம் ஜெயராஜ் கடற்றொழில் 20
06. மல்லிகா - -
07. கணேசமூர்த்தி தயாநிதி - 32

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. கந்தசாமி செல்வராசா - 36
02. சுகுமார் வினோதீபன் மாணவன் 14
03. குகராசா ஜசிதா மாணவன் 13
04. கந்தசாமி செல்லா - 32
05. நல்லதம்பி செபமாலை - 66
06. மாணிக்கம் சரவணமுத்து - 34
07. சரசு பத்மலிங்கம் - 21
08. பாலசுப்பிரமணியம் ஜெயக்குமார் - 21
09. திருஞானம் மனோகரன் - 24
10. முருகு இராசதுரை - 63
11. ஐயாத்துரை பரமேஸ்வரன். - 56
12. சேவியர் மனோரஞ்சிதம் - 36
13. சேவியர் வத்சலா மாணவன் 05
14. செபமாலை றெஜீனா – 66

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சுதந்திரபுரம் படுகொலை – 10 யூன் 1998

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் கிராமம், உடையார்கட்டுச் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி அண்ணளவாக இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம் விவசாயம் ஆகும். இக்கிராமத்தில் ஆரம்பகாலங்களில் குடித்தொகை குறைவாகக் காணப்பட்ட போதும் ஏனைய பிரதேசங்களிருந்து காலத்துக்குக் காலம் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் 1996ஆம் ஆண்டினைத் தொடர்ந்து கூடுதலாக இப்பிரதேசத்தில் வசித்துவந்தனர்.

10.06.1998 அன்று காலை 9.15 மணி தொடக்கம் 11.30 மணிவரை ஆனையிறவு, அம்பகாமம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும் விமானப் படையினரும் இணைந்து இப் பகுதியில் மக்கள் வாழ்விடங்கள் மீது எறிகணைத் தாக்குதலையும், விமானத் தாக்குதலையும் நடத்தினார்கள். மக்கள் எதிர்பார்த்திராத சந்தர்ப்பத்தில் இத்தாக்குதல் இடமபெற்றதனால் மக்களால் பாதுகாப்புத் தேடிக்கொள்ள முடியவில்லை. தாக்குதலுக்கு உட்பட்ட பகுதியானது புகைமண்டலமாக மாறியதுடன், எங்கும் ஒரே அழுகுரல்கள் கேட்டவண்ணமிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் ஆங்காங்கே காணப்பட்டன. காயமடைந்தவர்களையும் விட்டுவிட்டு ஏனையவர்கள் தமது உயிர்களைக் காப்பாற்றும் நோக்குடன் ஓடி ஒளித்துக் கொண்டார்கள். பின்னர் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் முயற்சியில் இங்குள்ள மக்கள் ஈடுபட்டனர்.

நடைபெற்ற தாக்குதலில் முப்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பதிற்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர். மக்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் அழிந்தன. பத்து வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. நூறு வீடுகள் சேதமடைந்தன. பயன்தரு தென்னை மரங்கள் அழிந்ததால் கிராமத்தின் அழகும், அமைப்பும் சீர்குலைந்து போயிற்று.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராஜகோபாலன் ரவிச்சந்திரன், விவசாயம் - 28
02. இராமு இரட்ணலிங்கம், தொழிலாளி - 26
03. இராசலிங்கம் உதயகுமார், தொழிலாளி - 39
04. இரத்தினசிங்கம் இராணிமலர் - 28
05. நவக்குமார் கோகிலா - 30
06. நவராசா கிருஸ்ணமூர்த்தி, தொழிலாளி - 25
07. கந்தையா குணசேகரம் - 24
08. புஸ்பநாதன் சதீஸ், மாணவன் - 10
09. புஸ்பநாதன் கலைச்செல்வி, குழந்தை - 5
10. புஸ்பநாதன் தேவநந்தினி, குழந்தை - 2
11. புஸ்பநாதன் சத்தியசீலன், மாணவன் - 8
12. புஸ்பநாதன் ரமேஸ்குமார், மாணவன் - 13
13. பழனிவேல் திருச்செல்வி, மாணவி - 18
14. மனுவல் தேவதாஸ் - 45
15. முத்துத்தம்பி வசந்தகுமாரி - 19
16. முத்துவேல் ஞானசேகரம் - 59
17. அமிர்தலிங்கம் சுதா - -
18. ஆசிர்வாதம் பாத்திமா மாணவி 17
19. அற்புதம் ஜெகன் - 23
20. ஜேபன் - -
21. பொன்னன் சுரேஸ்குமார் - -
22. செபஸ்தியாம்பிள்ளை ஜெயரட்ணம், மாணவன் - 21
23. செல்வராசா சிறிதரன், வீட்டுப்பணி - 21
24. வெள்ளையப்பன் சுப்பையா, விவசாயம் - 57
25. சாட்செறோன் கொண்செட்டா, வீட்டுப்பணி - 26
26. சாணக்குட்டி யோகபாலசிங்கம், தனியார்தொழில் - 27
27. சின்னத்துரை - -
28. சின்னத்துரை சுதாகரன், தனியார்தொழில் - 20
29. சிதம்பரப்பிள்ளை குமாரவேல் - 48
30. விநாயகமூர்த்தி தேவகரன், தனியார்தொழில் - 22
31. விக்கினேஸ்வரன் நேசராணி - 40
32. வல்லிபுரம் ராணிமலர், வீட்டுப்பணி - 27
33. றிச்சாட் செறோன்கொன்சென்றா - 26

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராமலிங்கம் சர்மா - 48
02. நயினாமுகமது முகமதுநவூம் - 31
03. நாதன் - 38
04. நாராயணன் சத்தியசீலன், தொழிலாளி - 18
05. நிசாம் - 30
06. க.ஜீவநந்தினி - 21
07. க.மாலினி - -
08. கந்தையா சுப்பிரமணியம், விவசாயம் - 22
09. கதிர்வேலு நாகதேவன், விவசாயம் - 34
10. கதிரேசு ஜெபனேஸ்வரன் - 18
11. குமாரநாயகம் மேகநாதன், சுயதொழில் - 24
12. குமரேசன் - 30
13. கணேஸ் மாலினி - 34
14. கணேஸ் றேகன் - 24
15. கி.வக்சலா - 28
16. கிருஸ்ணன் ரவிக்குமார், கூலித்தொழில் - 26
17. கிறிஸ்ரி வட்சலா - 28
18. ப.ஜெயரட்ணம் - 21
19. ப.சீலன் - 17



20. புஸ்பராசா சுதன் - 20
21. பாலு மாணிக்கம் - 64
22. பத்மராசா - 21
23. பிரசாந்தினி மாணவன் 15
24. ஐ.செல்வம் - 27
25. ஐயம்பிள்ளை செல்வன் - 26
26. வை.லட்சுமி - 63
27. வையாபுரி இலட்சுமி - 63
28. தியாகராசா சந்திரலிங்கம் - 42
29. மாணிக்கம் - 64
30. முத்துக்கறுப்பன் கதிர்காமத்தம்பி - 65
31. முத்துலிங்கம் பத்மராசா - 22
32. அ.விஜயகுமார் மாணவன் 14
33. அந்தோணிப்பிள்ளை சிவகுமார், மாணவன் - 7
34. அப்புப்பிள்ளை கறுப்பையா, விவசாயம் - 65
35. அப்புப்பிள்ளை சின்னக்கறுப்பன், விவசாயம் - 65
36. ஆறுமுகம் மீனாம்பிகை - 28
37. ஜெயகாந்தன் - 20
38. ஜெயச்சந்திரன், மாணவன் - 15
39. ஜேசுநாயகம் சில்வஸ்டர், கூலித்தொழில் - 26
40. கே.தாரணி - 21
41. கோமலட்சுமி - 18
42. கோவிந்தன் - 56
43. பொன்னன் பழனியாண்டி, சுயதொழில் - 60
44. பொன்னுத்துரை ரவிச்சந்திரன் - 29
45. சொக்கலிங்கம் சுப்பம்மா, வீட்டுப்பணி - 60
46. சொர்ணலட்சுமி - 18
47. சோளநாதன் இந்திரகுமார் - 23
48. சௌந்தராஜன் சசிகரன், மாணவர் - 16
49. செல்வநாயகம் சாந்தகுமாரி, சுயதொழில் - 20
50. செல்லத்துரை சற்குணநாதன் - 41
51. செல்லத்தம்பி குமரேசன் - 30
52. ச.சகுந்தலா - 26
53. சந்திரலிங்கம் - 42
54. சுதர்சன் - 25
55. சின்னக்கறுப்பையா - 62
56. சிவநாதன் ருக்குமணிதேவி, வீட்டுப்பணி - 23
57. சிவனேசன் - 18
58. சிவஞானம் ஜெயச்சந்திரன், மாணவன் - 15
59. சிவராசா ஞானசேகரலிங்கம் - 40
60. சிறிகுமார் மதிவதனா, மாணவி - 14
61. சுவிந்திரன் - 21
62. விஜயகுமார் டெய்சிராணி - 33
63. ரஞ்சன் மலர்விழி - -
64. ரஞ்சன் வின்சன், குழந்தை 5

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வடமுனை நெடுங்கல் படுகொலை – 07 யூன் 2006

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள கிராமங்களில் வடமுனையும் ஒன்றாகும். இது வெலிக்கந்தையிலிருந்து 07கிலோமீற்றர் தூரத்திலும் வாழைச்சேனையிலிருந்து 35கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான வன்முறைகள் குறைவடைந்திருந்தாலும் மகிந்த ராஜபக்ச சனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான தாக்கதல்களும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. நாளுக்கு நாள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் கொல்லப்படடுக் கொண்டு வந்தனர். இதன் தொடர்ச்சியாகவே மட்டக்களப்பு வடமுனைப் படுகொலையும் அமைந்துள்ளது.

07.06.2006 அன்று காலை 10மணியளவில் வடமுனையிலிருந்து பொருட்கள் வாங்குவதற்காக உழவு இயந்திரத்தில் 20 பொதுமக்கள் வரை பயணித்துக் கொண்டிருந்தனர். நெடுங்கல் எனும் இடத்தில் இவர்களை இலக்கு வைத்து சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையினரால் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் ஆறு மாதக் குழந்தை உட்பட 10பேர் உயிரிழந்ததுடன் 03 குழந்தைகள் உட்பட 09 பேர் படுகாயமடைந்தனர். இப்படுகொலையானது, ஒரு திட்டமிட்டஇன அழிப்பு நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது. எல்லைபபுறக் கிராமங்களிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி சிங்கள மக்களை குடியேற்றும் ஒரு செயற்பாட்டிற்கான ஆரம்பமாகவே நோக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் இவ் வடமுனைப்பகுதி மக்கள் இலங்கை இராணுவத்தால் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வந்தனர். 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் இப்பகுதி மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். 1995ஆம் ஆண்டின் பின்னர் மக்கள் இங்கு மீளக் குடியமரத் தொடங்கினர். 2002ஆம் ஆண்டு போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மக்கள் இங்கு பெருமளவில் குடியேறத் தொடங்கினர். ஆனால் மீண்டும் தமக்கு அந்நிலை ஏற்படுமோ என்ற ஏக்கத்தில் அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சரவணமுத்து சந்திரகுமார், 10
02. சரவணமுத்து தினேஸ்குமார், 11
03. சரவணமுத்து மதியழகன், 22
04. மதியழகன் கவிதா, 20
05. சிவநேசன் மதிமலர், 24
06. ஐயாத்துரை சிறிமா, 33




07. காசிப்பிள்ளை கோமதி, 40
08. தளையசிங்கம் தனலட்சுமி, 48
09. பத்தினியன் சின்னத்தம்பி, 56
10. சிவநேசன் சிந்துஜன், 06மாதம்

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் )

01. சரவணமுத்து சந்திரன், 16
02. கவிதா, 02
03. பிரதீபன், 01
04. சிறிதரன் அனோ, 06
05. கனகன் இராசரத்திம், 40
06. தங்கவடிவேல், 46
07. மயில்வாகனம் ஜெயரத்தினம், 46
08. வீரக்குட்டி சின்னத்தம்பி, 50
09. பதினியன் சின்னத்தங்கை, 56

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வங்காலை படுகொலை – 08 யூன் 2006

வங்காலைக் கிராமமானது மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசெயலர் பிரிவில் கடற் கரையோரமாக அமைந்துள்ளது. இக் கிராம மக்கள் மீன்பிடித் தொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு சுகந்தபுரி, தோமஸ்புரி, பஸ்புரி போன்ற சிறு கிராமங்கள் காணப்படுகின்றன. தோமஸ்புரியில் வசித்துவந்த மார்ட்டின் என்பவரும் அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளும் இலங்கை இராணுவத்தினரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர்.



மேற்படி சம்பவமானது 08.06.2006 அன்று இரவு தோமஸ்புரியிலுள்ள அவர்களின் வீட்டில் இடம் பெற்றுள்ளது. தச்சுத் தொழிலாளியான மார்ட்டின் என்பவர் தச்சுத் தொழிலுக்கு பயன்படுத்தும் கருவிகளாலேயே படுகொலை செய்யப்பட்டார். அவரது மனைவி பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின்னர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். மேலும் பிள்ளைகள் இருவரும் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட பின்னர் தந்தையும் பிள்ளைகளும் தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்தனர். இச்சம்பவத்திற்கு நேரடியான சாட்சியங்கள் இல்லாவிடினும் இராணுவச் சப்பாத்துத் தடயங்கள் அதிகளவு காணப்படுகின்றமையும் அப்பகுதியில் சம்பவதினம் இரவு இராணுவ நடமாட்டம் காணப்பட்டதையும் அப்பகுதி மக்கள் உறுதிப்





படுத்துகின்றனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. மூர்த்தி மார்ட்டின், 35
02. மார்ட்டின் மேரி மெடலின் (சித்திரா), 27
03. மார்ட்டின் ஆன் லூக்சியா 09,
04. மார்ட்டின் ஆன் நிலக்சன் 07

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# கைதடி மனிதப் புதைகுழி – 06,07,08 யூன் 2006

இலங்கையின் வடபகுதியில் காணப்படும் மாவட்டங்களில் அதிகளவு மக்கள் செறிவைக் கொண்ட மாவட்டமாக யாழ்.மாவட்டம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏ-9 நெடுஞ்சாலையில் யாழ் நகரில் இருந்து



10கிலோ மீற்றர் தூரத்தில் கைதடிப் பிரதேசம் அமைந்தள்ளது. 1996ஆம் ஆண்டு யாழ்குடா நாட்டினை இலங்கை இராணுவம் ஆக்கிரமித்ததன் பின்னர் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காணாமற்போயிருந்தனர். அப்போது அவர்களில் சிலர் கைதடியை அண்மித்த செம்மணிப் பகுதியிலிருந்து எலுப்புக்கூடுகளாக மீட்கப்பட்டனர். அதே போல 2006 யூன் மாதத்தில் கைதடித் தரவை





வெளியில் மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வெளிப்பட்ட செய்திகள் மக்கள் மத்தியில் மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது.

06.06.2006 அன்று கைதடித் தரவைப் பகுதிக்கு மண் அகழ்விற்காகச் சென்றவர்கள்



அப்பகுதிக்குள் புதைக்கப்பட்டிருந்த சடலமொன்றைக் கண்டு அது தொடர்பாக தெரிவித்ததையடுத்து அப்பகுதியில் தேடுதல் பணியை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி மாவட்ட நீதவானால் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனடிப்படையில் பொலிசாரும் பொதுமக்களுமாக அப்பகுதியில் தோண்டும் பணியில் ஈடுபட்டனர். மூன்று நாட்களாக இப்பணி இடம்பெற்றது. இதில் நான்கு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும் யாழ்.குடா



நாட்டில் பரவலாக காணாமற்போனோர் இவ்வாறு புதைக்கப்பட்டிருக்கலாம் என மக்கள் ஐயம் தெரிவித்தனர்.

இப்புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. வைதீஸ்வரசர்மா வெங்கடகிருஸ்ண சர்மா, 50
02. விசுவலிங்கம் பரணீதரன், 29
03. இரு ஆண்களின் சடலங்கள்

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# நாகதம்பிரானாலய அடியவர் மீது கிளைமோர்த் தாக்குதல் – 02 யூன் 2008

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக்களின் ஆலயங்களில் ஒன்றான புதுார்நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்திற்காக வருடந்தோறும் பல் வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து பெருமளவான மக்கள் ஆலயத்திற்குச் சென்று தமது நேர்த்திக் கடன்களை பல ஆண்டுகளுக்கும் மேலாக நிவர்த்தி செய்து வருகின்றனர். எனினும் அக்காலத்தில் வன்னிப் பகுதிகளில் இடம்பெற்று வந்த கிளை மோர்த்தாக்குதல்கள், விமானத்தாக்குதல்கள் காரணமாக ஆலய விழாக்கள், பொதுநிகழ்வுகள் என்பவற்றில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கைகள் பெருமளவில் குறைந்தன.

அந்தவகையில் 2008 யூன் இரண்டாம் நாள் புதுார் நாகதம்பிரான் ஆலயத்திற்குச் சென்ற பக்தர்களின் எண்ணிக்கை வழமையை விடக் குறைவாகவே இருந்தது. அங்கு வருகை தந்தவர்கள் நீண்ட பயணங்களை மேற்கொண்டே வருகைதந்தனர்.


அதில் குறிப்பாக முல்லைத்தீவு அம்பலவண் பொக்கணையைச் சோந்த நால்வரும் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியைச் சேர்ந்த குழந்தைகள், பெண்கள் என 06 பேருமாக மொத்தம் 10 பொதுமக்கள் கார் ஒன்றில் ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியூடாக ஆலயத்திற்குச் சென்று தமது வழிபாட்டினை முடித்துவிட்டு தமது வீடு நோக்கி அதே பாதையால் சென்று கொண்டிருந்தர். இரவு 8மணியளவில் கார் மாங்குளத்திலிருந்து சுமார் 08கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கரிப்பட்டமுறிப்பு பகுதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானது. தந்தை மற்றும் மகன் அடங்கலாக 06 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கணபதிப்பிள்ளை முருகதாஸ், 36
02. முருகதாஸ் நிலவன், 04
03. காத்தாப்பிள்ளை நாகராசா, 57
04. ஜயாத்துரை வசந்தராசா, 28
05. தர்மலிங்கம் யோகேஸ்வரி, 48
06. கணேசலிங்கம் கனிஸ்டா, 09

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


Preparation of Income Taxes T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# மன்னன் பெயருடன் கண்டுபிடிக்கப்பட்ட யாழ்ப்பாண இராசதானி கால முதல் நாணயம்!

இலங்கைத் தமிழர் வரலாற்றில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஏறத்தாழ 350 ஆண்டுகள் ஆட்சி செய்த பெருமை யாழ்ப்பாண அரசிற்கு உண்டு. ஆயினும் அதன் சமகாலத்தில் தோன்றியிருக்கக் கூடிய வரலாற்று இலக்கியங்கள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் இவ்வரசில் ஆட்சி புரிந்த மன்னர்களின் பெயர்கள், அவர்கள் ஆட்சி செய்த காலங்கள், அவர்களின் வரலாற்றுப் பணிகள் முதலானவற்றை கால ஒழுங்கில் எடுத்துக் கூறமுடியவில்லை. இதுவரை இவ்வரசு காலத்தில் வெளியிடப்பட்ட இரண்டு கல்வெட்டுக்கள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இவ்வரசால் வெளியிடப்பட்ட ஆயிரக்கணக்கான நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை இலங்கைத் தமிழரின் அரச உருவாக்கம், தமிழ் நாணயங்களின் பயன்பாடு தொடர்பான பாரம்பரிய கருத்தில் இருந்து விலகி நம்பகத்தன்மையுடைய பிற தொல்லியல், நாணயச் சான்றுகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டால் யாழ்ப்பாண அரசு பற்றிப் பல வரலாற்று உண்மைகள் வெளிவர இடமுண்டு. இதற்குப் பின்வரும் நாணயம் ஒரு உதாரணமாகும்.

இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நாணயவியல் அறிஞர் திரு.கொட்றிங்ரன் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய நாணயங்கள் பற்றி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் (Codrington 1924:90). அந்நாணங்களின் முன்பக்கத்தில் மூன்று கோடுகள் கொண்ட பீடத்தின் மேல் இடது அல்லது வலப் பக்கம் பார்த்த நிலையில் நந்தியும், நந்திக்கு இரு மருங்கிலும் குத்துவிளக்கும், நந்தியின் தலைப்பகுதிக்கு மேல் பிறைச் சந்திரனும், நாணய விளிம்பை ஒட்டி வட்டமாகச் சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன. நாணயத்தின் பின்பக்கத்தில் நாணய விளிம்பை ஒட்டி வட்டமாகச் சிறு புள்ளிகளும், இரு பக்கங்களில் குத்துவிளக்கும் அவற்றிற்கு இடையே தேவநாகரி எழுத்தில் நாணயத்தை வெளியிட்ட மன்னன் பெயரும் காணப்படுகின்றன. பிற்காலத்தில் இந்நாணத்தில் உள்ள பெயரை ஆராய்ந்த பிரிசெப் அதை “ஸ்ரீவி..கச” என வாசித்தார் (Prensep 1958:424). ஆயினும் இவ்வாசிப்பை இலங்கை நாணயவியல் பற்றிய ஆய்வுகளில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. 1970 களின் பின்னர் இவ்வகை நாணயங்கள் சிலவற்றை பூநகரி உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. கிருஸ்ணமூர்த்தி, நிலஅளவையாளர் திரு.சேயோன் போன்ற ஆய்வாளரும் வடஇலங்கையில் கண்டு பிடித்துள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து இவ்வகை நாணயங்கள் சிலவற்றை நாம் வடஇலங்கையில் பூநகரி, மாதோட்டம், கந்தரோடை முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது கண்டுபிடிக்க முடிந்தது. இந்நாணயங்களின் முன்பக்கத்தில் உள்ள நந்தியின் வடிவமைப்பு “சேது” மொழி பொறித்த யாழ்ப்பாண அரசு கால நாணயங்களை ஒத்திருப்பதும், தமிழகத்தில் கண்டுபிடிக்கப்படாத இந்நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டமையும் இந்நாணயங்கள் வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் அரசால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றியது. இதனால் இந்நாணயத்தில் உள்ள மன்னன் பெயரை வாசிப்பதற்கு இடைக்காலத் தேவநாகரி வரிவடிவத்தில் புலமையுள்ள தமிழகக் கல்வெட்டு அறிஞர்களான ஐராவதம் மகாதேவன், பேராசிரியர் இராசு, கலாநிதி நாகசுவாமி போன்றவர்களின் உதவியை நாடினேன். அவர்கள் இரு நாணயங்களில் உள்ள பெயர்களை “ஸ்ரீசாகவன்” என வாசித்துள்ளனர். இவ்வாசிப்பை தென்னிலங்கை அறிஞர்கள் சிலர் பொருத்தமானவை என ஏற்றுக்கொண்டாலும் வேறு சில அறிஞர்கள் புதிய வாசிப்பைக் கொடுக்க முற்பட்டுள்ளனர். இந்நிலையில் அண்மையில் (2018) கட்டுக்கரை அகழ்வாய்விலும் இவ்வகை நாணயங்கள் மேலும் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்நாணயங்களின் வாசிப்புக்களை மீளாய்வு செய்யத்தூண்டின. இதற்காக இந்நாணயங்களின் புகைப்படங்களை தமிழகத் தொல்லியற் திணைக்கழகத்தின் மூத்த கல்வெட்டு அறிஞரான கலாநிதி இராஜகோபால் அவர்களுக்கு அனுப்பியிருந்தேன். அவர் மைசூர் சாசனவியலாளர் திரு.முனிரத்தினம் அவர்களுடன் இணைந்து நாணயங்களில் உள்ள பெயர்களை நந்தி நாகரி வரிவடிவத்தில் எழுதப்பட்ட “ஸ்ரீபுவனேகபாஹு” என வாசித்துள்ளனர். இந்த வாசிப்பை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டுப் பேராசிரியரான இராஜவேலு அவர்களும் பொருத்தமானதென உறுதிப்படுத்தி உள்ளார்.

இந்நாணயங்களின் வடிவமைப்பு, நாணயத்தின் முன்பக்கத்தில் உள்ள நந்தியின் தோற்ற அமைப்பு, யாழ்ப்பாண அரசு கால வரலாற்றுப் பின்னணி என்பவற்றை வைத்துப் பார்க்கும் போது இந்நாணயங்களில் உள்ள பெயரை “ஸ்ரீபுவனேகபாஹு” என வாசித்துள்ளமை பொருத்தமாகவே தோன்றுகின்றது. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு சார்பாக அவனின் வளர்ப்பு



மகனும், மலையாள இளவரசனுமான செண்பகப்பெருமாள் யாழ்ப்பாண அரசின் மீது படையெடுத்தது பற்றிக் கோகிலசந்தேஸய என்ற சிங்கள இலக்கியம் கூறுகின்றது. இவன் இலங்கை வரலாற்றில் செண்பகப்பெருமாள் என்ற பெயருடன் சபுமல்குமாரயா, புவனேகபாகு என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டான். யாழ்ப்பாண அரசு தொடர்பாக பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபமாலையும், கயிலாயமாலையும் புவனேகபாகு என்னும் அமைச்சனே நல்லூர் நகரத்தையும், நல்லூர் கந்தசாமி கோவிலையும் கட்டுவித்தான் எனக் கூறுகின்றன. இதை நல்லூர் ஆலயத்தில் இன்றுவரை ஓதப்பட்டு வரும் கட்டியம் மேலும் உறுதிசெய்கின்றது. இவனே 1450 தொடக்கம் 1467 வரை யாழ்ப்பாண அரசில் புவநேகபாஹு என்ற பெயரில் ஆட்சி செய்த செண்பகப்பெருமாள் என்பதை பேராசிரியர் இந்திரபால அவர்கள் யாழ்ப்பாண பிரதான வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் மூலம் உறுதிசெய்துள்ளார். இதைப் புவனேகபாஹு என்ற பெயரில் வெளியிட்ட நாணயங்கள் மேலும் உறுதிசெய்வதாக் கூறலாம்.

செண்பகப்பெருமாள் கோட்டை மன்னன் சார்பாக யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் புவநேகபாஹு என்ற பெயருடன் ஆட்சி செய்த போதும் அவன் தனது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த தமிழ் மக்களின் மத நம்பிக்கைகளையும், பண்பாட்டையும் பெரிதும் அனுசரித்து ஆட்சி செய்த மன்னனாகவே காணப்படுகின்றான். இதற்கு இவன் வெளியிட்ட தமிழ்க் கல்வெட்டும், கந்தன், ஆறுமுகன் பெயரில் வெளியிட்ட நாணயங்களும் உறுதிசெய்கின்றன. மேலும் யாழ்ப்பாண இராசதானியைத் தோற்றுவித்த பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகளின் அரச இலட்சனையாக நாணயங்களில் பயன்படுத்திய நந்தியை புவநேகபாஹு தனது நாணயங்களிலும் பயன்படுத்தியதன் மூலம் இது மேலும் உறுதியாகின்றது.

ஆயினும் சேது மொழி பொறித்த நாணயங்களுக்கும் புவனேகபாஹு வெளியிட்ட நாணயங்களுக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்த வேறுபாடுகள் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய நாணய மரபை நினைவுபடுத்துவதாகவே உள்ளன. ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் அறிமுகப்படுத்திய நாணயங்களில் நந்திக்கு கீழே “சேது” என்ற மங்கல மொழி காணப்படுகின்றது. இம்மொழி யாழ்ப்பாண இராசதானியைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு தமிழ்நாடு இராமேஸ்வரம் சேது தலத்துடன் கொண்டிருந்த தொடர்பைக் காட்டுகின்றது. ஆனால் புவனேகபாகபாஹு

வெளியிட்ட நாணயங்களில் சேது மொழிக்குப் பதிலாக நந்திக்கு கீழே மங்கலத்தைக் குறிக்கும் மூன்று கோடுகளால் வடிவமைக்கப்பட்ட பீடம் காணப்படுகின்றது. இப்பீடம் இலங்கைக் குரிய தனித்துவமான அம்சமாகும். தென்னாசியாவில் பெருங் கற்காலப் பண்பாடு நிலவிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள் சிலவற்றில் சுவஸ்திகா ஒரு முக்கிய புனிதச் சின்னமாகக் காணப்படுகின்றது. ஆனால் இலங்கைப் பெருங் கற்கால மட்பாண்டங்களில் மட்டும் இச்சுவஸ்திகா பீடத்துடன் காணப்படுகின்றது. இம்மரபு பிற்காலத்தில் தமிழ் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் காணப்படுகின்றன. இதற்கு கஜலட்சுமி உருவம் பொறித்த நாணயம் சிறந்த சான்றாகும். ஆயினும் இம்மரபு பிற்கால சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் மறைந்த போது அம்மரபு தமிழ் நாணயங்களில் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதற்கு யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னர் வடஇலங்கையில் இருந்த அரசால் காலத்திற்கு காலம் வெளியிடப்பட்ட நாணயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். அம்மரபு யாழ்ப்பாண இராசதானி காலத்திலும் தொடர்நத்தற்கு புவநேகபாஹு வெளியிட்ட நாணயங்களை ஆதாரமாகக் கொள்ளலாம்.



சேது மொழி பொறித்த எல்லா நாணயங்களிலும் படுத்திருக்கும் நந்தி வலப்பக்கம் பார்த்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனால் புவனேகபாஹு வெளியிட்ட நாணயங்களில் உள்ள நந்தி வலப்பக்கமாக மட்டுமன்றி இடப்பக்கமாகவும் பார்த்த நிலையில் காணப்படுகின்றது. இம்மரபு யாழ்ப்பாண இராச தானிக்கு முன்னர் வடஇலங்கையில் இருந்த அரசுகளால் வெளி யிடப்பட்ட நாணயங்களிலும் காணப்படுகின்றது. இதனால் இம் மரபை புவனேகபாகுஹு தான் வெளியிட்ட நாணயங்களிலும் பின்பற்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. சேது மொழி பொறித்த நாணயங்கள் தமிழ் மொழியிலேயே வெளியிடப் பட்டுள்ளது. ஆனால் புவனேகபாஹு நாணயம் வடமொழியில் வெளியிடப்பட்டுள்ளது. சமகாலத்தில் தென்னாசியாவில் கல் வெட்டுக்கள் சுதேசமொழியில் வெளியிட்டாலும் நாணயங்களை வடமொழியில் வெளியிடும் மரபே பெரும்பாலும் காணப்பட்டது. இதற்கு பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்களைத் தமிழில் வெளியிட்ட சோழர் நாணயங்களை வடமொழியில் வெளியிட் டதை உதாரணமாகக் காட்டலாம். இவர்களைப் பின்பற்றியே சிங்கள மன்னர்களும் கல்வெட்டுக்களைச் சிங்கள மொழியில் வெளியிட்டபோது நாணயங்களை வடமொழியில் வெளியிட் டுள்ளனர். இதற்கு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் வட மொழி பொது மொழியாக இருந்ததே காரணம் என அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த நோக்கத்திலேயே புவனேகபாஹுவும் தனது நாணயங்களை வடமொழியில் வெளியிட்டான் எனக் கருத இடமுண்டு.







பண்டு தொட்டு இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் "சேது" மொழி பொறித்த நாணயங்களைத் தவிர ஏனைய தமிழ் நாணயங்கள் தமிழகத்துடனான அரசியல், வாணிபத் தொடர் பால் இலங்கைக்கு வந்ததாகவே பார்த்துள்ளனர். ஆனால் இலங்கையில் குறிப்பாக வடஇலங்கையில் கிடைத்துள்ள பல்வேறு காலகட்டங்களுக்கு உரிய தமிழ் நாணயங்களை ஆராய்ந்து பார்த்தால் அவை தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட் டதற்கோ, தமிழக அரச வம்ம்சங்களால் வெளியிடப்பட்டதற்கோ ஆதாரங்கள் காணப்படவில்லை. தமிழக நாணயவியல் அறிஞர்கள் அவற்றை இலங்கைக்குரிய தனித்துவமான நாணயங்களாகவே பார்க்கின்றனர். அந்நாணயங்களை ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இலங்கையில் தோன்றி வளர்ந்த தமிழ் அரச மரபிற்கு புது வெளிச்சம் பாய்ச்சலாம்.

1972 இல் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் பற்றி அறிவியல் பூர்வமாக ஆராய்ந்த பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் தனது நூலின் முன்னுரையில் யாழ்ப்பாண இராச தானியில் ஆட்சி புரிந்த ஒரு மன்னன் பெயர் கூட கல்வெட்டில் பேணப்படவில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தி யிருந்தார். இந்நிலையில் புவனேகபாஹுவின் பெயர் கொண்ட நாணயங்கள் முதன் முறையாகக் கிடைத்திருப்பது யாழ்ப்பாண இராசதானி பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது.

பேராசிரியர்ப.புஸ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நன்றி:பேராசிரியர் பரமு.புஷ்பரட்ணம்.

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# மதில் மேல் இருக்கும் ஆமைகள்?

மே 23, 2023

மற்றொரு மே 18ம் கடந்து போய்விட்டது. இது பதினாலாவது மே18. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் அரசியல் எதுவரை முன்னேறியிருக்கிறது? அல்லது எங்கே தேங்கி நிற்கிறது?






மே 18ஐத் தமிழ்த்தரப்பு எவ்வாறு அனுஷ்டிக்கிறது என்பதிலிருந்தே ஒரு மதிப்பீட்டுக்கு வரலாம். அது ஒரு தேசிய துக்க தினம் என்று தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் சில பகுதிகளைத் தவிர ஏனைய தமிழ்ப் பகுதிகளில் வாழ்க்கை வழமைபோல இயங்கியது. பாடசாலைகள் இயங்கின. அலுவலகங்கள் இயங்கின. பாடசாலைகளில் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நடந்தன: வெளிக்களப்பயிற்சி நிலையப் பரீட்சைகள் நடந்தன.

ஒரு தொகுதி மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி போய்க் கொண்டிருக்க, எனையவர்கள் தமது அன்றாடத் தொழில்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பகுதிகளில் ஆங்காங்கே கஞ்சி காய்ச்சி கொடுக்கப்பட்டது. கஞ்சி காய்ச்சும் நிலையங்களைக் கடந்து போனவர்கள் ஆங்காங்கே கஞ்சியை வாங்கி குடித்தார்கள். பின்னர் வீட்டுக்குச் சென்று வழமையான மதிய உணவை அருந்தினார்கள். அதாவது சித்திரைக் கஞ்சியை குடிப்பதுபோல விரதமிருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு விரத உணவாக அருந்தியவர்கள் எத்தனை பேர்?

மே 18க்கு முதல் நாள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அந்த நாளை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கடைகளை மூடுமாறும் பாடசாலைகளை மூடுமாறும் அழைப்பு விடுத்தது. ஒரு தேசிய துக்க தினத்தை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று அதற்கு முதல் நாட்தான் ஒரு கட்சி மக்களுக்கு அழைப்பு விடுக்கிறது என்றால் நிலைமை எப்படியிருக்கிறது?

ஒரு தேசிய துக்க தினத்தன்று, தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் துக்கத்தை அனுஷ்டிக்க, பெரும்பகுதியினர் தமது வழமையான அன்றாடச் சோலிகளுக்குள் மூழ்கிக் கிடந்தார்கள். அப்படியென்றால் அதை ஒரு தேசிய துக்க தினம் என்று அழைக்கலாமா?

கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்காலில் மொத்தம் 2000க்கும் குறையாதவர்கள் கூடினார்கள் என்று ஊடகவியலாளர்கள் கூறுகிறார்கள். பல்கலைக்கழக மாணவர்களும் அப்படித்தான் கூறுகிறார்கள். பொதுக் கட்டமைப்பினர் கிட்டத்தட்ட 4,000பேர் வரை கூடினதாக கூறுகிறார்கள். தாங்கள் மொத்தம் 1500 தீப்பந்தங்களை நட்டு வைத்ததாகவும், ஆனால் அதைவிட அதிகமான தொகையினர் அங்கு கூடியிருந்ததாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

மக்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி வருவதற்கு பொதுவான ஏற்பாடுகள் எவையும் இருக்கவில்லை. நடைமுறையில் உள்ள பொதுக் கட்டமைப்பானது நினைவு கூர்தலுக்கான பொது இடத்தை நிர்வகிப்பதற்கும் அப்பால் மக்களைத் திரட்டும் வேலைகளை செய்யவில்லை. அக்கட்டமைப்பில் சில கத்தோலிக்க மதகுருக்களும் செயற்பாட்டாளர்களும் உண்டு. ஓர் அங்லிகன் மதகுரு கட்டமைப்பை வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும், பரந்துபட்டதாகவும் மாற்ற வேண்டும் என்று முயற்சித்திருக்கிறார். திருகோணமலையைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரும் அவ்வாறு கேட்டிருக்கிறார். பல்கலைக்கழக மாணவர் அமைப்பினரும் கேட்டிருக்கிறார்கள். அதுதொடர்பாக கலந்துரையாடுவதற்கு மெய்நிகர் சந்திப்பு ஒன்றை ஒழுங்குபடுத்துவதாக கூறியிருக்கிறார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

இந்த விவகாரத்தை நான் மே 18க்கு முன்னரே எழுத யோசித்தேன். ஆனால் இருக்கின்ற அமைப்பைக் குழப்பக்கூடாது என்பதோடு, துக்கத்தை அனுஷ்டிக்கப்போகும் மக்கள் மனதில் சலிப்பை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவும் அவ்வாறு எழுதுவதைத் தவிர்த்தேன். பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்க மதகுருவோடும் நான் உரையாடினேன். அவர் அதனை ஜனநாயக மயப்படுத்த வேண்டிய தேவையை ஏற்றுக்கொண்டார். ஆனால் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார். பரந்துபட்ட அளவில் அதை விஸ்தரிக்கும் பொழுது அதற்குள் யார் யார் வருவார்கள் என்ற பயம் உண்டு என்று சொன்னார். எனினும், இப்போதுள்ள பொதுக் கட்டமைப்பு வெளிப்படைத் தன்மையற்றது என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் பொதுக் கட்டமைப்பை மட்டுமல்ல நினைவு கூர்தலுக்காக ஏற்கனவே உள்ள பொதுக்கட்டமைப்புகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அக்கட்டமைப்புகளின் பின்னணி குறித்தும், அதை யார் பின்னிருந்து இயக்குகிறார்கள் என்பதை குறித்தும் அக்கட்சிக்கு சந்தேகம் இருப்பதாக தெரிகிறது.

தமிழரசியலில் சூழ்ச்சிக் கோட்பாடுகளை அதிகம் புனையும் ஒரு கட்சி அது. ஆனாலும், தமிழ் அரசியலில் இப்பொழுது யார் யாரோடு நிற்கிறார்கள்? யாருக்கு யார் காசு கொடுக்கிறார்கள்? யாரை யார் ரிமோட் பண்ணுகிறார்கள்? என்று சந்தேகப்படும் அளவுக்கு குழப்பமான ஒரு நிலைமை அதிகரித்து வருகிறது என்பது உண்மைதான்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி ரொட்ரிகோ மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை, மாவட்ட மக்கள் அமைப்பு என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அந்நிகழ்வுக்கு ஆட்களைத் திரட்டியது படைப் புலனாய்வுத் துறைக்கு நெருக்கமானவர்கள் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. அதுபோல வவுனியா நகரசபை மைதானத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வை வன்னித்தமிழர் ஒன்றியம் என்ற புதிய அமைப்பு ஒழுங்குபடுத்தியுள்ளது. அதற்கு வவுனியா விகாராதிபதி நிதியுதவி செய்திருக்கிறார். அதாவது தமிழ் அரசியல் பரப்பில் ஒரு மையம் இல்லாத காரணத்தால் ஒரு பலமான திரட்சி இல்லாத காரணத்தால், யார் எதைச் செய்கிறார்கள்? யாரை யார் இயக்குகிறார்கள்? என்பவற்றைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு குழப்பமான ஒரு

நிலைமை உருவாகி வருகிறதா?

தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உடைக்க வேண்டும் குழப்ப வேண்டும் என்று திட்டமிட்டு பல்வேறு வகைப்பட்ட தரப்புக்களும் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவதாகத் தெரிகிறது.

ஓர் ஆபிரிக்க பழமொழி உண்டு "ஆமை மதில் மேல் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு யாரோ உதவியிருக்கிறார்கள் என்று பொருள்". தமிழரசியலில் இப்பொழுது பல ஆமைகள் மதில் மேல் இருக்கின்றன. ஏன் கூரை மேலும் இருக்கின்றன. அந்த ஆமைகளை யார் அங்கே தூக்கி வைத்தது என்ற கேள்வி உண்டு. சில ஆமைகள் ஒரே சமயத்தில் இரு வேறு தரப்புக்களிடம் சம்பளம் வாங்கி வருவதாக பரவலாகச் சந்தேகங்கள் உண்டு.

இது சந்தேகம்தான். இந்த இடத்தில் இதைப்பற்றிக் கதைக்க வேண்டும். ஏனென்றால்,நவீன தமிழ் அரசியலில் ஏற்பட்ட ஒரு கூட்டுப் பேரழிவை நினைவு கூர்ந்து முடித்திருக்கும் இக்காலகட்டத்தில் பேசவில்லை என்றால் பிறகு எப்பொழுதும் அதைப்பற்றிப் பேச முடியாது.

தமிழ்மக்களின் தேசத்திரட்சி சிதறிப்போனதன் பின்னணியில்தான் இவ்வாறான சந்தேகங்கள் எழுகின்றன. இந்த சந்தேகங்களுக்கு இரண்டு தரப்புகள் பொறுப்பு.

ஒன்று, வெளியில் இருந்து தமிழ் அரசியலை ரிமோட் கொன்ட்ரோல் செய்ய முடியும் என்று நம்பும் புலம்பெயர்ந்த தரப்புகள். இரண்டாவது, தமிழ் மக்களின் தேசத் திரட்சியை சிதறடிப்பதன்மூலம் அரசியல் ரீதியாக தமிழ்மக்களை முழுமையாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள். மூன்றாவது தமிழ்க் கட்சிகள்.




இதில் புலம்பெயர்ந்த தமிழ்த்தரப்புகள் நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் உதவிகளைச் செய்கின்றார்கள். ஆனால் அவர்களை அறியாமலேயே அந்த உதவிகள் தமிழரசியற் பரப்பில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. ஓர் இனப்படுகொலைக்குப் பின் தப்பியிருக்கும் மக்கள் என்ற அடிப்படையில் தாயகத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான செயற்பாட்டாளர்களே உண்டு. அவர்களையும் ரிமோட் செய்ய முற்பட்டால், அது அவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வேட்டைப் பற்களுக்குள் சிக்கவைத்துவிடும் என்பது முதலாவது பயம். இரண்டாவது பயம், வெளியில் இருந்து



கிடைக்கும் உதவிகளுக்காக செயற்படுகின்றவர்கள் ஒரு கட்டத்தில் தாமாகச் செயற்பட முடியாத பொம்மலாட்டப் பொம்மைகளாக மாறிவிடுவார்கள். பொம்மைகளால் தேசத்தைத் திரட்ட முடியாது. ஆமைகளாலும் தேசத்தைத் திரட்ட முடியாது.

பொம்மைகளும் ஆமைகளும் தமிழரசியல் பரப்பில் அதிகரித்துவரக் காரணம் அரங்கில் உள்ள தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான். எல்லாருக்கும் இதில் கூட்டுப் பொறுப்பு உண்டு. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ஒரு தேசத்திரட்சியைக் கட்டியெழுப்பத் தவறிய அனைவருக்கும் இதில் பொறுப்பு உண்டு. தமிழ்மக்கள் மத்தியில் ஒரு தேசத்திரட்சியை கட்டியெழுப்பும் மக்கள் இயக்கமும் கிடையாது குடிமக்கள் சமூகமும் கிடையாது, கட்சிக் கூட்டுக்களும் கிடையாது; அதனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் அவிழ்த்து விடப்பட்ட பாக்கு மூட்டை போல சிதறிக்கொண்டே போகிறார்கள்.

தமிழ் இளையோர் எப்படி நாட்டை விட்டு வெளியேறுவது என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இது, முள்ளிவாய்க்காலில் கடைசிக்கட்டத்தில் எந்த வழியால் தப்பிச் செல்வது என்று சிந்தித்ததைப்போல இருக்கிறது என்று ஒரு செயற்பாட்டாளர் துக்கப்பட்டார்.

சிங்களபௌத்த மயமாக்கல்; நிலப்பறிப்பு; பயங்கரவாத தடைச் சட்டத்தை புதுப்பிப்பது; தமிழ்மக்கள் மத்தியில் குழந்தைப்பேறு குறைந்துவருவது; இளையோர் நாட்டை விட்டு வெளியேறத் துடிப்பது... போன்றவற்றின் பின்னணியில், தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட யாருமே இல்லை. ஆம், யாருமே இல்லை.

அந்த வெற்றிடத்தில்தான் கடந்த 14ஆண்டுகளாக, ஒரு பேரிழப்பை அனுஷ்டிப்பதற்காக பரந்துபட்ட அளவிலான, வெளிப்படைத்தன்மைமிக்க ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கமுடியாத மக்களாகத் தமிழ்மக்கள் காணப்படுகிறார்கள்.

மன்னாரில் இந்துக்கள் கட்டிய வளைவு உடைக்கப்பட்ட பின் அது தொடர்பில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான உரையாடலை தொடக்கி வைப்பதற்கு ஒரு சிவில் சமூகம்கூட தமிழ்மக்கள் மத்தியில் கிடையாது. வடக்கு கிழக்கு இணைப்பு அதிகம் சோதனைக்குள்ளாகி வரும் இக்காலகட்டத்தில் அதுதொடர்பில் வெளிப்படையான உரையாடலைத் தொடங்கி, கிழக்கில் இருக்கக்கூடிய சந்தேகங்களை நீக்குவதற்கு யார் முயற்சிக்கிறார்கள்? சாதி ரீதியாக பிற்படுத்தப்படும் மக்களின் அச்சங்களைப் போக்குவதற்குரிய தமிழ்த்தேசிய வேலைத் திட்டம் யாரிடம் உண்டு?

தமிழ்மக்களை வெளித்தரப்புகள் பிரிக்கப் பார்க்கின்றன, வெளித்தரப்புகள் ஆமைகளையும் பொம்மைகளையும் சம்பளம் கொடுத்து இயக்குகின்றன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பதிலாக தேசத்திரட்சியை உறுதிப்படுத்த வேண்டும்பலப்படுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறிய அனைத்துக் கட்சிகளும் ஏதோ ஒரு விகிதளவுக்கு எதிரிக்கு சேவகம் செய்திருக்கின்றன.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்காய்கட்சியாய் பொதுக் கட்டமைப்பாய் சாதியாய் சமயமாய் சிதறிக்கொண்டே போகிறார்கள். இது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகளுக்கே அதிகம் வாய்ப்பானது. தமிழ் மக்களைக் கூறு போடுவதற்கு ஆமைகளும் பொம்மைகளும் தேவையில்லை. தமிழ்க் கட்சிகளே போதும் என்பதுதான் கடந்த 14 ஆண்டுகால அனுபவம்.

நன்றி: நிலாந்தன்



## CORPORATION AND PERSONAL TAX & MORTGAGE

நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!

சகல விதமான நிதி கணக்கியல் வருமானவரி சம்பந்தமான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள அழையுங்கள்

- Accounting
- Financial & Tax Services
- Personal & Corporation Taxes
- Bookkeeping
- Payroll
- New Business Registration
- Incorporation Open & Business Start Up

மோட்கேஜ் ஒழுங்குகள் செய்து தரப்படும்

1st and 2nd Mortgage
Private Mortgage
Refinancing



**Thilak Nallathamby**

Email: nthilak@ymail.com

**647 896 7252**

அகரம்
Akaram

வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல் (Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
**437.345.4203**



## DEBT SOLUTIONS GTA INC.

### CREDIT CARD & DEBT SOLUTIONS

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**

கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS

உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில் (PERCENTAGE) தீர்மானிக்கப்படமாட்டாது.

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை.
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS

உங்கள் வருமானம் (INCOME), செலவு (EXPENSES), என்பவற்றை வைத்து உங்கள் கடன்களில் (DEBTS) சிறிய மாதாந்தத்தொகையை மட்டும் செலுத்தும் முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் (TOTAL DEBTS) இருந்து விடுதலை பெறலாம்.

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்.
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)



**Suren Sornalingam**

Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

DSC DEBT SOLUTION CANADA

Head Office Location:
10 Milner Business Court, Suite 300
Scarborough ON M1B 3C8
(One Block North of 401 on Markham)

2 Robert Speck Parkway, Suite 750
Mississauga ON, L4Z 1H8

2 Country Court Blvd, Suite 400
Brampton ON, L6W 3W8

**Tel: 647-274-2832**

www.debtsolutioncanada.ca

# 1958 ஆம் ஆண்டு தமிழினப்படுகொலை என்பது திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல!

22.05.2023

11958ஆம் ஆண்டு தமிழ இனப் படுகொலை என்பது திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்குப் பலமான பின்புலம் ஒன்று இருக்கிறது. 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட முப்பத்து மூன்றாம் இலக்கச் சிங்களம் மட்டும் சட்டம் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாகத் தமிழர் தரப்பினர் 1956ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் சிங்களம் மட்டும் சடடத்திற்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்கள். இந்தப் போராட்டம் சிங்களக் காடையர்களால் வன்முறை பிரயோகிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 1957ஆம் ஆண்டு தமிழர் தரப்பினர் திருகோணமலைக்குப் பாதயாத்திரை சென்று அங்கு ஒரு மாநாடு நடாத்தினார்கள். பண்டாரநாயக்கா அரசிற்கு ஒரு வருட காலக்கெடு கொடுத்து அதற்குள் தமிழ் மொழிக்குச் சமவுரிமை கொடுக்கவேண்டும் என்றும் தமிழ்ப் பிரதேச அபிவிருத்திகளுக்காக பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் திருமலை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வேண்டுகோளுக்கு அமைய பண்டாரநாயக்கா அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் தான் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, தந்தை செல்வநாயக்கத்தோடு ஒரு இணக்கப்பாடடிற்கு வந்தார். இதன் விளைவாக 26.07.1957 அன்று தந்தை செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியோடு எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஒரு உடன்படிக்கை செய்தார். இதுவே புகழ்பெற்ற 1957 பண்டா - செல்வா உடன்படிக்கையாகும்.

இந்த உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஜே.ஆர் ஜெயவர்த்தனா கண்டிக்குப் பாதயாத்திரை போனார். அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியானது "முதல் காலடி" (First Step) என்ற வெளியீட்டையும் வெளியிட்டு இனவாதப் பரப்புரையில் ஈடுபட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் பரப்புரை நாளேடான "சியரட்ட" (Siyaratta) மிக மோசமான இனவாதப் பரப்புரையைத் தமிழருக்கு எதிராக மேற்கொண்டது. கண்டிக்குப் பாதயாத்திரை போகப் புறப்பட்ட ஜே.ஆர் இன் பாதயாத்திரை இம்புள்கொட என்ற இடத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் வந்த இன்னொரு குழுவால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதற்கிடையில் பண்டாரநாயக்காவைப் பதவிக்குக் கொண்டுவந்த பிக்கு பெரமுனவைச் சேர்ந்த பௌத்த பிக்குமாரும், ஜாதிக விமுக்தி பெரமுனவைச் சேர்ந்த வெலிமடை எம்.பி கே.எம்.பி இராஜரட்னாவும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அதிபர் மெத்தானந்த போன்றவர்களும் சிங்கள தேசிய முன்னணியைச் சேர்ந்த ஆர்.ஜி. சேனநாயக்கா போன்றவர்களும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு பண்டார நாயக்காவுக்கு அழுத்தம் கொடுத்ததுடன், பிரதமர் பண்டார நாயக்காவின் கொழும்பு ஏழு, றொஸ்மீட் பிளேசிலுள்ள அவரது இல்லத்திற்கு முன்னால் பண்டா - செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறியுமாறு முழக்கமெழுப்பினார்கள். அவர்களது முழக்கத்திற்கும், வேண்டுகைகளுக்கும் அடிபணிந்த பண்டாரநாயக்கா, தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட பண்டா - செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார்.

இதனைத் தொடர்ந்து 1958ஆம் ஆண்டு மே மாதம் இருபத்து நான்கு, இருபத்தைந்து, இருபத்தாறு ஆகிய திகதிகளில் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா மாநாட்டிற்கு வருகை தந்து கொண்டிருந்த மட்டு – அம்பாறையைச் சேர்ந்த தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் பயணம் செய்த தொடருந்து பொலநறுவை மாவட்டத்தில் கிங்குராகொட என்னும் தொடருந்து நிலையத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டுச் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டார்கள்.

இதே காலப்பகுதியில் நுவரெலியா மாநகரசபையின் மேஜர் செனிவிரட்ண மட்டக்களப்புக்குச் சென்றுகொண்டிருந்தபோது மட்டக்களப்பில் வைத்து தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொல்லப்பட்டார். பிரதமராக இருந்த பண்டாரநாயக்கா இதைப் பெரிதுபடுத்தி இலங்கை வானொலியில் பரப்புரை செய்தார். இதைத் தொடர்ந்து தீவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான இனக்கொலை வெடித்தது. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பாணந்துறையில் சிறீ கதிர் வேலாயுத சுவாமி கோயிற் குருக்கள் ஆலயத்திற்குள் வைத்து உயிரோடு கொழுத்தப்பட்டார். பொலநறுவை அரசினர் வைத்தியசாலையில் சிங்கள மக்களுக்குச் சிகிச்சை அளித்த தமிழ்த் தாதியான பாலிப்போடி என்பவரின் மனைவி பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார். இவ்வளவும் நடந்தும் பண்டாரநாயக்காவினுடைய அரசு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ அல்லது ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தவோ இல்லை. தமிழர்கள் தாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டபோதும் பண் டாரநாயக்கா தமிழர்கள் பட்டு அனுபவிக்கட்டும் (Let them taste their own flesh) என்று கூறினார்.


இந்த இனக்கொலையின் போது தமிழ் மக்களின் பல வீடுகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பல தமிழ்க் குழந்தைகள் கொதிக் கும் தாரில் போடப்பட்டார்கள். மேலும், இக்கட்டத்தில் இலங்கையில் தங்கியிருந்த பிரபல ஆங்கிலப் நாளேட்டாளரான டாசி வித்தாச்சி அவர்கள், பண்டாரநாயக்கா அரசினால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின் தனது தாய் நாட்டிற்குச் சென்று "அவசரகாலச் சட்டம் ஐம்பத்தெட்டு" என்ற நூலை எழுதி வெளியிட்டார். இன்று இந்நூல் உலகப் புகழ் பெற்ற நூலாகக் கருதப்படுகின்றது. இக்காலத்தில் எல்லாமாக முன்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அக்காலகட்டத்தில் வெளியான நாளேடுகள் வாயிலாக அறியமுடிகின்றது. பல நூற்றுக்கணக்கான மக்கள் வெட்டி அங்கவீனப்படுத்தப் பட்டார்கள். தமிழ் மக்களது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன, அவர்களது உடைமைகள் தீவைத்து எரிக்கப்பட்டன. இக்காலகட்டம் பற்றி எத்தகைய விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு எத்தகைய நிவாரணமோ நட்டஈடோ வழங்கப்படவில்லை.

## தமிழினப்படுகொலை நாட்குறிப்பு

**மே 22-27, 1958**

சிறிலங்கா அரசபயங்கரவாதம் நாடு முழுவதும் கட்டவிழ்த்துவிட்ட தமிழர்களுக்கெதிரான வன்முறைகளால் 1500 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டு, அழிக்கப்பட்டன.





# நீ புலிதான்!

## உண்மைக் கதை

இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.

சிங்கள வெறிப்படை ,

"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...

எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.
அவற்றில்... இருந்து.



"என்ன பிடிக்கின்றாய்?" கேள்வி தெறித்தது.
"இளநிலை வர்த்தகப் பட்டப் படிப்பு"
உனது பாடத்திட்டத்தைச் சொல்?"

சொல்லி நான் முடிக்க, அவன் ஒரு சிறு இராஜநடை போட்டான். திரும்பி மீண்டும் "நான், நீ படிப்பததனை ஏற்றுக்கொள்கிறேன். உனது பட்டப்படிப்புக்கு முன்னால் புலியின் ஆயுதப் பயிற்சி பெற்றுக்கொண்டதனை ஏன் மறைக்கின்றாய்?"

## நீ புலிதான்

ஊர் ஊராக இருக்காதோ என்ற பயம், சைக்கிளை வேகம் வேகம் எனச் செலுத்த எதிர்ப்பட்ட புன்னகை மனிதர்களின் விசாரிப்புகளால் வெல்லப்பட்டது. பஸ்சிலிருந்து இறங்கி இரவல் சைக்கிளில் வீடு போனதும் எதிர் கொண்ட அம்மா, ஆச்சர்யத்தின் விளிம்பில் ஆழ்ந்தார்.

"எப்படியும் நீ வருவா... எத்தனை பேர் எத்தனை கதைகளைச் சொன்னாலும்" கண்கள் கலங்க அம்மா.

சற்றே நிலைகலங்க, எனக்கு "சரி... சரி... தேத்தண்ணி எங்கே? என்ற அதிகாரக் கட்டளையாலேயே உணர்வுகளை வெல்ல முடிந்தது. பட்டுக்குஞ்சம் போல மினுமினுப்பும், பளபளப்பும் கொண்டிருந்த சின்னத்தம்பிக்கு, வானத்தில் செல்லுகின்ற ஏதோவோர் விமானம் அண்ணனைச் சுமந்து வரும் என்ற நம்பிக்கை உறுதியான சந்தோஷம். தூர நின்றான் - பின் நெருங்கி, இவ்வளவு நாளும் வீட்டாரின் உரையாடல்களில் ஒரு குழப்பமான உருவாய் இருந்த அண்ணனை நோக்கிப், பின் கட்டிக்கொண்டான்.

எனக்கு அழலாம் போலிருந்தது. இத்தனை நெகிழ்வை இவ்வரிய சொத்தை - எங்களிலொருவன் என்ற ரீதியில் மீண்டும் ஆதரவாக உயரும் கரங்களை - அள்ளியணைப்பதையே பாராம் பரியமாய்க் கொண்டிருக்கும் இவர்களை - எப்படி நான்கு வருடங்கள் சந்திக்காதிருக்க என்னால் முடிந்தது?

"இது என் பகைவனுக்குக்கூட நேரக்கூடாது."

அம்மா இந்த நான்கு வருடத்தினுள்ளே தனக்கு நேர்ந்தவற்றை, மேற்கண்ட முத்தாய்ப்புடன் ஆரம்பித்தார். "நீ காட்டின வழியிலை தம்பியவை இரண்டும் புலியெண்டு போயிட்டுது. அவன் வள்ளல் அப்பள வியாபாரி. உனக்கடுத்த சனியன் சென்டரியாம். நான் எவ்வளவு அழுதிருப்பன்... எவ்வளவு கெஞ்சியிருப்பன்... அண்டைக்கு இந்தியன் ஆமி ஷெல்லடி தொடங்கிவிட்டான். அவன் என்ன சிலோன் ஆமிமாதிரியே... மழை பொழிஞ்ச மாதிரி... என்ரை ஐயோ! குமரன் கடைசித் தம்பியையும் கூட்டிக்கொண்டு மல்லாகத்துக்கு கொண்டு போட்டான். கொப்பரும் அங்கைதானே... எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. சிலோன் ஆமி வீடுகளைத் தரைமடடமாக்கி அழிவு பண்ணினாலும்... அப்பா அவங்கள் பரவாயில்லை. ஷெல் பட்டு என்னோடை படிச்ச செல்லம்மாவின்ர கடைசிப் பிள்ளை ஏழு வயது தான்ரா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக ஒரு வழியுமில்லை... என்ன மந்திரமோ மாயமோ மூண்டு இடத்திலை கொஞ்சம் கொஞ்சமா வெடிச்சது. இண்டைக்கும் தாய் செல்லத்துக்கு விசர் மாதிரித்தான். பெத்த பிள்ளை இரத்தம் பெருக்கிச் சாகிறதை... ஐயோ... நல்ல காலம் என்னை அதுக்குள்ளை தாசன் வந்து கூட்டிக்கொண்டு போட்டான்."

எனக்குப் பெரிய நிம்மதி உண்டானது. ஐந்து ஆண் பிள்ளைகளிருந்தும் துணைக்கு யாருமில்லாது அம்மா தவித்த நேரத்தில் இந்த அவலமும் நேர்ந்திருப்பின்... அம்மாவுக்காக நீண்ட வராந்தா வெளிகளில், தலை நிலம் நோக்க நடந்து, Ward எண்களை வெறித்து கட்டில்களை ஆராய்ந்து நெருங்கினாலும் அம்மா... எனது அம்மாவின் புன்னகைக்கு என்ன நிச்சயம்... கண்ணிலே மழலையொன்று குருதி சொட்ட கொஞ்சம் கொஞ்சமாய்ச் செயலிழப்பது நிறைந்து பயமுறுத்தியது.

"தாசண்ணையை இப்ப எங்கை வைச்சிருக்கிறாங்கள்?" எனக்கு அண்ணரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

நீங்கள் என் அண்ணரைப் பார்த்திருப்பீர்கள். என்னைப் போலவோதான் உருவம். அசல் தோட்டக்காரன் என்பது முகத்தில், உடம்பில், செயல்களில் பொறிக்கப்பட்டிருக்கும். என்னைவிட இரண்டு வயது பெரியவன். அப்பாவின் சொந்தத் தமையனின் கடைசி மகன். பள்ளிக்கூடம் சென்று வருவதைவிட சந்தைக்குப் போய் வருவது இலாபகரமானது என்பது அவனது தத்துவம். திருவிழாக் காலங்களில் அவனது சேமிப்பு வெளிவரும்; நான் ஒரு காசாளர் போலப் பின்வருவேன். ஒன்றுக்கு நாலு எனும் ஒருவகைச் சூதாட்டம் ஆடி அண்ணன். பெரும்பாலும் கைக்காசில் கால் பங்கை இழப்பார். வெற்றியோ தோல்வியோ கையிலிருக்கும் மிகுதிப் பணத்தை அண்ணர் செலவளிக்கையில் ஊரிலுள்ள ஊதாரிகளெல்லாம் தோல்வியை ஏற்றுக்கொள்வர்.

அப்படியான என் அண்ணரைச் சந்திக்க நான் "கியூவரிசை"யில் காத்திருந்தேன். கூட எனது பாதுகாப்பிற்காக நடுத்தர வயதைத் தாண்டிவிட்ட என் தந்தையார். எழுத்து மூலமான விண்ணப்பம் தாண்டி, எனது முகம்மீது கொண்ட காதலால் அமைதிப்படை அதிகாரி நேரடி விசாரணையைத் தொடங்கினான். அப்பாவின் அரச சேவகமும் எனது சென்னைக் கல்லூரியின் அடையாள அட்டையும் காப்பாற்றியது. அண்ணரைப் பார்ப்பதற்குள் ஆயிரம் தடைகள். ஒரு கொட்டகையில் இறுதியில் உட்காரவைக்கப்பட்டு; "ஐந்து நிமிடங்கள் தான்" என்பதை கொச்சைத்தமிழில் "நானும் தமிழறிவேன்" என்று வெற்றிப் புன்னகை இணைய ஒரு "அமைதி காப்பவர்" அறிவுறுத்தினார்.

–"தம்பியை எப்படியாவது வெளியில கொண்டாந்திடு."

தாசனின் அண்ணர் பிரான்சிலிருந்து ரெலிபோனில் அடிக்கடி உச்சரித்த வாசகங்கள் அண்ணரைப் பார்க்கப்பார்க்க அந்நினைவே முட்டி மோதியது. சம்பாஷணையில் நான் சலித்துப் போனேன். தனது அடையாள அட்டையைக்கூட அண்ணர் தொலைத்துவிட்டார். அதுபற்றிப் பெரிய கவலையில்லாது "வெளிநாட்டுக்குப் போக என்னாலை ஏலாது. அடுத்தமுறை என்ரை அம்மாவோட வா; முடிஞ்சா வடை சுட்டு எடுத்துவரச் சொல்லு. போன முறையை விடக் கொஞ்சம் அதிகமாய். அப்பதான்

எல்லாருக்கும் கொடுத்துச் சாப்பிடலாம்."

சற்று இடைவெறிக்குப் பின்... "நீ முயற்சித்துப் பார்... வெளியிலை வந்தும்... இந்த அடி வேண்டின பிறகு... வெளிநாட்டுக்கு..."

திரும்பிக் கொட்டகை நோக்கி நடந்தான். கைவிடப்பட்ட முன்னாள் அரச மருத்துவமனைக் கட்டடமே இவர்களின் சிறை முகாமாக மாறியிருந்தது. சீமெந்துத் தொழிற்சாலையின் புகையாலும், கடற்கரையோரமாக செயற்கைத் துறைமுகம் நிர்மாணிக்கப்படுவதாலும் புகை சூழ்ந்த, செம்மண்முகங்கிளறும் வனமாகி, "அசுத்தப்பகுதி" என்ற கிரீடத்தைச் சுற்றுவட்டாரம் சூடியிருந்தது.

ஒரு கிழமை ஆனது. உறவினர், நண்பர்களென்று உறவுகளை மீண்டும் புனரமைக்கும் காலம். அண்ணருடைய விடுதலையும், மீண்டும் இந்தியா திரும்புகையில் அவரையும் உடனழைத்துச் செல்ல வேண்டுமென்பதுவும் ஓயாத அலைச்சலுக்குத் தூண்டுகோலாகின. ஒரு வழியாக ஆங்கிலத்தில் தட்டெழுத்துச் செய்யப்பட்ட அண்ணரின் நிலவரம், அவரில்லாது குடும்ப ஜீவனப்பாட்டை உறுதி செய்யும் விவசாயம் கைவிடப்பட்டிருப்பது, தாயார் நோய் வாய்ப்பட்டிருப்பது, அவரை விடுதலை செய்யும் பட்சத்தில் எமது குடும்பமே எத்தனை "கிலோகிராம் நன்றிக்கடன்" உடையவராய் மாறுகின்றது போன்ற விபரங்களை உள்ளடக்கி, கீழே பிரசைகள் குழுவினர் மற்றும் விதானையார் ஒப்பமிட்டிருந்தார்கள். கூனிக்குறுகி விடுதலை வேண்டும் இக்கடிதத்தில் ஒப்பமிட்ட இன்னொருவரான என் பெரிய தந்தையார் கூடவர இராணுவ மேலதிகாரியுடனான சந்திப்பு நிகழ்ந்தது. முகத்தில் மாபெரிய கடமைக் கனல் சூழ்ந்திருக்க தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த அவர் சற்று நேரத்தின் பின்னால் எம்மை உட்காரவைத்துப் பேச ஆரம்பித்தார். அவர் ஒரு வட இந்தியராக இருக்கலாமென்பதைத் தோற்றம் உறுதி செய்தது. கூடவே இருந்த மலபார் ரெஜிமெண்ட் அதிகாரி, அவரின் பேச்சின் சாராம்சத்தைத் தமிழிலும் நீட்டி முழுங்கினார். இவ்வாறான வெத்துவெட்டுக்கள் நிறையப் பெற்ற அவரின் பேச்சின் சாராம்சமென்னவோ கொஞ்சம் தான். "புலிகளின் தொல்லை மிகவும் மோசமாயுள்ளது. ஆனாலும் இவரை விடுதலை செய்துவிடலாம் முதற்படியாக ஏதாவதொரு ஆயுதத்தை ஒப்படைக்க வேண்டும்; விடுதலைக்கு விலையாக தானாகவே தேசப் பிரஷ்டத்தை கைதி மேற்கொள்ளவேண்டும்.

வெளியில் வந்துபோது பெரியப்பா நிறையவே சோர்ந்து போயிருந்தார். கொஞ்சம் சதைப்பற்றான தொந்தி விழுந்த உடலமைப்பு. தலையில் வழுக்கை விழுந்திருப்பினும் வெண்முடிகள் எண்ணக்கூடக் கிடைக்காது. இவரது இளமையின் ரகசியம் "தேசிய பானம்" என வீட்டார் சொல்லிக்கொள்வர். ஓய்வு பெற்ற விமானப்படைச் சிற்றூழியர் அவர். விமானப்படை தந்த மிடுக்கில் அந்நாளில் செய்த சண்டித்தனத்தின் சான்றாக, அரைக்காற் சட்டைப் போலீசிடமிருந்து பிடுங்கியெடுத்த சிறு குண்டாந்தடி அவரது வாசஸ் தலத்தின் அலங்காரச் சின்னங்களில் முதன்மையானது இவ்வகைப்பட்ட எனது பெரிய தந்தையார் இன்றை நாளில் புயலிலடிபட்ட பஞ்சாகியிருந்தார். இவரது ஈடாட்டத்தின் மையமானது, வயோதிபத்தைவிடவும் இயக்கம் சார் சண்டியர் முன் இவர்களது வீரம் தோற்றோடியதே ஆகும். இவரது உலகறிவு இவரை ஒதுங்குவதே மரியாதையெனப் போதித்தது போலும்! முன்பெல்லாம் இலங்கையின் நாடாளுமன்ற நாற்காலிகளிலும் புரட்சிப் பூக்கள் பூத்துக்குலுங்குமெனப் பறையறிவித்த இடதோ வலதோ, ஏதோவொரு கொம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளராயிருந்தவர். முதலில் ஈழப்போராட்டம் என வருகையில், பழைய பராம்பரியம் காக்க செஞ்சூரியனுக்காய் வக்காலத்து வாங்கி அலுத்ததாலோ அல்லது புத்திர பாசம் உச்சம் பெற்றதாலோ, செயல்வீரர்களை வாரியணைத்துக் கொண்டார்.

வீட்டு வாசலை நாம் நெருங்கியபோது, எமதூர்ப் பிரமுகர்களிலொருவரான மகாதேவன் மாஸ்ரர் "என்னாச்சு?" என்றபடி வரவேற்க, சால்வைத் துண்டால் முகத்தைத் துடைத்தபடி, பெரியப்பார் சலிப்புடன் செருமிக் கொண்டார்.

"அப்பவே இந்த விடுபேயன்களுக்குச் சொன்னனான். இந்தியாவை இவை ஏமாத்தலாமெண்டுநினைப்பது... தந்திரோபாயமும் மண்ணாங்கட்டியும்... அவன் ஆயுதம் கொடுத்தால் வாங்கி உங்கடை மதி எங்கை? புலிகளாவது இடைக்கிடை இந்தியா பற்றி ஏதோ சொன்னாங்கள்... ஹூம்..."

நான் தலைகுனிந்து நிலம் நோக்கத் தொடங்கினேன் மாஸ்டர் ஒரு அந்தநாளையை இந்தியப் பட்டதாரியாகையால், இந்தியாவின் பெருமை அவரின் பெருமையென ஆகி வெகு காலம். மேலும் இன்றைய சூழலில் அவரது வாதத்தின் நியாயம்...

தலை நிமிர்ந்ததோர் வாழ்வு
சமைத்திட
நமிர்ந்த தலை மட்டும்
கொண்டுல வினோர்
குனிந்திடல்... குனிந்திடல்
மேலும்
குன்றுதல்... கடனே...

மகாதேவரானவர் சுருட்டிற்கு உயிர் கொடுக்க பெரியப்பா ஆரம்பித்தார். "என்ரை குரங்குக்கு எத்தனைநாள் சொல்லியிருப்பன் ஓடடா இனிமேலாவது... எங்காவது தொலையெண்ணக் கேட டானே... அம்மா! அண்டைக்கவங்கள் அடிச்ச அடி..."

இவ்வாறாக அண்ணர் கைதானது, அமைதிப்படையினரின் புலிவேட்டை இவை குறித்து ஒரு விவரணச் சித்திரத்தை உருவாகினார் பெரியப்பா. பெரும்பாலும் அவரது தொனி முடியுமோ... முடியாதோ... சண்டையில் ஒன்றே தீர்வென்பதை உட்கிடையாக்கியது. ஆனால் மகாதேவருக்கோ அவரது அறிவு, மலையைச் சாய்க்க முயல்வதைப் போன்றதொரு செயலே இந்தியாவை எதிர்ப்பது எனவக்காலத்து வாங்க வைத்தது. அவரும் புலிகளின் தியாகத்தையும், மற்றோரின் துரோகத்தையும் எள்ளி நகையாடிய பின் அரசியல் தீர்வுக்காய் அங்கலாய்த்தார். இன்னும் கொஞ்சம் கூடுதல் உரிமைகள் வேண்டும்; அதிகாரம் யாவும் அநியாயத்தை எதிர்த்து உயிர் தந்தவர்க்கே எனப் பிரலாபித்தார். பெரியப்பா, திலீபன் அணு அணுவாய் உயிர்விட ஆக்கிரமிப்பாளர் அநுட்டித்த அலட்சியத்தை நினைவுகூர்ந்தார். எல்லோருமாக இரட்சிப்பாளரௌ வரவேற்ற பயல்கள். ஆரம்பத்தில் எல்லாம் இராணுவம்தான் என்ற உருவெடுத்து – இல்லையில்லை தாம் கொஞ்சம் மாபெரிய சாத்தான்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் மேற்கொண்ட நரவேட்டையின் வடுக்களை நினைத்துக் கோபமும் பதற்றமும் கொண்டு, "இனியும் பேச்சு வார்த்தை...! விடும் மாஸ்ரர் உந்தக்கதையை" என முற்றுப் புள்ளியிட்டார்.

இவ்வாறான இருவேறு கருத்துக்களின் ஆதிக்கம் எங்குமிருந்தது. என் பழைய நண்பனும் பல்கலைக்கழக மாணவனுமான ரவியும் இதனை அடிக்கடி சொல்லிக் கொண்டான். அவனோடு பேசுகையில், "எல்லாம் நிகழ்ந்து முடிந்தாலும் என்னதான் மாற்றம் நிகழ்ந்து விட்டது?" என்று சலித்துக்கொண்டதற்கு நிதானமாக அவன் சொன்னான், "எதிரியைப்பற்றி இப்போது சனங்கள் அறிய ஆவலோடுள்ளனர். வாசிப்பு என்பது வெறும் பொழுது போக்காக இப்போதில்லை" என்றான்.

உண்மைதான்! மிகக்குறுகிய காலங்களிலேயே அந்நியர் அதற்கும் மேலாக ஆக்கிரமிப்பாளன் எனத் தன்னைத் தானே எதிரி தோலுரித்துக் கொண்டான். நண்பனும் நானும் பனைமரங்கள் அணிவகுத்த அச்சாலை விளிம்பிலுள்ள கோவிலின் தேர் முட்டி மறைவிலிருந்து கீழிறங்கினோம். இன்னமும் ஏழு நாட்களில் பயணம் என்பதை நான் நினைவுகூர, அவன், தன்து பல்கலைக்கழகம் திறக்கும் வரைக்கும் படிப்பதற்காக ஏதாவது புத்தகங்கள் வாங்கியனுப்பிவிடு... அது என்று திறக்குமோ? யார் யாரெல்லாம் அகை மூடுவரோ? எனப் பண்ணிசைத்து தான் செல்லும் வழி குறித்து எச்சரித்து விடை தந்தான்.

வயல்வெளியில் காற்று ஊஞ்சலிட, புல்லுக் கடகமும் கலப்பைகளும் தலையிலும் தோளிலுமாக மாடுகளை வழி நடத்தி வருபவர்கள் பாடல் இசைக்க, இன்னுமொரு மாலை எனதூரில்



முடிவடையும் நேரம். வயல்வெளியைத் தாண்டுகையில் சிறுபெண்ணொருத்தி, " ஆமிக்காரன் செக்கிங்" என எச்சரித்தாள். "எங்கே?" என, நகர்ந்தபடி பதில் கொன்னாள். முன்பெல்லாம் இலங்கை இராணுவத்தை ஏமாற்ற நாம் நடமாடிய ஒழுங்கைகளினூடாக வீடு திரும்ப எத்தனித்தேன் அம்மா கண்ணுள் வந்தார்.

"தம்பி முன்னைமாதிரி ஒழுங்கைகளை நம்பாதை, கூர்க்காக் காரன் நாயோட நாயாய்ப் பத்தை வழிய படுத்துக் கிடக்கிறான்."

வருவது வரட்டுமென நேராகவே வந்து "செக் போஸ்ட்" தாண்டி பெரிய ரோட்டில் ஏறியபோது கைதட்டல், அதட்டும் கூச்சல் கேட்டது. திரும்பி அழைத்தவரிடமே போனேன். அமைதிகாப்போர் வரிசைக் கிரமத்தை வலியுறுத்த, முகம் மறைக்கப்பட்ட "தலையாட்டிகள்" ஏற இறங்க எல்லோரையும் அளந்து பார்த்து, அதிருப்தியை வெளிப்படுத்தினர். ஒரு பெரியவர் – வயல் வேலையை முடித்து வருபவர் போலும்! அடையாள அட்டை கேட்கப்பட்டது அடையாள அட்டையை எடுத்துக் கொடுத்தார். அடுத்தாக அவர் கேட்ட கேள்வி படையினரின் பெயரை "அறியாமை காப்பவர்கள்" என மாற்றப் போதுமானது. வேறொன்றுமல்ல; 12 எண்கள் கொண்ட அடையாள அட்டையின் இலக்கங்களைச் சொல்லுமாறு பணிக்கப்பட்டார். வேலைக் களைப்போடு திரும்பிய மனிதனுக்கு எப்படி இருக்கும்? சரமாரியாகத் திட்டல் மழை பொழிந்தார். அமைதியின் காவலருக்கே ஆவேசம் வந்துவிட்டது. "Translate This" என்று ஒரு இளைஞனுக்குக் கட்டளையிட்டார். அவ்விளைஞன் "I don't know English" என்றான். "அப்போ நீ பேசியது...? அதுதான் ஆங்கிலம்..." படுகொச்சையான ஆங்கிலப் பதப்பிரயோகத்துடன், இளைஞனின் வயிற்றில் சப்பாத்துக் காலால் மிகக் கடுமையாக அமைதி நிலைநிறுத்தப்பட்டது. காந்தியின் சீடரின் அரசல்லவோ! முதியோர் வதை வேண்டாம் எனத் தீர்மானித்துள்ளனர் போலும்! நினைக்க எனக்குச் சிரிப்பு வந்தது. இந்தக் கூத்தை தூர இருந்து அவதானித்த அமைதிப்படைத் தலைவர் நெருங்கி வந்து, எல்லோர் முகத்தையும் ஆராயத் தொடங்கினார்.

எனது முறை வருமுன்னாலே அத் தர்மதேவன் சிலருக்கு விடுதலை வழங்கினார். சிலரை ஓரமாகச் சென்று உட்காரும்படி கட்டளையிட்டார். என்னை ஏற இறங்கக் கண்களால் அளவிட்டார். ஆங்கிலத்தில், "நீயொரு புலியைப் போல உடையணிந்திருக்கிறாய்" என முணுமுணுத்தார். உள்ளே வரும்படி கட்டளையிட்டுவிட்டு முன் நடக்க, பலியாடாகத் தொடர்ந்தேன். சக மண்ணின்மைந்தர்கள் அநுதாபமாக என்னை ஏறிடவும், நெஞ்சு முழுவதும் அச்சம் வியாபிக்க, கால்கள் ஏனோதானோவென அசைந்தன. நான் தயாராக வைத்திருந்த எனது தேசிய மற்றும் சென்னைக் கல்லூரியின் அடையாள அட்டைகளை நீட்டினேன். வாங்கி ஆராய்ந்தவர் தேசிய அடையாள அட்டையைத் தூக்கிப் பிடித்து, "இது போலி" என உறுமினார். பின் இரண்டையுமே அருகில் நின்ற ஜீப்பொன்றின் "போனட்"டில் போட்டுவிட்டு, சாவதானமாகத் தேநீரைச் சுவைக்க ஆரம்பித்தார்.

சிறிய இடைவெளியின் பின்னால் நானும் ஆங்கிலத்தில். "நான் இந்தியாவில் தமிழ்நாட்டில் கல்வி பயிலுமொரு மாணவன்" எனக் கூறினேன்.

"என்ன படிக்கின்றாய்?" கேள்வி தெறித்தது.

"இளநிலை வர்த்தகப் பட்டப் படிப்பு"

"உனது பாடத்திட்டத்தைச் சொல்?"

நான் துணுக்குற, "நான் எனது வர்த்தக முதுநிலைப் பட்டப் படிப்பை பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் முடித்தவன் ஆகையால் நீ சொல்" என்றார்.

சொல்லி நான் முடிக்க, அவன் ஒரு சிறு இராஜநடை போட்டான். திரும்பி மீண்டும், "நான், நீ படிப்பதனை ஏற்றுக்கொள்கிறேன். உனது பட்டப்படிப்புக்கு முன்னால் புலியின் ஆயுதப் பயிற்சி பெற்றுக்கொண்டதனை ஏன் மறைக்கின்றாய்?"

நான் திகைத்துப்போனேன், ஒருவாறாக நான் 10 ஆவது வரை அருகிலுள்ள மகா வித்தியாலயத்தில் ஒப்பேற்றியதை, பின் 1983 இறுதியிலேயே இந்தியா சென்று உயர் நிலைப்பள்ளிப் படிப்பை முடித்ததை அவனுக்கு விளக்கினேன்.

"நான் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுகின்றேன். உனது ஊரிலே புலி நடமாட்டம் எப்படி?"

நான் துணுக்குற்று, ஊருக்கு வந்து இரண்டு கிழமைகளே ஆனமையால் நானறியேன் ஏதும் பராபரமே எனத் தாள் பணிந்தேன்.

"ஆகா! அவ்வாறாயின் நீ புலி."

என்னை மீறி எனது கால் கைகள் படபடக்க ஆரம்பித்தன. படிப்பறிவும் சரளமான உளவறிவும் வாய்க்கப்பெற்ற இந்த அதி காரி, மறுபுறத்தில் ஒரு தரங்கெட்ட மூன்றாந்தர அணுகுமுறை களையும் கையாளக்கூடிய இராணுவத்தினனே என்பதை உணர்ந்துகொண்டேன். மீண்டும் "நீ புலியேதான்... உன தூரிலே இன்னமும் புலிகளுண்டு... நீ மனம் வைத்தால் மார்க்கமுண்டு."

நான் பணிவாக "இல்லை ஐயா, நான் ஒரு இலங்கை அரச சேவகரின் பிள்ளை. கல்வியென்றுதான் எனது நோக்கம்" என வலியுறுத்த, அவன் தடாலெனச் சிநேகபூர்வமானான்.

"சரி, என்னோடு வந்து ஒரு கம்பெனி கொடு..."

"இல்லை ஐயா, எனது குடும்பத்தினர் மத நம்பிக்கை மிகுந் தோர்."

"அவ்வாறாயின் நீ புலி... புலிதான் மதுபானம் அருந்தாது" என அமைதிப்படைத் தளபதி கத்தினார்.

இவ்வாறாக நாடாகம் நீண்டது. அறுதியில், "தொலைபயலே... இந்தியா செல்ல முன் வந்து உனது கல்லூரி அடையாள அட்டையைப் பெற்றுக்கொள். நான் கொஞ்சம் சென்னையைத் தொடர்பு கொண்டு விசாரிக்க வேண்டும்."

நான் வீடு திரும்புகையில் உடைகள் யாவும் வேர்வையில் நனைந்திருந்தன. வீட்டுக்குப் போய் அம்மாவிடம் மெல்ல விசயத்தைச் சொன்னேன்.

"நல்லகாலம் கடவுள் காப்பாற்றியது. நாளைக்கே கொழும்புக்குப் போயிடு."

சொன்ன அம்மாவை முறைத்தேன். அம்மா குரல்தளதளக்க, நாலுவருசத்துக்குப் பிறகு வந்து நீ அடிவாங்க... நீ எந்த முகாமிலையெண்டு நாங்கள் தேடியலைய..."

அம்மா இப்போது அழவே தொடங்கிவிட்டார்.

தூங்கலாமெனச் சரிந்தேன். பட்டகாயமொன்றின் ரணம் கிளறப்பட மேலும் மேலும் யாரோ கிண்டுவதைப் போலத் தலை வலித்தது. சிறைக்கொட்டடியில் அண்ணர் சொன்னது நினைவில் உறுத்தியது "இந்த அடி வாங்கிய பின் இனியென்ன வெளிநாடு..." ஏதோவொரு திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் வருவது போல, பச்சைநிற வண்டிகள் படையெடுத்து வீட்டைச் சூழ்ந்ததாகப் பிரமை தோன்றியது. அம்மாவின் நிம்மதிக்காகவேனும் நாளை கொழும்பு போவதே உசிதமென்று தோன்றியது. தொலைவில் சில வேட்டொலிகள் கேட்டது.

"கிழக்குப் பக்கமாத்தான் கேட்குது. நாளைக்கு அந்த இடம் அவ்வளவுதான்."

எழுந்து யன்னம் பக்கம் போய் அம்மா பார்த்தார். அமைதி காக்கும் சிறு கும்பலொன்று ஒழுங்கையில் அலங்க மலங்க விழித்தபடி நடை போட்டுக்கொண்டிருந்தது!

– தமிழீழம் – ஆவணி 1989


# ஈழப்போர் இலக்கியத்தில் முள்ளிவாய்க்கால் அவலம்!

மே 17, 2023

***சர்வதேச வரலாற்றில் ஈழத்தமிழரின் தனித்துவமான இலக்கியமாக உலகளாவிய தமிழ் இலக்கியப் படைப்புக்களில், நின்று நிலைத்திருக்கப்போகும் வலிமைபெற்ற போரியல் இலக்கியத்தின் நீட்சி இன்னமும் தொடர்கிறது.***

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத்தில் வெளியான அனைத்து இலக்கியப் படைப்புக்களும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத்தின் வலிகள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளிகளின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மையையும் இழிவுபடுத்தும் சித்திரவதை என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன.

**1956 சிங்களம் அரசு மொழி :**



பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு பிறகு இலங்கை சுதந்திரத்தின் பின்னர், சின்னஞ்சிறு மாங்காய்த் தீவில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த கால கட்டத்தின் தமிழர்களின் அடையாள அரசியல் என்பது இலக்கியம், கவிதைகளின் மூலம் தெறித்து வந்தது. மேலும் முற்போக்கு சார்ந்த இலக்கியங்கள் ஏராளமாக வரத்தொடங்கின. இந்த இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை உள்ளடக்கியும் இருந்தன. இந்த காலகட்டத்தில் வந்த இலக்கிய படைப்புகள் இலங்கை தமிழ்ச் சூழலில் பெரிய வெளிச்சத்தை மக்களுக்கு ஏற்படுத்தின என்றும் கூறலாம்.

குறிப்பாக 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் இலக்கிய போக்குகளில் பல மாற்றம் அடைந்திருக்கின்றன. தமிழரின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் சென்ற தமிழ் அரசியல்வாதிகள் சாத்விகப் போராட்டங்களின் வழியாக அடக்குமுறைகளுக்குத் தீர்வுகாண முயன்று தோல்வி கண்டமை வரலாறாகி விட்டது. இலங்கையில் தமிழரின் விடுதலைப் போராட்டம் சாத்வீகப் போராட்ட நிலையிலிருந்து ஆயுதப் போராட்டமுறைக்குப் பரிணாம வளர்ச்சி பெற்ற எழுபதுகளின் இறுதிப்பகுதிகளிலேயே போரியல் சார்ந்த நூல்கள் ஆங்காங்கே வெளிவர ஆரம்பித்து விட்டன.

1956 இல் சிங்களம் மட்டுமே அரசு மொழி என்ற சட்டத்தை அரசு கொண்டுவந்தபோது அரசியல், மொழி சார்ந்து தமிழர்கள் தமிழ் மொழியை பாதுக்காக்க எதிர்வினையாற்றும் நிலையும் ஏற்பட்டது. அதனாலேயே போர்க்கால இலக்கியத்தில் அரசியல் மிக முக்கியமான விடயமாக எழுந்தது. இவ் அரசியலை அடியொற்றிதான் ஈழத்து தமிழ் இலக்கியங்கள் பல்வேறு தளங்களில் நிகழ்ந்திருக்கிறது.

**யாழ் தமிழாராய்ச்சி மாநாடு 1974:**

1974ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாளில் பதினொரு அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்ப்பலியுடன் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கெதிராக விடுத்த வெளிப்படையான அச்சுறுத்தலானது, கல்வித்துறையின் திட்டமிட்ட தரப்படுத்தல்களால் எதிர்காலத்தையே இழந்துநின்ற தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தின்பால் தள்ளியது.

இலங்கை அரசுகள் கொண்டு வரும் கொடூர சட்டங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. 1980 ஆண்டுக்கு பிறகு போர் சூழல் குறித்த இலக்கியங்கள் ஏராளமாக வந்தன. போர் அவலம் என்பது 30 ஆண்டுகாலமாக தவிர்க்க முடியாததாக இருந்தது. இந்த கால கட்டத்தில் ஏராளமான ஆண், பெண் படைப்பாளர்கள் உருவாகி போர் சூழல், தமிழ் மக்களின் துயரம் குறித்த படைப்புகளை உருவாக்கினர். போரில் ஈடுபட்டவர்களும், போரை வெளியில் நின்று பார்த்தவர்களும் ஏராளமான புதிய படைப்புகளை உருவாக்கினர். போருக்குப் பிறகு இப்போது ஏராளமான புலம் பெயர் இலக்கியங்கள் உருவாகின.

**திட்டமிட்ட இனப் படுகொலைகள்:**

தொடர்ந்து சிங்கள அரசியல்வாதிகளால் 1977, 1983 ஆண்டுகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக்கலவர வன்முறைகளும் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைக்கான அவசியத்தையும் தனி நாடு ஒன்றிற்கான தேவையையும் வலியுறுத்தின. இந்த காலகட்ட போராட்ட வாழ்வே ஈழ இலக்கியப் படைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் என்றும் கருத இடமுண்டு.


1981இல் யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாணப் பொது நூலகம், ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய தமிழரின் அறிவியல், ஊடகவியல் நிறுவனங்களை சிங்கள அரசின் கூலிப்படைகளால் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட சம்பவமானது, அதுவரை காலமும் கொரில்லாப் போராட்டமுறைகளை இளைஞர்கள் மட்டுமே பங்கேற்றி வந்த சூழல் மாறி, அறிவுசார் புத்திஜீவிகளையும் விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்த்தது.

**1981 யாழ் நூலகம் எரிப்பு :**

ஈழ ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாக பல நூல்கள் ஆரம்பகாலத்தில் வெளிவந்திருந்தன. பண்டிதர் க.பொ.இரத்தினம், கவிஞர் காசி ஆனந்தன் போன்றேரின் விடுதலை உணர்ச்சிமிக்க படைப்புகளை சுதந்திரன், தீப்பொறி போன்ற அரசியல் ஏடுகள் எழுபதுகளில் தாங்கி வந்தன.

சிறீலங்கா அரசின் பாரிய வன்முறை கெடுபிடிகளுக்கு மத்தியில் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பிரசுரங்களை தாயக மண்ணில் வெளிப்படையாக அச்சிட முடியாத நிலை அக்காலத்தில் காணப்பட்டது.


அத்துடன் ஆரம்பகால விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு போராட்ட அமைப்புக்களும் தமது தளங்களை தமிழகத்திலும் கொண்டியங்கியதால் அக்காலகட்ட வெளியீடுகள் அதிகளவில் தமிழகத்தில் அச்சிடப்பெற்று, தாயகத்துக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன.




அதேவேளை இனவிடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த துணிச்சலுடன் முன்வந்த பல ஈழத்துப் படைப்பாளிகளும் அந்நாட்களில் புனைபெயரினுள் மறைந்திருந்தே இத்தகைய இலக்கியங்களைப் படைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது என்பதும் உண்மையே.

**மரணத்துள் வாழ்வோம் :**

1985இல் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற பெயரில் உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராஜன் ஆகிய நால்வரும் தொகுத்து ஒரு போரியல் கவிதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார்கள். முதலில் யாழ்ப்பாணம் தமிழியல் வெளியீடாகவும், பின்னர் கோவை விடியல் பதிப்பகத்தின் வாயிலாக உப்பிலிபாளையத்திலிருந்து 2வது பதிப்பாக டிசம்பர் 1996 இலும் இந்த நூல் 170 பக்கங்களில் வெளிவந்திருந்தது.




ஈழத்தின் 31 இளம் கவிஞர்களின் 82 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். சமகால ஈழத்து இனப் பிரச்சினையைப் பகைப்புலமாகக் கொண்ட இக் கவிதைத் தொகுப்பில் மூன்று பெண் கவிஞர்களின் பெண்நிலைப்பட்ட அநுபவங்கள் உயிர்த்துடிப்புடன் வந்துள்ளமையும் சிறப்பம்சமாகும்.


இந்த போராட்ட இலக்கியங்கள் வாழ்விடத்தை தொலைத்த அவலத்தையும், மக்கள் படும் துயரத்தையும் முன்னிறுத்தி இந்தப் படைப்புகள் உருவாகி வெளிவந்தன.

பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணம் நங்கூரம் வெளியீடாக, பங்குனி 2005இல் வெளியானது. இத்தொகுப்பில், வெளிச்சம் இதழில் கார்த்திகை 1993இல் வெளிவந்த "தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே" என்ற கவிதையில் தொடங்கி, வெளிச்சம் சஞ்சிகையின் மாசி 2005இல் வெளியான "இருந்ததும் இல்லையென்றானதும்" என்ற கவிதை வரை 12 ஆண்டுகளில் கவிஞர் புதுவை இயற்றிய மொத்தம் 155 கவிதைகள் இடம் பிடித்திருக்கின்றன.

ஈழத்தின் போர்க்கால கவிதைத்துறையில் நினைவுகொள்ளத் தக்க மற்றொரு கவிஞர் மறைந்த கி.பி.அரவிந்தன் ஆவார். பிரான்ஸ் தேசத்தில் புலம் பெயர்ந்து, வாழ்ந்து காலமான இவர் ஈழப் போராட்டத்தில் விடுதலைப் போராளியாக இருந்தவர்.

இவரது படைப்புக்களில் ஈழவிடுதலைப் போராட்டமும், ஈழத் தமிழரின் புகலிட வாழ்வியலும் முனைப்புடன் காணப்படுகின்றன. மூன்று படைப்புக்களை தமிழகத்திலிருந்து வெளியீடு செய்தவர் இவர். இனி ஒரு வைகறை அவர் எழுதிய முதலாவது கவிதைத் தொகுப்பாகும்.

1992 இல் வெளியான முகம்கொள் கி.பி.அரவிந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு ஆகும். கனவின் மீதி. இவரது மூன்றாவது கவிதைத் தொகுதியாகும். கி.பி.அரவிந்தனின் கவிதைகள் வரலாற்று அனுபவங்களில் தோய்ந்து எழுந்தவை




மட்டுமல்ல, அவ்வனுபவங்கள் அலாதியான ஒரு கற்பனைத் திறத்தால் பளிங்கு போன்றதொரு தெளிவான மொழியால் சீரமைக்கப்பட்டு பண்படுத்தப்பட்டு கவிதைகளாக வார்த் தெடுக்கப் பட்டுள்ளன எனக்கூறலாம்.

**புதுவை இரத்தினதுரை கவியுகம்:**


கவிஞர் புதுவை இரத்தினதுரை 'வியாசன்' என்ற புனைபெயரில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு "வியாசனின் உலைக்களம்" எனும் நூலாகும். போரியலையும் அது சார்ந்திருக்கும் அரசியலின் ஆழப்பாடுகளையும் சுழியோடி, நுகர்ந்து, மென்று விழுங்கி, அதை அக்கு வேறு ஆணி வேறாகத் தனது பேனா முனையால் உலைக்களத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

'செம்மணி'என்ற தலைப்பில் வெளியான நூலில் 24 கவிஞர் களின் கவிதைகள் வெளிச்சம் வெளியீடாக 1998 இல் யாழ்ப் பாணத்தில் இராணுவ முற்றுகையின் போது கடத்திச் செல்லப பட்டு காணாமற் போனோராக்கப்பட்டு வதையின் பின் புதைக் கப்பட்ட எம் உறவுகளுக்கான கவிதைகள் இவையாகும்.

சிங்கள இராணுவம் அப்பாவி மக்களை யாருங்காணாமற் பிடித்துச்சென்று படுகொலைசெய்து செம்மணியிற் புதைத்த வஞ்சகச்செயலை அம்பலப்படுத்தும் பதிவுகளாக இவை அமை கின்றன. செம்மணிப் புதைகுழிகள் எம்மக்களிடையே ஏற்படுத் திய கொதிப்புணர்வின் அடையாளமாகவே இக்கவிதைகள் அமைகின்றன.


**தீபச்செல்வன் போர் எதிர்ப்பு இலக்கியம்:**


முள்ளி வாய்க்கால் துயரத்தின் பின், ஈழத்துக் கவிஞரும், எழுத் தாளரும், சுயாதீன ஊடகவியலாளருமான தீபச்செல்வன் போர் முடிவின் பின்னரான முக்கியமான கவிதைகளை தொடர்ந்தும் எழுதிவருகிறார். ஈழநிலத்தின் வாழ்வை தன் கவிதைகளில் பதிவுசெய்யும் தீபச்செல்வன்மிக இளம் வயதிலேயே பரவலாக அறியப்பட்ட இவர் சமகாலத்தின் மிக வலிமையுடைய குரலாக கருதப்படுகிறார்.











2011 - இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் நெருக்கடிச் சூழலில் செய்தித் தேடலுக்கான சிறந்த ஊடகவிலாயளருக்கான பேராசிரியர் கைலாசபதி விருதையும், 2014 - இலங்கை பத் திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங் கம் இணைந்து வழங்கும் நெருக்கடிச் சூழலில் இயங் கியமைக் கான 2014 ஆம் ஆண்டின் சிறந்த ஊடகவியலாளர் விருதை யும் பெற்ற தீபச்செல்வன் சாட்சிகளற்ற போரின் மனச் சாட் சிகளாக தீபச்செல்வனின் கவிதைகள் பரணமிக்கின்றன.

நன்றி: நவீனன்






# 2024



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

## தொடர்புகளுக்கு 437.345.4203

# தையிட்டி விகாரைதான் கடைசியா?

30.05.2023



தையிட்டி விகாரை திறக்கப்பட்டுவிட்டது. நிலத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் ஒரு தரப்பு இதுபோன்ற விடயங்களைச் செய்ய முடியும். அந்த விகாரை விவகாரத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். அதேசமயம் அந்த விவகாரமானது தமிழரசியலின் இயலாமையை நிரூபிக்கும் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டுகளில் ஒன்று.

அந்த விகாரை ஒரு விவகாரமாக மாறிய பின் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்திருந்தார். அதன்போது அஸ்திரிய பீடாதிபதி அவரிடம் கையளித்த எழுத்து மூல ஆவணம் ஒன்றின் மொழிபெயர்ப்பு தமிழில் ஊடகங்களில் வெளிவந்தது. அதி, அஸ்கிரிய பீடாதிபதி முக்கியமான சில விடயங்களை அழுத்திக் கேட்டிருக்கிறார். “வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள வரலாற்று சிறப்புமிக்க வணக்கஸ்தலங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்” என்று அவர் கேட்டிருக்கிறார்.

அந்தச் சந்திப்பு நிகழ்வதற்கு கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கு முன் இம்மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதி தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அதில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளரும் அழைக்கப்பட்டிருந்தார். அச்சந்திப்பில் தொல்லியல் திணைக்களத் தலைவர், திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட மேலதிக நிதியை வெளித்தரப்புகளிடமிருந்து குறிப்பாக பௌத்த மத குருக்களிடமிருந்து பெறுவதாகக் கூறியிருக்கிறார். ஜனாதிபதி அதனை எதிர்த்துக் கேள்வி கேட்கின்றார். ஓர் அரச திணைக்களம் அவ்வாறு வெளியில் இருந்து நிதி உதவியைப் பெற முடியாது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அஸ்கிரிய பீடாதிபதி அவ்வாறு நிதி உதவி பெறுவதை அனுமதிக்குமாறு தனது கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

அதாவது சக்திமிக்க பௌத்த மத பீடங்களில் ஒன்று சிங்கள பௌத்த மயமாக்கலை ஊக்குவிக்கும் விதத்தில் ஜனாதிபதிக்கு எழுத்துமூல ஆவணம் ஒன்றை வழங்கியிருக்கிறது. அதேசமயம் உயர் மட்டத்தில் இல்லாத சில பௌத்த மதகுருக்கள் தையிட்டி விவகாரம் தொடர்பாக தமிழிலும் சிங்களத்திலும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் நயினா தீவு விகாரதிபதியின் கருத்துக்கள் சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் சொல்லப்பட வேண்டியவை.

இலங்கைத்தீவில் மத நல்லிணக்கத்தை பொறுத்தவரை அது பெரும்பான்மையிடமிருந்துதான் தொடங்க வேண்டும். தென்னிலங்கையில் அது சிங்கள பௌத்தர்களிடமிருந்து தொடங்க வேண்டும். தமிழ்ப்பகுதிகளில் அது இந்துக்களிடமிருந்து தொடங்க வேண்டும். ஆனால், அதேசமயம் மேற்படி பௌத்த மதகுருக்களில் ஒருவரான பொகவந்தலாவை ராகுல தேரர் தமிழ் பௌத்தர்களைப் பற்றிக் கதைக்கின்றார். தையிட்டி திஸ்ஸ விகாரை தமிழ் பௌத்தர்களிடம் கையளிக்கப்படும் என்று கூறுகிறார். தமிழ் பௌத்தம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு கட்டம். ஆனால் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் யாழ்ப்பாணத்தில் எத்தனை பேர் உண்டு?

சாதாரண தமிழ் மக்களைப் பொறுத்தவரை பௌத்தம் என்பது ஆக்கிரமிப்பின் குறியீடாகவே பார்க்கப்படுகின்றது. தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் ஒரு காலகட்டத்தில் பௌத்தர்களாக



இருந்திருக்கிறார்கள் என்பது ஒரு வரலாற்று உண்மை. இந்தியாவில் தோன்றிய பௌத்தம் ஆசியா முழுவதும் பரவிய பொழுது அது தமிழ் மக்கள் மத்தியிலும் பரவியது. தமிழின் காப்பிய காலம் எனப்படுவது சமண பௌத்த காலம்தான். தமிழில் உள்ள ஐந்து காப்பியங்களும் ஒன்றில் பௌத்த காப்பியங்கள் அல்லது சமண காப்பியங்கள்தான். பின்னர் நாயன்மார்களின் எழுச்சியோடு சைவம் பௌத்தத்தை வெற்றி கொண்டது. மதங்களுக்கிடையிலான பூசல்களும், அனல் வாதம் புனல் வாதம் போன்றவற்றில் பிற மதத்தவர்களை வென்றதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி. அதுபோலவே தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறியதும் இஸ்லாமியர்களாக மதம் மாறியதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி.

தமிழ் அடையாளம் ஒரு மதத்துக்கு மட்டும் உரியதல்ல என்று அறிஞர்கள் கூறுவர். பூர்வ காலங்களில் தமிழர்கள் இயற்கையை வழிபட்டார்கள். அதன்பின் சமணமும் பௌத்தமும் தமிழ்மக்கள் மத்தியில் பரவின. அதன்பின் பக்தி இலக்கியம். அதன் பின் கிறிஸ்தவம், இஸ்லாம். அதன்பின் ஈழத்தில் ஆயுதப் போராட்டமும் அதன் விளைவாக ஏற்பட்ட புலப்பெயர்ச்சியும். இப்படியாக பூர்வ காலங்களில் தொடங்கி இன்று வரையிலும் தமிழ் அடையாளத்தை வெவ்வேறு மதங்கள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு கோட்பாடுகள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு நம்பிக்கைகள் செதுக்கியிருக்கின்றன. ஈழப் போராட்டம் செதுக்கியது. புலப்பெயர்ச்சி செதுக்கியது. புலப்பெயர்ச்சி தமிழர்களை தாயகத்துக்கு வெளியே சிதறடித்து விட்டது. அதனால், தமிழ் அடையாளம் எனப்படுவது சில அறிஞர்கள் சுட்டிக்காட்டுவதுபோல எல்லை கடந்த ஓர் அடையாளம். அது ஓர் அரசியல் எல்லைக்குள் குறுக்கப்பட முடியாத அனைத்துலக அடையாளம்.

குறிப்பாக கீழடி ஆய்வுகள் இந்திய வரலாற்றை தமிழில் இருந்து தொடங்கத் தேவையான சான்றுகளை வெளிக்கொண்டு வருவதாக அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். எனவே தமிழர்கள் தமது மொழியின் தொன்மை மற்றும் அனைத்துலக இருப்பைக் குறித்துப் பெருமைப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஒரு காலம் தமிழில் பௌத்தம் நிலவியது என்பது வரலாற்று உண்மை.

ஆனால் பௌத்தம் ஒரு மதமாக இருக்கும் வரை பிரச்சனை இல்லை. அது ஒரு இனத்தின் ஆக் கிரமிப்புத் தத்துவமாக, ஆக்கிரமிப்பின் கருவி யாக மாறும் பொழுதுதான் பிரச்சினையே வரு கிறது. இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையே அதுதான். மதம் மொழி இனம் நிலம் ஆகியவற்றை இணைத்து உருவாக் கப்பட்ட “தம்மதுவீப “ கோட்பாடு அதுவென்று மு. திருநாவுக்கரசு கூறுகிறார்.

சிங்கள பௌத்தம் ஓர் ஆக்கிரமிப்புக் கொள்கையாக மாறிய பின் அது தமிழ் பௌத்தத்தை கையில் எடுத்தால் அதுவும் ஓர் ஆக்கிரமிப்பு உத்தி என்றுதான் தமிழ்மக்கள் பார்ப்பார்கள். சிங்கள பௌத்தமானது ஏனைய மதங்களின் இருப்பை அங்கீகரிக்குமாக இருந்தால் குறிப்பாக யாப்பில் இப்பொழுது சிங்கள பௌத்தத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் முன்னுரிமையை நீக்கி இலங்கைத்தீவின் மதப்பல்வகைமையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கச் சிங்கள அரசியல்வாதிகள் தயாரா? இங்கு பிரச்சனை மதப்பல்வகைமை அல்ல மத மேலாண்மைதான். சிங்கள பௌத்தம் ஒரு மத மேலாண்மைக் கோட்பாடு என்பதுதான்.

ஆதித் தமிழ் பௌத்தர்கள் பெருமளவுக்கு மகாயான பௌத்தத்தை சேர்ந்தவர்கள் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதேசமயம் சிங்கள பௌத்தர்கள் தாங்கள் பின்பற்றுவது தேரவாத பௌத்தம் என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் தென்னிலங்கையில் பிரயோகத்தில் இருப்பது மகாயான பௌத்தந்தான் என்று பேராசிரியர் கணணாத் ஒபயசேகர கூறுகிறார். தேரவாத பௌத்தத்துக்கும் மகாயான பௌத்தத்துக்கும் இடையிலான முரண்பாடுகளின்போது இலங்கை வரலாற்றில் மன்னர்களின் காலத்தில் கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. மகாயான பௌத்தம் அதிகம் இந்து மதப் பண்புகளை உள்வாங்கியது என்றும், இலங்கைத்தீவில் உள்ள மகாயான, தேரவாத பௌத்த பிரிவுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை இன ரீதியாகவும் வியாக்கியானம் செய்யலாம் என்றும் கூறும் அறிஞர்கள் உண்டு.

இவ்வாறான அரசியல், பொருளாதார,இராணுவ,மத கலாச்சாரப் பின்னணிக்குள் சில பௌத்த மத குருக்கள் தமிழ் பௌத்தத்தைப் பற்றிக் கதைப்பதனை தமிழ் மக்கள் சந்தேகத்தோடுதான் பார்ப்பார்கள். மேற்படி பிக்கு கூறுகிறார் கட்டப்பட்ட விகாரைகளை இடிக்க முடியாது என்று. ஒரு நிலத்தை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு அதில் விகாரைகளைக் கட்டிவிட்டு அதன் பின் விகாரைகளை இடித்தால் அது மத நல்லிணக்கத்தை குழப்பி விடும் என்று கூறுவது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் ஒரு தர்க்கம்தான். தையிட்டியில் மட்டுமல்ல தமிழ் பகுதிகளில் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் ஒரு சமூகமாக இல்லை. தமிழ்ப் பகுதிகளில் சிங்கள பௌத்தர்களான படைத்தரப்புத்தான் ஆயுதங்களோடு குந்தியிருக்கின்றது. தமிழ்மக்கள் அவர்களை ஆக்கிரமிப்பு படையாகத்தான் பார்க்கின்றார். ஒரு மதத்தின், ஒரு இனத்தின் மேலாண்மையை பாதுகாக்கும் ஒரு படையாகத்தான் பார்க்கின்றார்கள். இன, மதப் பல்வமையைப் பாதுகாக்கும் ஒரு படையாகப் பார்க்கவில்லை. எனவே இந்த நாடு இன மதப் பல்கைமையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கட்டும். அப்பொழுது தமிழ் பௌத்தம் ஒரு பிரச்சினையே இல்லை.

இப்பொழுது மீண்டும் தையிட்டி விகாரைக்கு வருவோம். இந்த விடயத்தில் மேற்சொன்ன சில அதிகாரமற்ற பிக்குக்கள் சொல்லும் கருத்துக்களை விடவும் அதிகாரம்மிக்க அஸ்கிரிய பீடாதிபதியின் கருத்துக்களே அரசியல் பரிமாணமுடையவை. அப்படிப் பார்த்தால் தாமரை மொட்டு கட்சியின் பிரதிநிதியாகக் காணப்படும் ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்து சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்புக்களே தெரிகின்றன.

அடுத்த ஆண்டு இறுதியில் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அப்பொழுது எதிரணியின் ஒரு பொது வேட்பாளராக சம்பிக்க ரணவக்க நிறுத்தப்படலாம் என்ற ஊகங்கள் உண்டு. சம்பிக்க சிங்கள பௌத்தர்களைக் கவரக்கூடியவர். அதேசமயம் அரகலய போராட்டத்தின் பங்காளிகளிலும் ஒருவர். எனவே அவரை எதிர்கொள்வது என்றால் ரணில் விக்கிரமசிங்க சிங்கள பௌத்தர்களைக் கவரவேண்டும். அதோடு ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளை ஏற்பதால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய எதிர்ப்பலைகளைத் திசை திருப்பவும் அது உதவும்.

அதாவது அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நோக்கித்தான் அவர் உழைக்கின்றார். சிங்கள பௌத்தத்தின் காவலனாக அவர் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மேற்கத்தைய உடுப்புகளையணிந்து, மேற்கத்திய பாரம்பரியத்தைப் பின்பற்றும் ரணில், பாரம்பரிய உடையணிந்து சிங்கள பௌத்த கடும் போக்காளர்களைப் பிரதிபலிக்கும் சம்பிக்க ரணவக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். அதற்கு ஒரே வழி சிங்கள பௌத்தர்களைத் திருப்திப்படுத்துவதுதான். அப்படிப்பார்த்தால் தையிட்டி விகாரை இறுதியானது அல்ல என்று எடுத்துக் கொள்ளலாமா?

நன்றி: நிலாந்தன்


49ஆம் ஆண்டு
வீரவணக்கம்
தமிழீழ மாணவர் எழுச்சி நாள்
[06.06.2023]
ஈகியர் பொன். சிவகுமாரன்
பொன்னுத்துரை சிவகுமாரன்
(26.08.1950 - 05.06.1974)
உருப்பிராய், தமிழீழம்.
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்